# உதயன்



23

www.onlineuthayan.com

28பக்கங்கள் சுடர் 28 கதிர் 043 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 24 செவ்வாய்க்கிழமை (08/01/2013) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00


## கல்விச் செயற்பாடுகள் இன்று யாழ்.பல்கலையில் ஆரம்பம்

### கைதான மாணவர்கள் விடுவிக்கப்படவில்லை

யாழ்ப்பாணம்,ஜன.8

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள நான்கு மாணவர்களும் இன்னும் விடுவிக்கப்படாத நிலையில் யாழ். பல்கலைக்கழகத்தின் கல்விச் செயற்பாடுகள் இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்படும் என்று பல்கலைக்கழகப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக அனைத்துப் பீடங்களுக்குமான கல்விச் செயற்பாடுகளை ஆரம்பிப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது. பல்கலைக்கழக துணைவேந்தர் செல்வி வசந்தி அரசரட்ணம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் அனைத்துப் பீடங்களின் மாண

பார்க்க பக்கம் 4

# நல்லிணக்கத்துக்கு நடவடிக்கை இலங்கையிடம் துளியும் இல்லை

### கொழும்பில் வைத்து கனேடிய அமைச்சர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன.8

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் அதிகளவில் இடம்பெறுகின்றன என்றும் போரின் பின்னர் நல்லிணக்க நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் இலங்கை வந்துள்ள கனேடிய குடியுரிமை, குடிவரவு மற்றும் பல்லின கலாசார அமைச்சர் ஜேசன் ஜெனி நேற்றுப் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டினார்.

மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்த இலங்கை அரசு உடன் விரைந்து நடவடிக்கை எடுக்காவிட்டால், இவ்வருடம் நவம்பரில் இலங்கையில் இடம்பெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில்



கலந்துகொள்வது குறித்து கனடா மீள்பரிசீலனை செய்ய வேண்டிய நிலை ஏற்படும் என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் அவர் நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்து உரையாற்றும் போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:- பார்க்க பக்கம் 4

# நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் விசாரணை அறிக்கை வலுவற்றது

## மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று அதிரடித் தீர்ப்பு

கொழும்பு, ஜனவரி 8

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப் பிரேரணையை விசாரணை செய்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் விசாரணை அறிக்கை செல்லுபடியற்றது என மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது.

அத்துடன், இது விடயம் தொடர்பில் பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவால் கோரப்பட்டிருந்த எழுத்தாணையையும் மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று பிறப்பித்தது.

தமக்கு எதிரான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் விசாரணை அறிக்கையின் நடைமுறைப்படுத்தலை இடைநிறுத்த உத்தரவிடுமாறு கோரிப் பிரதம நீதியரசரால் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த 'ரிட்' மனு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஸ்ரீஸ்கந்தராஜா, ஏ. டபிள்யூ.ஏ சலாம், அனில் குணரட்ன ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த விசாரணை இடம்பெற்றது. அதன்போதே மேற்படி பரபரப்பான தீர்ப்பு அறிவிக்கப்பட்டது.

கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவால் தாக்கல் செய்யப்பட்டிருந்த 'ரிட்' மனு கடந்த 21 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, அந்த

பார்க்க பக்கம் 4

### கனேடிய அமைச்சரின் கருத்து பக்கச்சார்பானது

கொழும்பு, ஜன.8

கனேடிய குடிவரவு அமைச்சர் தெரிவித்துள்ள கருத்துக்கள் பக்கச்சார்பானவை. ஏற்றுக்கொள்ளமுடியாதவை என இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவரின் இந்தக் கருத்துக்கள் தமக்கு கவலை அளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை அரசு தீர்வில் அக்கறை காட்டவில்லை எனவும் நல்லிணக்கத்துக்கான நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை என்றும் இலங்கை வந்துள்ள கனேடிய குடிவரவு அமைச்சர் ஜேஸன் நேற்றுக் கொழும்பில் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டியிருந்தார்.

அவரது குற்றச்சாட்டை முழுமையாக மறுத்துள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர், கனேடிய அமைச்சரின் கருத்துக்கள் பக்கச்சார்பானவை - ஏற்றுக்கொள்ள முடியாதவை என்று கூறியுள்ளார். (த)

## தெரிவுக்குழு அறிக்கையை ஆராய நிபுணர்குழு நியமித்தார் மஹிந்த

### நேற்றிலிருந்து பணிகளும் ஆரம்பம்

கொழும்பு, ஜன.8

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான நாடாளுமன்றத் தெரிவுக்குழு விசாரணை அறிக்கை தொடர்பில் ஆராய்ந்து தமக்கு ஆலோசனை வழங்குவதற்கென நிபுணர்கள் அடங்கிய சுயாதீன விசாரணைக்குழுவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று நியமித்தார்.

மேற்படி ஜனாதிபதி விசாரணைக்குழு, நேற்றுமாலை முதல் தனது பணிகளை ஆரம்பித்து விட்டது என்று ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் மொஹான் சமரநாயக்க தெரிவித்தார்.

இதேவேளை, சிரேஷ்ட வங்கியாளர் ராணி ஜெயமாஹா, முன்னாள் நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் தம்மிக கித்துல்கொட மற்றும் சிவில் சமூகக் கட்டமைப்பு அதிகாரியான ஜீவன் தியாகராஜா உள்ளிட்டோரே ஜனாதிபதியின் சுயாதீனக் குழுவில் இடம்பெற்றுள்

பார்க்க பக்கம் 4




பிரதம நீதியரசர் மீதான மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்புக்கு அரசு தலைசாய்க்க வேண்டும் எனக் கோரி நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஜே.வி.பியின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

## ஜனாதிபதி மஹிந்த 2 நாள் குடாநாட்டில் பல்வேறு நிகழ்வுகளில் பங்குகொள்வார்

யாழ்ப்பாணம்,ஜன.8

தேசிய தைப்பொங்கல் விழாவிலும் பல்வேறு நிகழ்வுகளிலும் பங்கு பற்றுவதற்காக இரண்டு நாள் பயணமாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார்.

தைப்பொங்கல் தினமான எதிர்வரும் 14 ஆம் திகதி தேசிய தைப்பொங்கல் விழா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

தொடர்ந்து அன்று மாலை, யாழ். மாவட்ட செயலக முகாமைத்துவ மற்றும் திறன் விருத்தி பயிற்சி நிலையம் ஜனாதிபதியால் திறந்து வைக்கப்படும்.யாழ்.பழைய பூங்காவில் அமைக்கப்பட்ட புதிய கட்டடமே இவ்வாறு திறந்து வைக்கப்படவுள்ளது.

பார்க்க பக்கம் 4

### காணாமல்போன மீனவர் சடலமாக மீட்பு

வடமராட்சி, ஜன. 8

வடமராட்சிக் கடலில் மீன் பிடிக்கச் சென்று காணாமல் போன மீனவரின் சடலம் நேற்று செம்பியன்பற்று நயினாமுனை கரையோரத்தில் கரையொதுங்கியுள்ளது.

நேற்றுமுன்தினம் அதிகாலை கட்டு மரத்தில் கடற்றொழிலுக்கு சென்ற, வடமராட்சி கிழக்கு ஆழியவளையைச் சேர்ந்த மூன்று பெண்பிள்ளைகளின் தந்தையான மயில்

பார்க்க பக்கம் 4

## குற்றப் பிரேரணை விவாதத்துக்கு எதிர்க்கட்சிகள் கடும் ஆட்சேபம்

### கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நேற்று அதிரடி

கொழும்பு, ஜன.8

பிரதம நீதியரசருக்கு எதிரான நாடாளுமன்றத் தெரிவுக்குழு விசாரணை அறிக்கை மீதான விவாதம் தொடர்பில் அரசு தன்னிச்சையாகச் செயற்பட்டதால் நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்திலிருந்து ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. ஆகிய எதிர்க்கட்சிகள் வெளிநடப்புச் செய்தன.

பிரதம நீதியரசருக்கு எதிரான நாடாளுமன்றத் தெரிவுக்குழு அறிக்கை மீதான விவாதத் திகதி நிர்ணயம் உட்பட முக்கிய பல விடயங்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக கட்சித் தலை

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை, இந்திய மீனவர்களுக்கு ஆழ்கடல் தொழில் வசதியை ஏற்படுத்துக

## வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டமைப்பின் தலைவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.8

இந்திய, இலங்கை மீனவர்கள் ஒருவரை ஒருவர் தாக்கியோ, துன்புறுத்தியோ வெற்றி காண முடியாது.

இந்திய மீனவர்களின் அத்து மீறிய மீன்பிடி தொடர்பிலான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, இலங்கை- இந்திய அரசுகள் இரு பகுதி மீனவர்களுச்கும் ஆழ்கடலில் தொழிலில் ஈடுபடுவதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இந்தப் புதிய வருடத்தில் இதனை மேற்கொண்டு இந்திய-இலங்கை மீனவர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும். இவ்வாறு வடமாகாணக் கடற்றொழிலாளர்கள் கூட்டமைப்பின் தலைவர் எஸ்.தவரட்ணம் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எமது வடபகுதி மீனவர் சமூகத்தைப் பொறுத்தவரையில் கடந்த ஆண்டு ஒரு ஏமாற்றகரமான ஆண்டாகவே அமைந்திருந்தது.

இயற்கையும் ஒத்துழைக்காத காரணத்தால் மீன்பிடியில் ஈடுபட வேண்டிய காலத்திலும் மீன்பிடி நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியாமல் போய்விட்டன.

எமது வடபகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அனைத்து விதமான சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளையும் நிறுத்த வேண்டும். கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் இந்த விடயத்தில் இறுக்கமான போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும்.

எமது பிரதேசத்தில் இருந்து சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை ஒழிப்பதற்கு மேற்கொள்ளப்படும் சகலவிதமான நடவடிக்கைகளுக்கும் நாம் ஒத்துழைப்பு வழங்குவோம்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்கதையாகவே உள்ளன. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் இருபகுதி மீனவர்களும் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதாலேயே இந்தப் பிரச்சினை ஏற்படுகின்றது.

எனவே, இருநாட்டு அரசுகளும் கரையோர மீன்பிடியில் ஈடுபடுகின்ற மீனவர்களுக்கு ஆழ்கடல் மீன்பிடிக்குத் தேவையான வசதிகளை வழங்கினால் இந்தப் பிரச்சினையை தீர்க்க முடியும். ஆழ்கடல் மீன்பிடியை இருநாட்டு அரசுகளும் ஊக்குவிக்க வேண்டும்.

இந்தப் புதுவருடத்திலாவது அதனை மேற்கொண்டு இலங்கை-இந்திய மீனவர் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் - என்றார்.

(ம-5)

## தொலைத்தொடர்புக் கோபுரம் அமைப்பது இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜன.8

பிரதேச சபையின் அனுமதியில்லாது உரும்பிராயில் தொலைத்தொடர்புக் கோபுரம் அமைப்பதற்கு மேற்கொண்ட முயற்சியை பிரதேச சபைத் தலைவர் தடுத்து நிறுத்தினார். கோபுரம் அமைப்பதற்கு அந்தப் பகுதி மக்களும் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

உரும்பிராய்ச் சந்தியை அண்மித்து இந்தக் கோபுரம் அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. வலி.கிழக்குப் பிரதேச சபைக்குட்பட்ட இந்தப் பகுதியில் பிரதேச சபையின் அனுமதி பெறாது அதனை அமைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கு அந்தப் பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். இதனை எதிர்த்து நேற்று ஆர்ப்பாட்டமும் நடத்தினர். கடந்த சில நாள்களாக கோபுரம் அமைக்கும் பணியை நிறுவனத்தினர். ஒப்பந்தக்காரர் மூலம் முன்னெடுத்தனர்.

பொது மக்கள் அது பற்றி பிரதேச சபைத் தலைவர் அ. வசந்தகுமாருக்கு தெரிவித்தனர். அவர் தலைமையில் சம்பவ இடத்துக்குச் சென்ற பிரதேச சபையினர் இது தொடர்பில் விசாரித்தனர். தமது அனுமதி இல்லாமல் கோபுரம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படுகின்றமையால் அதனை உடனடியாக நிறுத்துமாறு உத்தரவிட்டார்.

சம்பந்தப்பட்ட தொலைத்தொடர்பு அலுவலகத்துடன் இது குறித்துத் தொடர்பு கொண்ட போது அவர்கள் தமக்கு எதுவும் தெரியாது என்று கூறியுள்ளனர். அனுமதியின்றித் தொலைத்தொடர்புக் கோபுரம் அமைக்கப்படுமாயின் சட்ட நடவடிக்கை மேற்கொள்வோம் என்று பிரதேச சபையினர் ஒப்பந்தக்காரர்களிடம் கூறினர். அதனையடுத்து ஒப்பந்தக்காரர்கள் அங்கிருந்து விலகிச் சென்றனர். அந்தப் பகுதியில் ஏற்கனவே ஒரு தொலைத்தொடர்புக் கோபுரம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த 4 11)

### உயிரைக் குடித்த காதல்

## பெண் கான்ஸ்டபிளை குத்திக் கொன்ற ஆண் கான்ஸ்டபிள் தற்கொலை முயற்சி

**கொழும்பு, புறக்கோட்டை மேம்பாலத்தடியில் நேற்று அதிகாலை ஆறு மணியளவில் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.**

கொழும்பு, ஜன.8

பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை அவரது காதலனான சக கான்ஸ்டபிள் ஒருவர் குத்திக் கொலை செய்துள்ளார். இருவருக்குமிடையே ஏற்பட்ட காதல் பிரச்சினையால், காதலியைக் குத்திக்கொலை செய்த சந்தேகநபரான கான்ஸ்டபிள், தற்கொலை செய்து கொள்ளும் நோக்கில் விஷம் அருந்திய நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப் பெற்று வருகின்றார்.

மேற்படி, சிகிச்சை பெற்றுவரும் கான்ஸ்டபிளான நிலன்த புஸ்பகுமாரவை தடுப்புக் காவலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் கனிஷ்க விஜேரட்ன உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பு, புறக்கோட்டை மேம்பாலத்தடியில் நேற்று அதிகாலை ஆறு மணியளவில் இந்தக் கொலைச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

புறக்கோட்டைப் பொலிஸாரின் விளையாட்டுப் பிரிவைச் சேர்ந்த பெண் பொலிஸ் கான்ஸ்டபிளான ஹேரத் புதியன்ஸிலாகே நதிஷாநி மதுபாஷினி சமரசிங்க (வயது - 26) என்ற பெண்ணே அவரது காதலனான சக கான்ஸ்டபிளால் குத்திக் கொலைசெய்யப்பட்டுள்ளார்.

தனது காதலியான பெண் பொலிஸ் கான்ஸ்டபிளை குத்திக்கொலை செய்த அவரது காதலன், சம்பவத்தின் பின்னர் தற்கொலை செய்துகொள்ளும் நோக்கில் விஷம் அருந்தியுள்ளார். விஷமருந்திய இவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்பவத்தில் கொலை செய்யப்பட்ட பெண் கான்ஸ்டபிள் பிபிலை பகுதியைச் சேர்ந்தவராவார். சந்தேகநபரான பொலிஸ் கான்ஸ்டபிள் மொனராகலை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுபவராவார்.

குறித்த கான்ஸ்டபிள் தனது தாயிற்கு சுகயீனம் எனக் கூறி விடுமுறை பெற்று, கடந்த 3ஆம் திகதி கொழும்பு வந்துள்ளார்.

இருவருக்குமிடையில் ஏற்பட்ட காதல் பிரச்சினையே இந்தக் கொலைக்குக் காரணம் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் கொலை செய்யப்பட்ட பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது. அத்துடன், நஞ்சருந்திய நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் குறித்த கான்ஸ்டபிளை தடுப்புக் காவலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் கனிஷ்க விஜேரட்ன உத்தரவிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கோட்டைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### யாழ். மாநகர சபை கீதத்தை மாற்ற முயற்சி

யாழ். மாநகர சபை கீதத்தை மாற்றும் முயற்சியில் மாநகர சபை ஆளும் தரப்பினர் ஈடுபட்டுள்ளனர். இதற்கென விசேட கூட்டம் ஒன்று நேற்று மாலை நடைபெற்றுள்ளது.

இதன்போது கீதத்தை மாற்றுவது தொடர்பில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளது. இதற்கு சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் அது தொடர்பான முடிவு பின்னர் எடுக்கப்படும் என மாநகரசபை முதல்வர் தெரிவித்துள்ளார்.

(ஐ-7)

### கோடா வைத்திருந்த பெண்ணுக்கு சிறை

15 லீற்றர் கோடா வைத்திருந்த குடும்பப்பெண்ணுக்கு ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அவர் அந்த அபராதத்தைச் செலுத்தத் தவறியதால் சிறைத் தண்டனை விதித்தது நீதிமன்று.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜ முன்னிலையில் இந்த வழக்கு நேற்று திங்கட்கிழமை விசாரணைக்கு வந்தது. ஊர்காவற்றுறைப் பொலிஸார் இந்த வழக்கைத்தாக்கல் செய்தனர். புங்குடுதீவைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தாய் ஒருவரே இந்தக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவராவார்.

(த-4)

## ஜனாதிபதிக்குப் படம் காட்ட 'யாழ்ப்பாணத்தின் அபிவிருத்தி'



ஜனாதிபதியின் யாழ்ப்பாண வருகையை முன்னிட்டு, அவர் பயணம் செய்யவுள்ள வீதிகளுக்குக் ''காப்பெற்'' இடப்படுவதுடன் பல அபிவிருத்தி வேலைகளும் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

இதேநேரத்தில் இந்த அபிவிருத்தி வேலைகள் உட்பட யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் பலவற்றை வீடியோ மூலம் படமாக்கும் பணிகளும் தடல்புடலாக நடைபெறுகின்றன.

தமிழர் திருநாளான தைப் பொங்கல் விழாவை முன்னிட்டு ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார். எதிர்வரும் 14 ஆம்,15 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் பல்வேறுபட்ட நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்காகவே அவர் இங்கு வருகிறார்.

ஜனாதிபதி பங்குபற்றவுள்ள நிகழ்வுகளுக்குச் செல்லும் வீதிகள் அனைத்தும் வேகமாக புனரமைக்கப்பட்டு வருகின்றன. ''காப்பெற்'' வீதிகளாகவே இவை மாற்றப்பட்டு வருகின்றன.

அத்துடன் இந்த அபிவிருத்தி நடவடிக்கைகள் உட்பட, யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பல அபிவிருத்தி நடவடிக்கைகளும் வீடியோ மூலம் படமாக்கப்படுகின்றன.

ஜனாதிபதி தலைமையில் இடம்பெறவுள்ள யாழ்மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் 'யாழ்ப்பாணத்தின் அபிவிருத்தி' என்னும் தலைப்பில் 15 நிமிடம் கொண்ட குறும்படம் ஒன்று காண்பிக்கப்படவுள்ளது.

இதற்காகவே யாழ்.மாவட்டத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி நடவடிக்கைகள் வீடியோ மூலம் படமாக்கப்பட்டு வருகின்றன.

பெரும்பாலான நடவடிக்கைகளில் இராணுவத்தினரே ஈடுபட்டுள்ளனர்.

(த 5)

# சட்டவிரோதமாக நுழையும் இலங்கையருக்கு இடமில்லை

### குடிவரவு அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஜன.8

லட்சக்கணக்கில் பணத்தைச் செலவழித்துக் கடத்தல்காரர்களை நம்பி சட்டவிரோதமான முறையில் கனடாவுக்குப் படகுகள் மூலம் நுழைய முயற்சிப்பதை இலங்கையர்கள் கைவிடவேண்டும்.

அந்த அபாயகரமான முயற்சியால் வருடாந்தம் சுமார் ஆயிரம் பேர்வரை மரணிக்கின்றனர். பலர் கடத்தல்காரர்களால் நட்டாற்றில் விடப்படுகின்றனர். சட்டவிரோதக் குடியேற்றவாசிகளுக்குக் கனடாவில் இடமில்லை. அவர்கள் பணத்தையும், உயிரையும் அநியாயமாக இழக்கின்றனர்.

- இவ்வாறு இலங்கை வந்துள்ள கனேடிய குடியுரிமை, குடிவரவு மற்றும் பல்லின கலாசார அமைச்சர் ஜேசன் ஜெனி நேற்றுக் கொழும்பில் ஊடகவியலாளர்களைச் சந்தித்து உரையாடியபோது தெரிவித்தார்.

அவர் இதுதொடர்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''கனடாவுக்குள் நுழைவதற்காக ஆட்கடத்தல்காரர்களை நம்புவோர் அவர்களது நிதியை அநியாயமாக இழக்கின்றனர். பணத்தைப் பெற்றுக்கொள்ளும் கடத்தல்காரர்கள் அவர்களை வீணாக அலையவிடுகின்றனர். கடத்தல்காரர்களால் எந்த உதவியும் செய்யமுடியாது.

கனடா தாராள மனப்பான்மையும், திருத்தச் சட்டபூர்வ குடியுரிமை விதிமுறைகளைக் கொண்டுள்ள ஒரு நாடாகும். இந்நிலையில், சட்டவிரோதமாகக் கனடாவுக்குள் நுழைய விடமாட்டார்கள்.

கடந்த இரண்டு வருடங்களாக இந்தோனேஷியா, தாய்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து இலங்கையர்களை கடத்துவதற்காக எடுக்கப்பட்ட அனைத்து முயற்சிகளும் முறியடிக்கப்பட்டன.

இந்தக் கடத்தல் நடவடிக்கைகளை முறியடிப்பதற்காக கனேடிய பிரதமர் 2012 மார்ச்சில் 12 மில்லியன் டொலரை ஒதுக்கியுள்ளார்.

கனடாவில் புதிய குடியேற்ற நடைமுறைகள் ஜூன் 2012 இல் சட்டமாக்கப்பட்டன. எனவே, சட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர்களுக்கு மனிதக் கடத்தல்களில் ஈடுபடுகின்ற தனிநபர்கள் மீது குற்ற வழக்குத் தொடர்வதற்கு சிறந்த வாய்ப்புகள் கிடைத்துள்ளன. மனிதக் கடத்தலில் குற்றவாளியாகக் காணப்படுவோருக்கு ஆகக்குறைந்தது பத்து வருடச் சிறைத்தண்டனையைக் கட்டாயமாக வழங்குகின்ற புதிய குறைந்தபட்ச தண்டனைகள் இந்தச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

திட்டமிட்ட அடிப்படையில் வருகைதந்தோர் ஐந்து வருடகாலத்திற்கு நிரந்தரக் குடியுரிமை அந்தஸ்துக்கு விண்ணப்பிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. இக்காலப் பகுதியில் தமது குடும்ப உறுப்பினர்கள் கனடாவிற்கு வருவதற்கு விண்ணப்பிக்க முடியாது.

கனடாவுக்குச் சட்ட ரீதியாக வருவோருக்காக உலகின் வேறெந்த நாட்டிலும் பார்க்க அதிகமாக தனிமனித குடிவரவுகளை ஏற்றுக்கொள்ளும் கனடாவின் தாராள குடியேற்ற முறைமையின் நம்பகத்தன்மையைத் தொடர்ந்து வலுப்படுத்துவோம்.

ஆகவே, இக்கடத்தல் காரர்களை நம்பி சட்ட விரோதமான முறையில் கனடாவுக்குள் நுழையும முயற்சியைக் கைவிடவேண்டும்'' - என்றார்.

(சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் பஸ் தரிப்பிடத்துக்கு முற்றவெளியில் நிரந்தர இடம்

யாழ்ப்பாணம், ஜன.8

*வெளிமாவட்டங்களுக்குரிய தனியார் பஸ் தரிப்பிடத்தை யாழ். முற்ற வெளிப்பகுதி முனீஸ்வரன் வீதியில் நிரந்தரமாக அமைப்பதற்கான நடவடிக்கைகள் யாழ். மாநகர சபையால் மேற்கொள்ளப்படவுள்ளன.*

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்லும் தனியார் பஸ் தரிப்பிடம் யாழ். ஸ்ரான்லி வீதி பழைய தபால் நிலையத்துக்கு முன்பாக இருந்தது.

எனினும் பஸ்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப காணியின் அளவு போதாமை மற்றும் ஏனைய போக்குவரத்து நெரிசல்கள் காரணமாகவும் வண்ணாங்குளப் புனரமைப்பு போன்ற காரணங்களாலும் தற்காலிகமாக யாழ். முனீஸ்வரன் வீதிக்கு இடம் மாற்றப்பட்டது.

தற்போது இடமாற்றப்பட்டுள்ள இடம் பஸ் சாரதிகளுக்கும் பொதுமக்களுக்கும் பயனுள்ளதாக அமைந்துள்ளதால் அதே இடத்திலேயே நிரந்தரமாக பஸ் தரிப்பிடத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ். மாநகர சபையுடன் இணைந்து தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவும் இதற்கான முன்னேற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

சாரதி மற்றும் நடத்துநர்கள் தங்குவதற்குரிய வசதிகளுடன் பஸ் தரிப்பிடம் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-14)

# யாழ். மாவட்ட இணையத்தின் கீழ் பஸ் சங்கங்கள் செயற்பட வேண்டும்

**அரச அதிபர் தெரிவிப்பு**

யாழ்ப்பாணம், ஜன.8

பஸ் பிராந்திய கிளைச் சங்கங்கள் அனைத்தையும் யாழ்.மாவட்ட பஸ் சங்கங்களின் இணையத்தின் கீழ் ஒன்றிணைத்துச் செயற்படுமாறு யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார் என்று யாழ். மாவட்ட பஸ் சங்கங்களின் இணையத் தலைவர் பொ.கெங்காதரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட பஸ் சங்கங்களின் இணையத்தின் கீழ் 15 பிராந்திய கிளைச் சங்கங்கள் உள்ளன. எனினும் பருத்தித்துறை கிளைச் சங்கம் இணையத்துடன் ஏற்பட்ட முரண்பாடுகளால் கடந்த வருடம் தனியாகச் செயற்பட்டு வந்தது.

இந்த நிலையில் தனியாக ஒரு கிளைச் சங்கம் இயங்கியதால் சாரதி, நடத்துநர்கள் தொடர்ச்சியாகத் தாக்கப்பட்டதுடன் ஏனைய வழிப் பாதைகளில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களுடனும் முரண்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் தேசிய போக்குவரத்து நேர அட்டவணையைத் தயாரித்து பருத்தித்துறை கிளைச் சங்கங்களுடன் இணைந்து சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களுக்கு வழங்கியது. அத்துடன் தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணமும் அறவிட்டு வந்தது.

அதன் காரணமாகத் தனியார் பஸ் சாரதி, நடத்துநர்கள் பெரிதும் பாதிப்படைந்து வந்தனர். ஏனைய வழி பாதைகளில் சேவையில் ஈடுபடும் சாரதி, நடத்துநர்களுக்கும் பல்வேறு பிரச்சினைகளைச் சந்திக்க நேரிட்டது. இது தொடர்பாக யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

அதற்கு அமைவாக யாழ். மாவட்ட செயலகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், பஸ் சங்கங்களின் இணையத் தலைவர் கிளைச் சங்கத் தலைவர்களுக்கான கலந்துரையாடல் இடம்பெற்றது.

அப்போது இந்தத் தீர்மானம் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-14)

# தீவக மாணவர்களுக்கு சைக்கிள் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜன.8

மீளக்குடியமர்ந்த மிகவும் நலிவுற்ற பாடசாலை சிறுவர் களுக்கு சைக்கிள்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வேலணை பிரதேச சபைத் தலைவர் வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி ரமேஷ் விஜயலட்சுமி ஆகியோரிடம் விடுத்த வேண்டுகோளை அடுத்து தீவகத்துக்கு 300 சைக்கிள்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக வேலணை பிரதேச சபைக்கு 150 சைக்கிள்களும் நெடுந்தீவு, ஊர்காவற்றுறை பிரதேச சபைகளுக்கு 75 சைக்கிள்கள் வீதமும் வழங்கப்படவுள்ளன.

இதற்கான பெயர்ப் பட்டியல்களைத் தயாரித்துப் பிரதேச சபைத் தலைவர்கள், யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி ஆணையாளர் ஊடாக உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-50)

முதன்மை விருந்தினர் வராமையால்

# ஒரு மாத காலத்துக்கு பிற்போடப்பட்ட கூட்டம்

**அபிவிருத்திப் பணிகள் தாமதிக்கும் நிலை**

கொடிகாமம், ஜன.8

கொடிகாமம்பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்துக்கு முதன்மை விருந்தினராக அறிவிக்கப்பட்டவர் அன்றைய தினத்தில் பங்குபற்ற முடியாது என்று அறிவித்ததை அடுத்து கூட்டம் ஒரு மாதம் பிற்போடப்பட்டுள்ளது. இது சங்க அங்கத்தவர்களிடையே பல்வேறு கருத்துக்களைத் தோற்றுவித்துள்ளது.

கடந்த டிசெம்பர் 31 ஆம் திகதி பொதுக்கூட்டம் நடைபெறும் என்று சங்க பொதுச் சபை உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டது. பல்வேறு செயற் திட்டங்களுக்கான அங்கீகாரம் பெறும் நடவடிக்கையும் இடம்பெறுமென குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் கூட்டம் நடைபெறுவதற்கு இரு தினங்களுக்கு முன்னர் வருடாந்த பொதுக்கூட்டம் ஜனவரி 26 ஆம் திகதி நடைபெறுமென சங்கத் தலைவரால் பொதுச் சபை உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக நிர்வாகத்துடன் தொடர்பு கொண்ட போது முதன்மை விருந்தினராகப் பங்குபற்றவிருந்த யாழ்.மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் அன்றைய தினத்தில் பங்குபற்ற முடியவில்லை என்று அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கூட்டம் ஒரு மாதத்துக்குப் பிற்போடப்பட்டதால் சங்கத்தால் மேற்கொள்ளப்படவிருந்த அபிவிருத்திப் பணிகள் மற்றும் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் காலம் தள்ளிப் போகும் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது. (ம-9)

# யாழ். மோட்டார் பரிசோதகராக தென்னிலங்கையிலிருந்து இருவர்

யாழ்.மாவட்ட செயலக மோட்டார் வாகனப் பரிசோதகர்களாக தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழ் மக்களைப் பெரும்பான்மை யாகக் கொண்ட யாழ். மாவட்டத்தில் மோட்டார் வாகனப் பரிசோதகர்களாகத் தமிழ் தெரிந்த ஒருவரும் நியமிக்கப்படவில்லை.

மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் இதுவரை காலமும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரும் தமிழர் ஒருவரும் மோட்டார் வாகனப் பரிசோதகர்களாகக் கடமையாற்றினர்.

கடமையாற்றிய தமிழ்ப் பரிசோதகர் இடமாற்றம் பெற்று யாழ்.மாவட்டத்தை விட்டு வெளியேறியுள்ளார். இதனால் புதிதாக இரு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். (ம-5)

# நாவற்குழி- கேரதீவு வீதி திருத்தப் பணிகள் பூர்த்தி

யாழ்ப்பாணம், ஜன.8

நாவற்குழியில் இருந்து கேரதீவு வரையான பிரதான வீதியின் புனரமைப்புப் பணிகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன.

எண்பது வீதமான பணிகள் நிறைவடைந்துள்ளன என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது இந்தப் பிரதான வீதி அகலிக்கப்பட்டு, கட்டம் கட்டமாகக் 'காப்பெற் போடும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இந்த வீதியூடாக வாகனங்கள் சிரமம் இன்றிப் பயணிக்கக் கூடிய வகையில் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த வீதி கடந்த பல வருடங்களாகப் புனரமைப்பு இன்றி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

# மதுப்பிரியர்களின் கூடாரமாக கொடிகாமம் மரக்கறிச் சந்தை

**இரவு வேளையில் குடித்துக் கும்மாளம்**

கொடிகாமம், ஜன.8

கொடிகாமம் சந்தைப் பகுதியில் அமைக்கப்பட்ட நவீன மரக்கறி விற்பனைப் பிரிவு இரவு வேளையில் மதுப் பிரியர்களின் கூடாரமாக மாறியுள்ளது.

**இந்த மரக்கறி விற்பனைப் பிரிவை மீண்டும் இயக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.**

இது குறித்து வியாபாரிகள் கவலை தெரிவித்தனர். சாவகச்சேரி பிரதேச சபை 2003 ஆம் ஆண்டு பல லட்சம் ரூபா செலவில் கொடிகாமம் சந்தை வளாகத்தில் நவீன வசதிகளுடன் மரக்கறி விற்பனைப் பிரிவை நிர்மாணித்தது. அப்போதைய பிரதேச சபைத் தலைவர் அன்ரன் பொன்னையாவால் இது திறந்து வைக்கப்பட்டது.

சிறிது காலம் அந்தக் கட்டடத்தினுள் மரக்கறிப் பிரிவு இயங்கிய போதிலும் பின்னர் மரக்கறி வியாபாரிகளின் மரக்கறி களஞ்சியமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது.

அங்கு வைக்கப்பட்டிருந்த பூசணிக்காய் உள்ளிட்ட மரக்கறிகள் பழுதடைந்து சுகாதாரத்துக்குப் பங்கம் விளைவிக்கும் நிலையில் காணப்பட்டன. இதனால் மரக்கறிகள் களஞ்சியப்படுத்துவதும் நிறுத்தப்பட்டது.

ஆனால், தற்போது இரவு வேளையில் மதுப் போத்தல்களுடன் இந்தக் கட்டடத்தினுள் வருவோர் அங்கு ஒன்று கூடி மது அருந்தி கும்மாளம் போடுகின்றனர். மாலை 6 மணியுடன் தமது வியாபாரத்தை நிறுத்தி தாம் வெளியேறி விடுவதாகக் கூறும் வியாபாரிகள்-

"இந்த மரக்கறி விற்பனைப் பிரிவை மீண்டும் இயக்குவதற்கு அல்லது இதனை கடைத்தொகுதியாக மாற்றுவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தனர். (ம-9)

# சிவத்தமிழ் செல்வியின் அறக்கொடை





யாழ்ப்பாணம், ஜன.8

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 88 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு அறக்கொடை வழங்கும் நிகழ்வு நேற்று தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தின் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெற்றது.

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விருந்தினர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் நினைவாலயத்துக்குத் தீபம் ஏற்றி, திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து அமெரிக்க நாட்டு ரிஷி தொண்டுநாத சுவாமிகள், நல்லை ஆதீனக் குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தின் பிரதம குரு பிரம்மஸ்ரீ அகிலேஸ்வரக் குருக்கள் ஆகியோரின் ஆசியுரைகள் இடம்பெற்றன.

தொடர்ந்து யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் ச.ஸ்ரீபவானந்தராஜா, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை அத்தியட்சகர் மு.உமாசங்கர் ஆகியோரிடம் வைத்தியசாலை அபிவிருத்திப் பணிகளுக்காக ஒரு லட்சம் ரூபா கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. தொடர்ந்து வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் சாதாரண தரத்தில் கல்வி கற்கும் வறுமை நிலையிலுள்ள மாணவர்களுக்கான கல்வி நிதியாக இரண்டு லட்சம் ரூபா வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டது.

அறக்கொடை நிதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து சிரேஷ்ட வைத்திய கலாநிதி திருமதி ஜெ.கணேசமூர்த்தி, கலாபூசணம் கணபதிப்பிள்ளை, முன்னாள் பரீட்சை செயலாளர் சி.கந்தசாமி, தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் முன்னாள் உப தலைவர் ந.செல்வநாயகம், இளைப்பாறிய ஆசிரியர் மாதாஜி சிவசமயச் செல்வி ஸ்ரீசுவாம்பா விசாலாட்சி அம்மையார், ஸ்ரீதுர்க்காதேவி ஆலயத்தின் இணையச் செயலாளர் நா.தவநாதன் ஆகியோர் சிவத்தமிழ்ச் செல்வி விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வநாதனும் கௌரவ விருந்தினராக அமெரிக்காவைச் சேர்ந்த ரிஷி தொண்டு நாத சுவாமிகளும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் ச.ஸ்ரீபவானந்தராஜா, தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலை அத்தியட்சகர் மு.உமாசங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-14-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசை கவிழ்க்கும் சக்தி நீதிமன்றத்திடம் இல்லை

## ஐ.தே.கவுக்கே உண்டு என்கிறார் ரணில்

கொழும்பு, ஜன.8

நீதிமன்றத்தால் அரசை வீட்டுக்கு விரட்டியடிக்க முடியாது. அதைச் செய்வதற்குரிய சக்தி ஐ.தே.கவுக்குத்தான் இருக்கின்றது. இதற்கமைய, அரசை வீட்டுக்கு விரட்டியடிப்பதற்கு இரண்டு கட்டங்களாக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி சரியான நிலைப்பாட்டையே எடுத்துள்ளது என்பது உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின்மூலம் நிரூபணமாகியுள்ளது என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இலவசக்கல்வி, சுகாதாரம் ஆகியன சீரழிக்கப்படுகின்றன. பெண்கள், சிறுவர்கள் ஆகியோருக்கு எதிரான வன்முறைகள் தலைவிரித்தாடுகின்றன. அத்துடன், மக்கள் வாழ்வதற்கு வழியின்றித் திண்டாடுகின்றனர். இவற்றை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்காத அரசு கொழும்பில் கார் பந்தயம் நடத்துகின்றது. இவ்வாறான அரசை நாம் உடனடியாக விரட்டியடிக்கவேண்டும்.

நாட்டின் பிரதம நீதியரசரை அப்பதவியிலிருந்து விரட்டியடிப்பற்கு அரசு நடவடிக்கை எடுத்துவருகின்றது. ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியினதும், மஹிந்த சிந்தனையினதும் செயற்பாடு இதுதானா?

இந்த அரசு குறித்தும் அரசின் செயற்பாடுகள் தொடர்பிலும் எமக்கு நிறையவே கதைக்கமுடியும். அவ்வாறு கதைப்பதால் மாத்திரம் ராஜபக்ஷ அரசை வீழ்த்திவிட முடியாது. இந்த அரசை வீழ்த்தவேண்டுமானால் அனைவரும் வீதியிலிறங்கிப் போராடவேண்டும். அதை ஐக்கிய தேசியக் கட்சியால் மாத்திரமே செய்யமுடியும்.

இவ்வருடத்தின் முதல் ஆறுமாதங்களுக்குள் கட்சி உறுப்பினர்கள் திரட்டப்படுவர். அதன் பின்னர் அவ்வனைத்துத் தரப்பையும் திரட்டி வீதியிலிறங்கிப் போராடுவோம். முதலில் நாம் அனைவரும் அணிதிரண்ட பின்னர் ஏனைய தரப்புக்களையும் இணைத்து அரசுக்கு எதிராகப் போராடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேவேளை, தனது உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்வதற்காக நீதிமன்றத்தை நாடுவதற்கான உரிமை நீதியரசருக்கு இருக்கின்றது. சட்ட ரீதியான பிரச்சினைகளைத் தீர்க்கமுடிந்தாலும் நீதிமன்றால் அரசை வீட்டுக்கு விரட்டியடிக்கமுடியாது. அதைச் செய்யக்கூடிய சக்தியுள்ள ஒரே அமைப்பு ஐக்கிய தேசியக் கட்சிதான் - என்றார். (த-சி)

## ஜனாதிபதி...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மறுநாள் 15 ஆம் திகதி காலை செவ்வாய்க்கிழமை காலை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் யாழ்.மாவட்ட ஒருகிணைப்புக் குழுக்கூட்டம் ஜனாதிபதி தலைமையில் இடம் பெறவுள்ளது. அன்று மதியம் யாழ்.போதனா வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடம் திறந்து வைக்கப்படவுள்ளது.

மேலும், யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக, அமைச்சர்கள் மற்றும் அமைச்சின் செயலாளர்களும் யாழ்.வருகை தரவுள்ளனர். அத்துடன் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்துக்கான அழைப்புக்கள் விடுக்கப்படவுள்ளன.

வடக்கு மாகாண திணைக்கள தலைவர்கள் ,செயலாளர்கள், பிரதேச சபைகளின் தலைவர்கள் ஆகியோரும் ஒருங்கிணைப்புக் கூட்டத்துக்கு அழைக்கப்படவுள்ளனர்.

ஜனாதிபதியின் யாழ்.வருகையை முன்னிட்டு ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினர் இன்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளனர் . (த-5)

## கல்விச்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வர் பிரதிநிதிகள், பீடாதிபதிகள், சிரேஷ்ட மாணவ ஆலோசகர் ,மாணவ ஆலோசகர்கள், நிர்வாக அதிகாரிகள் கலந்து கொண்டனர். இதன் போதே இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் பல்கலைக்கழகக் கல்விச் செய்பாடுகள் ஆரம்பிப்பதென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது என்று பதிவாளர் அனுப்பியுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் 27 ஆம் திகதி இரவு யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் விடுதிகளுக்குள் படையினர் அத்துமீறி உள்நுழைந்ததைக் கண்டித்து நவம்பர் 28 ஆம் திகதி பல்கலை மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்து அமைதி ஊர்வலம் நடத்தினர். இதன் போது பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தினர் . இதனை அடுத்து பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரி நவம்பர் 29 ஆம் திகதி தொடக்கம் மாணவர்கள் தமது கல்விச் செயற்பாடுகளை புறக்கணித்திருந்தனர்.

இதனையடுத்து மாணவர்கள் பலர் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.கைதான மாணவர்களை விடுதலை செய்யுமாறு கோரி பல்கலைக்கழக மாணவர்கள் கல்விச்செயற்பாடுகளைப் புறக்கணித்து வந்தனர். 40 நாள்களுக்கு மேலாக அவர்களது புறக்கணிப்புத் தொடர்ந்தது.

கைது செய்யப்பட்ட மாணவர்களில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் ப.தர்ஷானந் ஒன்றியத் தலைவர் பவானந்தன், கலைப்பீட ஒன்றியத் தலைவர் ஜெயமேஜெயத், விஞ்ஞான பீட மாணவர் ஒன்றிய உறுப்பினர் எஸ்.சொலமன் ஆகியோர் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் விரைவில் விடுவிக்கப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் பல்கலைக்கழகக் கல்விச் செயற்பாடுகள் இன்று ஆரம்பமாகின்றன. (த-4)

## காணாமற்போன...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வாகனம் துரைசிங்கம் (வயது-57) என்ற மீனவரே காணாமற்போயிருந்தார்.

இந்த நிலையில் அவரது சடலம் நேற்று மாலை செம்பியன்பற்று கடற்கரையில் நயினாமுனை கரையில் கரையொதுங்கியுள்ளது. (ஐ-8)

## குற்றப்பிரேரணை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வர்களின் கூட்டம் நேற்று நடைபெற்றது.

சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் நேற்று முற்பகல் 11.30 மணிக்கு ஆரம்பமான இக்கூட்டத்தில் முதல் விடயமாக சர்ச்சைக்குரிய 'திவிநெகும' திணைக்கள சட்டவரைவு தொடர்பில் பேசப்பட்டது. அதன்போது உயர்நீதிமன்றத்தால் முன்வைக்கப்பட்ட சிபாரிசுகள் தொடர்பில் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

உயர்நீதிமன்றத்தின் திருத்தங்களுடனேயே குறித்த சட்டவரைவு நிறைவேற்றப்படும் என அதன்போது எடுத்துரைத்த அரசதரப்பு, சில விடயங்களுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பயன்படுத்தத் தயாராகவுள்ளதையும் விவரித்தது.

அதன் பின்னர் பிரதம நீதியரசருக்கு எதிரான நாடாளுமன்றத் தெரிவுக்குழு விசாரணை அறிக்கை மீதான விவாதத் திகதி குறித்து அரச தரப்பால் கருத்துகள் முன்வைக்கப்பட்ட தறுவாயில் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் சூடான வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

எதிர்வரும் 10ஆம் 11ஆம் திகதிகளில் குற்றப்பிரேரணை விசாரணை அறிக்கை தொடர்பில் நாடாளுமன்றில் விவாதிக்கப்படும் என அரச தரப்பிலிருந்து கருத்து வெளியிடப்பட்டபோது, அதை எதிர்த்தரப்பினர் ஆட்சேபித்ததுடன், அதற்கான காரணிகளையும் விளக்கினர்.

அதாவது, அரசமைப்பை வியாக்கியானம் செய்யும் வல்லமை கொண்ட உயர் நீதிமன்றம், பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணையை விசாரணை செய்வதற்கு சட்டமல்லாத நிலையியற்கட்டளையின் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு சட்டவலுவற்றது என்றும்,

நீதியரசரொருவரை குற்றவாளியாக அறிவித்து தண்டிக்கும் அதிகாரம் தெரிவுக்குழுவுக்கு இல்லை என்றும் அறிவித்துள்ளது என்ற விடயத்தை அவ்வேளை சுட்டிக்காட்டிய எதிர்த்தரப்பினர், இவ்வாறானதொரு சூழ்நிலையில் அந்த அறிக்கையை விவாதத்துக்கு உட்படுத்துவது முறையல்ல என்றும் தெரிவித்தனர்.

உயர்நீதிமன்றத்தின் மேற்படி சட்டவியாக்கியானத்தின் பிரகாரம் தெரிவுக்குழு அறிக்கை ஏற்புடையதல்ல என மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த மூன்றாம் திகதி தீப்பளித்திருந்தமை தெரிந்ததே. பிரதம நீதியரசர் தாக்கல் செய்திருந்த 'ரிட்'மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட தினத்திலேயே உயர்நீதிமன்றத்தின் பொருட்கோடலை மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்தது.

அதேவேளை, நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தின்போது, எதிர்த்தரப்பினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையையும் விளக்கத்தையும் அரசு ஏற்கமறுத்தது. அதனையடுத்து எதிர்த்தரப்பினர் மீண்டும் நிலைமையை விளக்கியுள்ளனர். அந்த முயற்சியும் பயனளிக்கவில்லை.

அரசமைப்பின் பிரகாரமே குற்றப்பிரேரணை கொண்டுவரப்பட்டது என்றும், அது நிச்சயம் 10ஆம் 11ஆம் திகதிகளில் விவாதிக்கப்படும் என்றும் அரச தரப்பினர் அவ்வேளை திட்டவட்டமாக எடுத்துரைத்தனர்.

இவ்வாறு அரசு தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்துகொண்டு எதிர்த்தரப்பினரின் கோரிக்கையை ஏற்க மறுத்ததால் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துகொண்ட எதிர்க்கட்சிகள் அச்சமயத்தில் அதிலிருந்து வெளிநடப்பு செய்தன.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களான லக்ஷ்மன் கிரியெல்ல, ரவி கருணாநாயக்க ஆகியோரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து சுரேஷ் பிரேமச்சந்திரன் ஜே.வி.பியிலிருந்து அதன் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் எதிர்க்கட்சிகளின் சார்பில் கட்சித்தலைவர் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இதற்கிடையில், நாடாளுமன்றில் நடைபெறவுள்ள குற்றப்பிரேரணை விசாரணை அறிக்கை மீதான விவாதத்தைப் புறக்கணிப்பது தொடர்பில் எதிர்க்கட்சிகள் ஆலோசனை நடத்தி வருகின்றன என அறிய முடிகிறது. (த-சி)

## நல்லிணக்கத்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மனித உரிமை நிலைமைகள் இலங்கையில் மிக மோசமாகவுள்ளன. இங்கு மனித உரிமைகள் அப்பட்டமாக மீறப்படுகின்றன. போரின் பின்னர் நல்லிணக்கத்தை ஏற்படுத்த இலங்கை அரசு இதுவரையும் எதுவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

கனடா மற்றும் ஆஸ்திரேலிய நாடுகளுக்குள் சட்டவிரோதமாக நுழையும் இலங்கையர்கள் இலங்கையில் அதிகளவு மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றன என்றும் அதனாலேயே நாட்டைவிட்டு வெளியேறுகிறோம் என்றும் கூறுகின்றனர்.

இலங்கை அரசு இந்த விடயத்தில் கூடுதலாகக் கவனம் செலுத்தவேண்டும். கனேடிய அரசு இலங்கையில் உள்ள இந்த விடயங்கள் தொடர்பில் அதிக அக்கறை செலுத்துகின்றது.

போரின் பின்னர் இலங்கையில் இரு தரப்பினரும் மனித உரிமைகளை மீறினர் என்ற குற்றச்சாட்டுகள் பரவலாக உள்ளன. இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் இலங்கை அரசு உடன் ஆராய வேண்டும். உரிய விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும்.

அரசியல் நல்லிணக்கச் செயற்பாடுகளில் உறுதியான முன்னேற்றங்களைப் பொதுநலவாய நாடுகள் காட்டவேண்டும் என்பது கனேடிய அரசின் நிலைப்பாடாகும்.

அந்த நிலைப்பாட்டின் அடிப்படையில் தான் நாம் பொதுநலவாய உறுப்பு நாடான இலங்கையும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் போன்ற விடயங்களில் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்று கோருகிறோம்.

நான் இங்கு அரசியல் தலைவர்கள், அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்து உரையாடியபோது இந்த விடயத்தை அவர்களிடம் எடுத்துரைத்து இது தொடர்பில் உரிய கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொண்டேன்.

மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்த இலங்கை அரசு உடன் நடவடிக்கை எடுக்காவிட்டால், நவம்பரில் இலங்கையில் இடம்பெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்வது குறித்து கனடா மறுபரிசீலனை செய்ய வேண்டிய நிலை ஏற்படும் - என்றார். (சி)

## தெரிவுக்குழு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ளனர் என நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

வங்கிக் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் பிரதம நீதியசருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை சிரேஷ்ட வங்கியாளர் ராணி ஜெயமாஹ ஆராய்வார் என்றும், இதர விடயங்களை ஏனையோர் கையாள்வர் என்றும் அரச உயர்மட்ட வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

அத்துடன், குறித்த விசாரணைக்குழு ஆய்வுப் பணிகளை முடித்த பின்னர் ஜனாதிபதியிடம் விசேட அறிக்கை ஒன்றைக் கையளிக்கும் என்றும், அதன் பின்னரே பிரதம நீதியரசர் விடயத்தில் ஜனாதிபதி இறுதியானதொரு முடிவை எடுப்பார் என்றும் தெரிய வருகின்றது.

அதேவேளை, குற்றப் பிரேரணையை விசாரணைசெய்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு, தனது விசாரணை அறிக்கையை கடந்த மாதம் 8 ஆம் திகதி சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் கையளித்திருந்தது.

அவ்வாறு அறிக்கை வெளியாகியிருந்த சமயத்தில், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் விசாரணை அறிக்கை தொடர்பில் ஆராய்வதற்கு, தாம் சுயாதீனக் குழுவொன்றை அமைக்கவுள்ளார் என ஜனாதிபதி அறிவிப்பு விடுத்தார்.

இது சட்டரீதியான நடைமுறை அல்லவென்றும், தனது மனச்சாட்சியின்படியே இதைச் செய்கிறார் என்றும் அவர் வியாக்கியானம் வழங்கியிருந்தார். (சி)

## நாடாளுமன்றத்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தவர்களை ஜனவரி 03 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்தல் விடுத்தது.

சபாநாயகர், நாடாளுமன்றச் செயலாளர் நாயகம், தெரிவுக்குழுவில் இடம்பெற்றிருந்த 11 உறுப்பினர்கள் ஆகியோரே ஆணைகோரும் மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

எனினும், நாடாளுமன்ற உறுப்பினர்களான சம்பந்தன், விஜித்த ஹேரத் ஆகியோரைத் தவிர ஏனையோர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அறிவிப்பை நிராகரித்தனர். நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் மருத்துவ சிகிச்சைக்காக வெளிநாடு சென்றிருப்பதால் அவர் சார்பில் அவரது சட்டத்தரணி சுமந்திரன் முன்னிலையானார்.

ஜனவரி மூன்றாம் திகதி பிரதம நீதியரசரின் 'ரிட்' மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, குறித்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டவர்களை எதிர்வரும் 15 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் மீண்டும் அறிவித்தல் விடுத்தது.

அத்துடன், ஜனவரி 07 ஆம் திகதி சட்டமா அதிபரை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு பணிப்புரை விடுத்து வழக்கு விசாரணையை ஒத்திவைத்தது.

இதன்பிரகாரம் நேற்று மீண்டும் பிரதம நீதியரசரின் 'ரிட்' மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் விசாரணை அறிக்கை செல்லுபடியற்றது என மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அதேவேளை, நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் விசாரணைக்கு தடைவிதிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுக்கள் தொடர்பில், அரசமைப்பின் பொருறள்கோடலை மேன்முறையீட்டு நீதிமன்றம் உயர் நீதி மன்றத்திடம் கோரியிருந்தது.

இதன்பிரகாரம், உயர் நீதிமன்றத்தால் அனுப்பிவைக்கப்பட்டிருந்த சட்டவியாக்கியானத்தில், ''நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகள் என்பது சட்டமல்ல. எனவே, நிலையியற் கட்டளையின் 78 (ஏ) பிரிவுக்கடைய நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவும் சட்டவலுவற்றது. நீதியரசரை குற்றவாளியென அறிவித்துத் தண்டிக்கும் அதிகாரம் அதற்கு கிடையாது'' எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது என்று கடந்த மூன்றாம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் விசாரணை அறிக்கை செல்லுபடியற்றதென மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள நிலையில், குறித்த விசாரணை அறிக்கையை எதிர்வரும் 10, 11 ஆம் திகதிகளில் விவாதத்துக்கு எடுப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது. அரசின் இந்த முடிவு நீதித்துறைக்கும் சட்டவாக்கத்துக்கும் இடையிலான பிரச்சினையை மேலும் உக்கிரமடையச் செய்யும் என சட்டவல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியான பிரதேச செயலகம் அக்கராயனுக்கு எப்போது?

## இந்த வருடத்திலாவது இயங்குமா என கேள்வி எழுப்புகின்றனர் பிரதேச மக்கள்

*அக்கராயன்,ஜன.8*

***கிளிநொச்சி மாவட்டம் அக்கராயனில் இந்த ஆண்டிலாவது தனியான பிரதேச செயலகம் இயங்கத் தொடங்குமா என்ற வினாவை இங்குள்ள மக்கள் எழுப்புகின்றனர்.***

2010 ஆம் ஆண்டு மீள் குடியமர்வு இடம்பெற்ற நாளிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச உயர் அதிகாரிகள் எனப் பலரும் அக்கராயனில் பிரதேச செயலகம் உருவாகும் என்ற நம்பிக்கையை வளர்த்து வருகின்றனர்.

இதற்கென காணியும் இனம் காணப்பட்டுள்ளது. மேலும் 12 கிராமங்களைக் கொண்டதாக கரைச்சி மேற்கு என்ற பெயரில் அக்கராயனில் பிரதேச செயலகம் உருவாக இருப்பதாகவும் கூறப்பட்டது.

வன்னேரிக்குளத்தில் 462 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 652 பேரும், ஆனைவிழுந்தானில் 375 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 169 பேரும், கண்ணகைபுரத்தில் 350 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 200 பேரும், ஸ்கந்தபுரத்தில் 779 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 440 பேரும், அக்கராயனில் 660 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 170 பேரும்-

கோணாவிலில் ஆயிரத்து 34 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 395 பேரும், உருத்திரபுரம் வடக்கில் 489 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 621 பேரும் உருத்திரபுரம் கிழக்கில் 419 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 215 பேரும், உருத்திரபுரம் மேற்கில் 401 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 215 பேரும், சிவநகரில் 402 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 206 பேரும்-

ஊற்றுப்புலத்தில் 403 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 309 பேரும், புதுமுறிப்பில் 450 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 732 பேரும் என மொத்தமாக 6 ஆயிரத்து 224 குடும்பங்களைச் சேர்ந்த 20 ஆயிரத்து 324 பேரும் வாழும் அக்கராயனுக்கு தனியான பிரதேச செயலகம் உருவாக்கப்பட வேண்டும் என இங்குள்ள மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(க-18)

## குளப் புனரமைப்பு

அக்கராயன், ஜன.8

துணுக்காயிலுள்ள நமனங்குளத்தை உடனடியாகப் புனரமைக்குமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நமனங்குளம் கிராமத்தில் மக்கள் மீள்குடியமர்ந்து மூன்றாண்டுகள் கழிந்த போதிலும் இங்குள்ள குளம் கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுகின்றது.

கிராம மக்களின் பல்வேறு வகையான நீர்த் தேவைகளையும் இந்தக் குளமே பூர்த்தி செய்ய வேண்டிய நிலையிலுள்ளது. ஆனால் சிதைவடைந்த நிலையில் இது உள்ளதால் மக்கள் பல்வேறு சிரமங்களையும் எதிர்கொண்டு வருகின்றனர்.

இதனைப் புனரமைப்பதன் மூலமாகத் தமக்கு ஏற்பட்டுள்ள சிரமங்கள் நீங்கி விடும் எனவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

(க-18)

## மெய்கண்டானுக்கு முதலிடம்...



கோட்ட மட்டத்தில் நடைபெற்ற சைவத் திருமுறை சிறுவர் நாடகப் போட்டியில் பங்கு பற்றிய பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய மாணவர்கள் முதலிடம் பிடித்தனர். முதலிடம் பெற்ற நாடகக் குழுவினருடன் பாடசாலையின் அதிபர் எஸ். கணேசதாசன் மற்றும் பொறுப்பாசிரியர்கள்.

## வெள்ள நிவாரணப் பணிகளில் வவுனியா வர்த்தகர் சங்கத்தினர்



வெள்ள நிவாரணப் பணிகளில் வவுனியா மாவட்ட வர்த்தகர் சங்கம் ஈடுபட்டு வருகின்றது. வவுனியா சிதம்பரபுரம், சமளங்குளம் மற்றும் செட்டிகுளத்தில் உள்ள கங்கன்குளம் கிராமங்களில் பல இலட்சம் ரூபா பெறுமதியான உலர் உணவுப்பொருள்களை வழங்கி வர்த்தகர் சங்கம் உதவியுள்ளது.

கடந்த 5 ஆம் திகதி சனிக்கிழமை செட்டிகுளத்திலுள்ள கங்கன் குளத்தில் 180 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. இதில் வர்த்தகர் சங்கத் தலைவர் வீ.கே. இராசலிங்கம், பொருளாளர் சந்திரகுமார், உறுப்பினர் ஆரிப் ஆகியோர் உலர் உணவுகளை விநியோகிக்க வருகை தந்திருந்தனர்.

செட்டிகுளம் உதவிப் பிரதேச செயலர் வே.ஆயகுலன், சமூகசேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன், கிராமசேவை உத்தியோகத்தர் திருமதி தங்கமேனி ஆகியோர் கங்கன்குளம் மற்றும் சண்முகபுரம் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் உதவியுடன் நிவாரண வேலைகளை மேற்கொண்டனர்.

இங்கு உரை நிகழ்த்திய வர்த்தகர் சங்கத் தலைவர்; எமது சங்கம் பல்வேறு விதமான சமூகசேவை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. அவ்வப்போது ஏற்படும் இயற்கை இடர்களின் போதும் வவுனியா மாவட்ட வர்த்தகப் பெருமக்களின் உதவியுடன் இவ்வாறான நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றது.

இந்தப் பணிகளுக்கு உதவி நல்கி வரும் வர்த்தகர்களுக்கு இந்த வேளையில் எமது நன்றிகளைத் தெரிவிக்கிறேன். - என்று கூறினார்.

(க-400)

## 2016 இல் மின்சாரம்

*அக்கராயன், ஜன.8*

*துணுக்காயிலுள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் 2016 ஆம் ஆண்டுக்குள் முழுமையாக மின்சாரம் கிடைக்கும் என்ற உறுதிமொழி தமக்கு வழங்கப்பட்டுள்ளதாக துணுக்காய் பிரதேச செயலர் சி.குணபாலன் தெரிவித்துள்ளார்.*

*மின்சார சபையின் உதவிப் பொது முகாமையாளரே இந்த உறுதி மொழியைத் தமக்கு வழங்கியதாக அவர் மேலும் தெரிவித்தார். துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் சுமார் 20 கிராமங்கள் உள்ளன.*

*இங்கு மக்கள் குடியமர்ந்து 3 ஆண்டுகள் கடந்த நிலையிலும் பல கிராமங்கள் மின்சார வசதியின்றி இருளில் மூழ்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.* *(க-18)*

# மன்னாரில் வெள்ளம் பாதித்த மக்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து ஆராய்வு

## விவரங்கள் சேகரிக்கும் பணிகள் துரிதம்

மன்னார், ஜன.8

மன்னார் மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் ஏற்பட்ட சேதங்கள், அழிவுகள் மற்றும் பாதிப்புகள் குறித்து விவரம் திரட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதற்கான நடவடிக்கையை விரைவுபடுத்துமாறு அமைச்சர் றிசாத் பதியுதீன், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

கடந்த சில தினங்களாக பெய்த கடும் மழை மற்றும் மல்வத்து ஓயாவில் ஏற்பட்ட நீர் அதிகரிப்பு போன்ற காரணங்களால் மன்னார் மாவட்டத்தின் பல கிராமங்கள் நீரில் மூழ்கியிருந்ததுடன், மன்னாருக்கான போக்குவரத்துக்களும் தடைப்பட்டிருந்தன.

இதேவேளை, வெள்ளப் பெருக்கால் முசலி பிரதேசத்தின் போக்குவரத்துக்கள் முற்றாகத் தடைப்பட்டிருந்தன. தற்போது வெள்ள நீர் வழிந்துள்ள நிலையில் அமைச்சர் றிசாத் பதியுதீன் முசலிப் பிரதேசத்தில் உள்ள கரடிக்குளி, மறிச்சுக்கட்டி, பாலக்குளி, கொண்டச்சி, கொக்குபடையான், தம்பட்டை, முதலியார்கட்டு, சிலாவத்துறை, முள்ளிக்குளம், காயாக்குளி, அகத்திமுறிப்பு, பொற்கேணி, கூளாங்குளம், மற்றும் வேப்பங்குளம் ஆகிய கிராமங்களுக்கு வருகை தந்திருந்தார்.

அந்தப் பகுதி மக்களால் முன்வைக்கப்பட்ட பல்வேறு தேவைகள் குறித்து தமது கவனத்தைச் செலுத்திய அமைச்சர், உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரையும் வழங்கினார்.

அதே வேளை பாதிப்புக்குள்ளான மக்களின் விவ



சாய சேத விவரங்களைச் சேகரிக்கும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்படுவதாகவும், தொடர்ந்து வெள்ள அச்சுறுத்தல் ஏற்படும் பிரதேச மக்களின் பாதுகாப்பு குறித்தும் திட்டமொன்றை வகுக்க நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் றிசாத் பதியுதீன் கூறினார்.

அமைச்சருடன் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹூனைஸ் பாருக், முசலி பிரதேச சபைத் தலைவர் யஹ்யான், பிரதித் தலைவர் பைரூஸ் மௌலவி, உறுப்பினர்களான சுபியான், காமில், முசலிப் பிரதேச செயலர் கேதீஸ்வரன், வடமாகாண ஆளுநரின் இணைபாளர் எஸ்.எல்.டீன், மன்னார் நகர சபை உறுப்பினர் நவுசீன், இடர் முகாமைத்துவ மன்னார் மாவட்டப் பணிப்பாளர் றியாஸ், அமைச்சரின் இணைப்பு செயலாளர்களான அலிகான் ஷரீப், எம்.முனவ்வர் உட்பட பலரும் வருகைத் தந்திருந்தனர்.

இதேவேளை மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கும் நடவடிக்கையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் நேரடியாகச் சென்று ஒவ்வொரு கிராமங்களுக்கும் அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய உலர் உணவுப்பொதிகளை வழங்கினார்.

தென்பகுதி வர்த்தகர்கள், பொது மக்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோர் வழங்கிய உதவிகளின் மூலம் சேகரிக்கப்பட்ட உலர் உணவுப்பொதிகள் மன்னார் மாவட்டத்தில் வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட சகல கிராமங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றன. (க-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழைய மாணவர் சங்கம் யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் (ஸ்ரான்லிக்கல்லூரி)

பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுச் சபைக் கூட்டம் **எஸ்.விஜயக்காந்** (தலைவர்) தலைமையில் 2013.01.20 (ஞாயிற்றுக்கிழமை) மு.ப 10.00 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கூட்டத்துக்கு அனைத்து அங்கத்தவர்களும் தவறாது சமுக மளித்து புதிய செயற்குழு உறுப்பினர்களின் தெரிவுக்கு தங்களின் ஒத்துழைப்பை நல்குமாறு அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்
யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்,
(ஸ்ரான்லிக் கல்லூரி). (சி/5425) (6.7.4)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு
09.01.1925



இறப்பு
09.12.2012

### அமரர் பரஞ்சோதி சிவப்பிரகாசம் (அருந்ததி ரீச்சர்)

கடந்த 09.12.2012 அன்று சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கு அமரர் பரஞ்சோதி சிவப்பிரகாசம் அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் 06.01.2013 அன்று கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றன. இன்று (08.01.2013) செவ்வாய்க்கிழமை அன்னாரின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு இடம்பெற்று, ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் மு.ப 11 மணியளவில் இலக்கம் 527, நாவலர் வீதியில் அமைந்துள்ள **சொர்ணாம்பிகை மண்டபத்தில்** (தியாகி அறக்கொடை நிலையம்) நடைபெறவுள்ளது. ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.)

59, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (280425)(6.7.11) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சின்னட்டி திருநாவுக்கரசு
### (ஓய்வுபெற்ற மருந்துக் கலவையாளர்)



அல்வாயைப் பிறப்பிடமாகவும், அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னட்டி திருநாவுக்கரசு கடந்த (04.01.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னட்டி - செல்லம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - இராஜலக்சுமி தம்பதி யரின் அன்பு மருமகனும், நாகேஸ்வரி யின் (ஓய்வு பெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், காலஞ்சென்ற திரவியம் (ஓய்வு பெற்ற அதிபர், அல்வாய்), ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஆதவன் (தபாலதிபர்), பத்மதாஸ் (விரிவுரையாளர், பௌதீகத்துறை யாழ்.பல்கலைக்கழகம், Phd student University of Cape Town south Africa) ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌசல்யா, Dr. ஜெயதாட்சாயினி (கால்நடை வைத்தியர், சண்டிலிப்பாய்) ஆகியோரின் அன்பு மாமனும், தவமலர், காலஞ்சென்ற ராணி (திருகோணமலை) மற்றும் சிவநாதன், மீரா, சிவரூபன், சிவமோகன், சிவயோகன், சிவவாசன், சிவகாந்தன், சியாமா றஜனி, காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, யோகம்மா மற்றும் கனகாம்பிகை, பொன்மலர், ரேவதி, தங்கவடிவேல், நற்குணம், இராசகிளி, கனகலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, சுந்தரமூர்த்தி மற்றும் செல்லத்துரை, சாரங்கம், வசந்தா, துரைராஜா ஆகியோரின் சகலனும், Dr. சபேசன் (பல்வைத்திய நிபுணர்), சர்வேசன், மேனகரன், சயந்தன், சம்மந்தன், காலஞ்சென்ற சற்குணன் மற்றும் மேகலா, சவுந்தரன், உதயமலர், விஜயமலர், சதீஸ், சந்துரு, வினோத், துஷாந் ஆகியோரின் சிறிய தந்தையும், முருகேஸ், சுரேஸ், ஜனனி, ஜானு ஆகியோரின் மாமனும், மிதுர்ஷா, நிருக்ஷனா, யதிக்ஷன், தஸ்வின், ஹரிஸ்னி, சுஜித்தா, சுகிந்தா, புகழ், ஜதிர்ஷன், டிலானி ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.01.2013) புதன்கிழமை மு.ப 10.00 மணிக்கு 3/1, ஸ்ரான்லிக் கல்லூரி வீதி, கச்சேரி கிழக்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3/1 ஸ்ரான்லிக் கல்லூரி வீதி,
கச்சேரி கிழக்கு யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## அஸ்ஸிராஜ் வித்தியாலயத்தில் ஆரம்பப் பாடசாலை ஆரம்பம்

அக்கரைப்பற்று,ஜன.8

2013 ஆம் ஆண்டில் அக்கரைப்பற்று அஸ்ஸிராஜ் மகாவித்தியாலயத்தில் ஆரம்பப் பாடசாலை ஆரம்பிப்பதற்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சால் அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

அரசின் ஆயிரம் பாட சாலைத்திட்டத்தின் கீழ் அக்கரைப்பற்று அஸ்ஸிராஜ் மகாவித் தியாலயம் உள்வாங் கப்பட்டதனால், 2013 ஆம் ஆண்டு முதல் ஆரம்பப் பாடசாலைக்கு மாணவர்கள் சேர்த்துக்கொள்ள அனுமதி வழங்கப்படவில்லை.

அதனையடுத்து அக்கரைப்பற்று அஸ்ஸிராஜ் மகாவித்தி யாலயத்துக்குட்பட்ட பெற் றோர்கள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எல்.தவத் திடம் ஆரம்பப்பாடசாலை ஆரம் பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளனர்.

அதனையடுத்து அவர் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் அதிகாரி களுடன் பேசி யதையடுத்து, 2013 ஆம் ஆண்டு மீண்டும் ஆரம்பப் பாடசாலை ஆரம்பிப் பதற்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ச.)

## அல் இக்பால்பாடசாலை மூடப்பட்டது

மட்டக்களப்பு,ஜன.8

மட்டக்களப்பு, காத்தான்குடி கல்விக் கோட்டத்தி லுள்ள புதிய காத்தான்குடி றிஸ்வி நகர் அல் இக்பால் வித்தியாலயம் நேற்று திங் கட்கிழமை மூடப்பட்டது.

இந்தப் பாடசாலைக்கென நிர்மாணிக் கப்பட்ட புதிய கட்டடத்தை பயன்படுத்தத் தருமாறு கேட்டு றிஸ்வி நகர் கிராம மக்களும் பாடசாலை மாணவர்களும் கடந்த புதன் கிழமை ஆர்ப்பாட்டம் செய்தனர்.

அதன்போது அங்கு வருகைதந்த மட்டக் களப்பு வலயக் கல்விப் பணிப் பாளர் ஏ.எம். அஹமட்,நேற்று திங்கட்கிழமை பாடசாலைக் கான புதிய கட்டடத்தை பெற்றுத்தருவதாக ஆர்ப் பாட்டக்காரார்களிடம் தெரிவித்திருந்தார்.

அந்தநிலையில் நேற்றுக் காலை குறித்த பாடசாலைக்கு சென்ற மட்டக் களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.அஹமட், கிழக்கு மாகாணசபை உறுப்பினர் சிப்லி பாறூக் ஆகியோர் பாடசாலைக்காக நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடத்தின் ஒரு பகுதியையே வழங்கினர்.

இந்தநிலையில் தமது பாடசாலைக் கான புதிய கட்டடத் தின் அனைத்து பகுதி களையும் தரவேண்டும் எனக் கேட்டு மீண் டும் பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் ஈடு பட்டனர்.

அதனால் பாட சாலை நேற்று மூடப் பட்டமை குறிப்பிடத் தக்கது. (ச)

## மரண அறிவித்தல்கள்

### வைத்திலிங்கம் நாகராஜா



சாவகச்சேரி சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வதிவிட மாகவும் கொண்ட வைத்திலிங்கம் நாகராஜா 06.01. 2013 ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான வைத்திலிங்கம் - மீனம்மா தம்பதி யரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பரமு - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் (மங்களம் - பரிஸ்), அன்புக் கணவரும், பரம்ஸ்ரீ (அப்பன் - இத்தாலி), நாகுலஸ்ரீ (பரிஸ்), ஸ்ரீஇளங்கோ (றங்கன் - நோர்வே), ஸ்ரீமலர் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பூங்கல்யா (இத்தாலி), அரியலிங்கம் (பரிஸ்), சிவகெங்கை (நோர்வே), கணேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், மயில்வாகனம், துரைராசா, வேலாயுத பிள்ளை மற்றும் சின்னத்துரை நடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கைலாயபிள்ளை மற்றும் பாக்கியலீலா (கனடா), வாமதேவன் (ஜேர்மனி), சாந்தா (இலங்கை), கைலேஸ்வரி (இலங்கை), கலாவதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ் சென்ற சிவப்பிரகாசம் மற்றும் கமலேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் மருமகனும், கௌசல்யா, மாதுளன், சங்கவி, சேரன், சாரங்கி, சங்கீதன், தரணிகா, குருபரன், கஜமுகன், லக்சி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மீசாலை கிழக்கு,
மீசாலை.
குடும்பத்தினர்.
0774528837, 0775774915

### சுப்பிரமணியம் சோதிலிங்கம்

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், அல்லைப்பிட்டியை வதிவிடமாகவும் தற்போது கொக்குவிலை நிரந்தரவசிப் பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சோதிலிங்கம் நேற்று முன்தினம் (06.01.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்- விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தையல்நாயகியின் அன்புக்கணவரும், சறோஜினிதேவி, நாகராசா, திலகவதி, கோவிந்தராணி, கமலாதேவி, காலஞ் சென்றவர்களான சதீஸ்குமார், றஞ்சித் குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான ஜெயகுண பாலன், கனகசபாபதி மற்றும் வசந்தகுமார், கருணானந்தன், லிங்கேஸ்வரன் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றியவிவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
32, அச்சுக்கூட வீதி,
கொக்குவில். (280780)(6)
குடும்பத்தினர்.


Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபபிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு -
0212224040 / 0772931062


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உண்மையான நோக்கத்தினை மூடி மறைப்பது இலகுவானதல்லவே...

சர்ச்சைக்குரிய வாழ்வெழுச்சித் திட்ட (திவிநெகும) சட்ட மூலம் தொடர்பான விவாதம் இலங்கை நாடாளுமன்றத்தில் இன்று இடம்பெறும் பரபரப்பான சூழ்நிலையில், பிரிட்டிஷ் மக்கள் பிரதிநிதிகள் சபையான கொமன்ஸ் சபையிலும் மேல்சபையான பிரபுக்கள் சபையிலும் இலங்கை விவகாரம் இன்று விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

பிரிட்டனில் தமிழ்மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் ஒன்றான மிட்சம், மோடன் பகுதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்கட்சியின் மக்கள் பிரதிநிதிகள் சபையின் பெண் உறுப்பினரான மக்டொனாக்கின் கோரிக்கையின் பேரில், இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போரில் பொதுமக்களைப் பேரழிவில் இருந்து பாதுகாக்க ஐ.நா. தவறியது தொடர்பான விவாதம் மக்கள் பிரதிநிதிகள் சபையிலும் (கொமன்ஸ் சபையிலும்)-

இலங்கை ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகள் தொடர்பாக, அப்பரிந்துரைகளை இலங்கை அரசு எந்த அளவுக்கு நடைமுறைப்படுத்தியுள்ளது என்பது தொடர்பாக பிரபுக்கள் சபையிலும் விவாதிக்கப்படவுள்ளது.

நாசெபி பிரபுவின் கோரிக்கையின் பேரில் இந்த விவகாரம் தொடர்பான விவாதத்துக்கு பிரபுக்கள் சபை ஒருமணிநேரம் ஒதுக்கியுள்ளது. பிரபுக்கள் சபையில் மனித உரிமைகளுக்காகக் குரல்கொடுத்து வரும் நாசெபி பிரபு, கடந்த வருடம் இலங்கை வந்து பலதரப்புகளுடனும் பேச்சு நடத்தியிருந்தார்.

இலங்கை அரசு பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீதான குற்றவியல் பிரேரணையிலும், சர்ச்சைக்குரிய வாழ்வெழுச்சித் திட்ட சட்ட மூலத்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றுவதிலும் முழுக்கவனம் செலுத்திவரும் இன்றைய நிலையில், பிரிட்டிஷ் மக்கள் பிரதிநிதிகள் சபையும், பிரபுக்கள் சபையும் இலங்கை தொடர்பான விவாதங்களை நடத்துவது, எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள ஐ.நா.மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்திலும் பொதுநலவாய நாடுகளின் உச்சிமாநாட்டிலும் இலங்கை எதிர்நோக்கவுள்ள ஆபத்துகளுக்கு கட்டியம் கூறுமொன்றாகக் கருதத்தக்கது.

இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களை மிகவும் உன்னிப்பாக அவதானித்து வரும் - அதேவேளை, புலம்பெயர் தமிழர்கள் கூடுதலாக வாழும் - பிரிட்டனும் கனடாவும் இலங்கையில் இவ்வாண்டு நடத்தத் திட்டமிட்டுள்ள பொதுநலவாய நாடுகளின் உச்சிமாநாடு தொடர்பாக கடுமையான அழுத்தங்களை எதிர்நோக்கி வருகின்றன.

இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பாக முன்னேற்றம் ஏற்படாவிடில் பொதுநலவாய நாடுகளின் உச்சிமாநாட்டைப் பகிஷ்கரிக்கப்போவதாக கனேடியப் பிரதமர் ஸ்டீபன் ஹாபெர் ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

இத்தகைய நிலையில் பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரோனுக்கும் இவ்விடயம் தொடர்பாக அழுத்தங்கள் இருந்து வருகின்றன. எதிர்க்கட்சியான தொழிற்கட்சி உறுப்பினர் மக்டொனாக், பிரிட்டிஷ் பிரதமருக்கு எழுதியிருக்கும் மிகவும் காரசாரமான கடிதம், இலங்கை தொடர்பான தனது தற்போதைய நிலைப்பாட்டை பிரிட்டிஷ் அரசு மறுபரிசீலனை செய்யவேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறது.

பொதுநலவாய நாடுகளின் உச்சிமாநாட்டை பிரிட்டன் பகிஷ்கரிக்கவேண்டும் என்று கோரியதுடன் அவர் நின்றுவிடவில்லை. இலங்கையில் அதனை நடத்தக்கூடாது என்றும் மக்டொனாக் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதுமட்டுமன்றி, பிரிட்டிஷ் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் மிகமுக்கிய விடயம் ஒன்றையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். விட்பே, காம்டர்ரொன், சிப்பிங் நோர்ட்டன் ஆகிய பகுதிகளின் முழு மக்கள் தொகைக்குச் சமனானவர்கள், வன்னி இறுதிப் போரில் பிரதமர் டேவிட் கமரோனின் தொகுதியைவிடக் குறைந்த நிலப்பரப்புள்ள ஒரு பகுதிக்குள் வைத்து அரசபடைகளால் அழிக்கப்பட்டுள்ளனர் என்று தமது கடிதத்தில் அவர் தெரிவித்திருப்பது முக்கியத்துவம் பெறும் ஒன்றாகும். அது பிரிட்டனில் பெரும் உணர்வலைகளைத் தோற்றுவித்துள்ளது.

இலங்கையில் இந்த ஆண்டில் இடம்பெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் உச்சிமாநாட்டில் பிரிட்டன் பங்குபற்றினால், இறுதிப் போரில் இடம்பெற்ற பேரழிவுகளுக்கு பிரிட்டனும் அங்கீகாரம் அளித்தது போன்றதாகிவிடும் எனவும் இலங்கை அரசுமீது சர்வதேச போர்க்குற்றவிசாரணை நடத்தப்படவேண்டும் என்றும் மக்டொனாக் வலியுறுத்தியுள்ளார்.

ஆகவே இறுதிப் போரில் இடம்பெற்ற பேரழிவுகளுக்குப் பொறுப்புக்கூறும் கடப்பாடு மூன்றரை ஆண்டுகள் கடந்த நிலையிலும், இலங்கையை அச்சுறுத்திக்கொண்டுதான் இருக்கிறது. இதனைக் கவனத்தில் எடுத்து அரசு ஜெனிவாத் தீர்மானம் தொடர்பாக ஆக்கபூர்வமான (கணிசமான) சில நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய தேவை தற்போது உருவாகியுள்ளது. ஜெனிவாவில் இலங்கையின் இறுதிப் போர் செயற்பாடுகள் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக மீண்டும் ஒரு தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றப்படுமானால், இலங்கையைத் தோல்வியடைந்த நாடுகள் பட்டியலில் இடம்பெறவைத்த 'பெருமை' இன்றைய ஆட்சியாளர்களையே சாரும்.

வாழ்வெழுச்சிச் சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதிலும், பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றவியல் பிரேரணையை நிறைவேற்றுவதிலும் காட்டப்படும் அவசரம், இலங்கை தொடர்பான ஜெனிவாத் தீர்மானத்தை செயற்படுத்துவதில் காட்டாதிருப்பது அரசின் போர்க்காலச் செயற்பாடுகளின் கொடுமை தழுவிய உள்நோக்கங்களை வெளிப்படுத்துகிறது எனக்கொள்வதில் தப்பில்லையே! எத்தனை காலம் தான் உண்மையை மறைத்து மெழுக முடியும்....?

---

### தென்மராட்சிப் பிரதேசத்தில்

# டெங்குத் தாக்கம் அதிகரிப்பால் நுளம்பு ஒழிப்பு வாரம் பிரகடனம்

தென்மராட்சி,ஜன.8

தென்மராட்சி பிரதேசத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து வருவதை அடுத்து சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் விசேட நுளம்பு ஒழிப்பு வார நிகழ்வுகள் மேற்கொள்ளப் படவுள்ளன.

அடுத்த வாரம் ஆரம்பிக்கவுள்ள விசேட நுளம்பு ஒழிப்பு வார செயற்பாடுகளில் பங்குபற்ற அனைத்து தரப்பினரின் ஒத்துழைப்பையும் சுகாதாரப் பகுதியினர் கோரியுள்ளனர்.

நேற்று சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெற்ற சுகாதாரப் பகுதியினர் மற்றும் பொலிஸார் பங்குபற்றிய கலந்துரையாடலில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

அங்கு தெரிவிக்கப்பட்ட புள்ளி விவரக் கணக்கின் பிரகாரம் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதத்தில் 21 பேரும், நவம்பரில் 37 பேரும் டிசெம்பரில் 40 பேரும் கடந்த ஆறாம் திகதி வரை 8 பேரும், தென்மராட்சி பிரதேசத்தில் டெங்கு நோயால் பீடிக்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

கடந்த வருடம் செப்ரெம்பரில் பெய்த கடும் மழையை அடுத்து டெங்கு நோயின் தாக்கம் பிரதேசத்தில் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த வருடம் அரசால் அறிவிக்கப்பட்ட தேசிய நுளம்பு ஒழிப்பு வாரத்தில் பிரதேசத்தில் உள்ள அனைத்து குடியிருப்புகள், வெற்றுக்காணிகள், பாடசாலைகள், ஆலயங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள், பொதுமக்கள் கூடும் இடங்கள் போன்றவற்றில் பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

இந்தப் பரிசோதனைகளில் சாவகச்சேரி, கொடிகாமம் பொலிஸார், அனைத்துப் பகுதி படையினர், இலங்கை செஞ்சிலுவைச் சங்க தென்மராட்சி கிளைத் தொண்டர்கள், சாவகச்சேரி நகரசபை, பிரதேசசபை, பொது அமைப்புக்கள், பிரதேச செயலகத்தினர், சுகாதாரத் தொண்டர்கள், கிராமிய தொண்டர் அமைப்புக்கள் போன்ற பலரின் பங்களிப்பு இருந்தது.

இருப்பினும் டெங்கு நோயால் பீடிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் அடுத்த வாரம் விசேட நுளம்பு ஒழிப்பு வாரம் அனுஷ்டிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

கடந்த வருடம் பிரதேசத்தில் நடத்தப்பட்ட தேசிய நுளம்பு ஒழிப்பு வார நிகழ்வுகளில் பங்குபற்றி ஒத்துழைத்த அனைவரின் பங்களிப்பையும் கோருவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

டெங்கு நோயைக் கட்டுப்படுத்த அனைத்து குடியிருப்பாளர்களும், தமது குடியிருப்புகள் மற்றும் காணிகளில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய இடங்களை இனங்கண்டு அவற்றைத் துப்புரவு செய்து வைக்குமாறும் கோரப்பட்டது. (ம-9)

## சுகாதாரமற்ற உணவால் 107 பேர் சிகிச்சை பெற்றனர்

### கடந்த வருட புள்ளி விவரத்தில் தகவல்

யாழ்ப்பாணம்,ஜன.8

பழுதடைந்த உணவை உட்கொண்டமை, வயிற்றோட்டம் என்பவற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் மாத்திரம் கடந்த வருடம் 107 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

புள்ளி விவரங்கள் மூலம் இதை அறிய முடிகின்றது என்று வைத்தியசாலைப் பதில் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.

வயிற்றோட்டத்தால் 82 பேரும், பழுதடைந்த உணவை உட்கொண்டதால் 25 பேரும் பாதிக்கப்பட்டு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர்.

வயிற்றோட்டத்தால் அதிகளவாக கடந்த வருடம் ஜனவரி மாதம் 12 பேரும், ஒக்ரோபர் மாதம் 7 பேரும், நவம்பர், டிசெம்பர் மாதங்களில் தலா 11 பேரும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஏப்ரல் மாதம் 9 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். ஏனைய மாதங்களில் ஐந்துக்கும் குறைந்த எண்ணிக்கையானவர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

பழுதடைந்த உணவுகளை உட்கொண்டதால் 25 பேர் பாதிக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்தனர்.

ஈரல் அழற்சி நோயால் பாதிக்கப்பட்டு 18 பேரும், மலேரியா காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு 16 பேரும் சிகிச்சை பெற்றனர்.

மேலும் மூளை மென்சவ்வு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு 20 பேர் சிகிச்சை பெற்றனர் என்று அவர் மேலும் கூறினார். (ம-4)

## வேம்பிராய் மயானத்தின் மக்கித்திடலுக்கு ஆபத்து

தென்மராட்சி,ஜன.8

மீசாலை வடக்கு வேம்பிராய் இந்து மயானப் பகுதியில் நீண்ட காலமாக காணப்படும் மக்கித்திடல் அண்மைக்காலமாக அகழ்ந்து வாகனங்களில் எடுத்துச் செல்வது குறித்து அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

வேம்பிராய் மயான சுற்றாடலில் பெரும் திடலாக மக்கி மண் காணப்படுகிறது. இவற்றை வாகனங்களில் ஏற்றிச் செல்வது கனிமவள திணைக்களத்தால் தடை செய்யப்பட்டுள்ளது.

15 தொடக்கம் 20 அடி வரையிலான உயரம் கொண்ட மக்கித்திடல் பாடசாலை மாணவர்களின் பாடத் திட்டத்தின் அடிப்படையில் மாணவர்கள் அழைத்து வரப்பட்டு காண்பிக்கப்படுவது வழமை.

அண்மைக் காலமாக வாகனங்களில் இந்த மக்கித்திடலை உடைத்து ஏற்றிச் செல்கின்றனர்.

இதனால் மயானமும் சேதமாக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் தலையிட்டு மக்கி அகழ்ந்து எடுப்பதைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் மக்கள் கேட்டுள்ளனர். (ம-9)

## வாழ்க்கை அத்தாட்சி பத்திரத்தை அனுப்புக

### ஓய்வூதியருக்கு அறிவுறுத்து

தென்மராட்சி,ஜன.8

கடந்த டிசெம்பர் மாத ஓய்வூதிய வவுச்சருடன் அனுப்பப்பட்ட வாழ்க்கை அத்தாட்சிப் பத்திரத்தை பூர்த்தி செய்து அந்தப் பகுதி கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்டு எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலக ஓய்வூதியக் கிளையில் ஒப்படைக்குமாறு தென்மராட்சி பிரதேச ஓய்வூதியர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேசம் தவிர்ந்த ஏனைய பிரதேச செயலர் பிரிவின் கிராம அலுவலரால் வாழ்க்கை அத்தாட்சிப் பத்திரம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தால் அந்தப் பிரதேச செயலகத்துக்கு ஓய்வூதியரின் கோவை அனுப்பி வைக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தினத்தில் வாழ்க்கை அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்காத ஓய்வூதியர்களுக்கு பெப்ரவரி மாத ஓய்வூதிய வவுச்சர் அனுப்பப் படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## இலங்கை நிர்வாக சேவை வெற்றிடங்களுக்கு புதியவர்கள்

முல்லைத்தீவு,ஜன.8

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவும் இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகளுக்கான வெற்றிடங்கள் புதியவர்களைக் கொண்டு நிரப்புவதற்கு வடமாகாண அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

கடந்த வருடம் நடத்தப்பட்ட இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகளுக்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து தெரிவு செய்யப் பட்டவர்களுக்கான உள்ளகப் பயிற்சிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

தெரிவு செய்யப்பட்டவர்கள் ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் உள்ளகப் பயிற்சியை மேற்கொண்டு வருகின்றனர். அவர்களில் இருந்து பொருத்தமானவர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இதேவேளை, வடமாகாண சபையில் காணப்படும் வெற்றிடங்களும் இவர்களைக் கொண்டே நிரப்பப்படவுள்ளதாகவும் அதற்கான நடவடிக்கைகளை வடமாகாணசபை மேற்கொண்டுள்ளது என்றும் கூறப்பட்டது.

வடமாகாண சபையில் சேவை மூப்பு அடிப்படையில் கடமையாற்றி வந்த சகல அதிகாரிகளதும் பணிகள் அனைத்தும் கடந்த வருட இறுதிப் பகுதியுடன் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இதனால் ஏற்படும் வெற்றிடங்களுக்கும் புதியவர்கள் நியமிக்கப் படவுள்ளனர் என்று தெரிய வருகிறது. (ம-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரும்பு கடத்தியோர் கைது இராணுவத்தின் சோதனையில்

கிளிநொச்சி, ஜன. 8

கிளிநொச்சி கோணாவில் பகுதியில் வாகனம் ஒன்றில் பழைய மோட்டார் சைக்கிள் மற்றும் வாகன உதிரிப்பாகங்களைக் கடத்திச் சென்ற மூவரைக் கைது செய்து வாகனத்தையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கிளிநொச்சி உதயநகர் பகுதியில் இருந்து மோட்டார் சைக்கிள் மற்றும் வாகன உதிரிப்பாகங்களை பழைய இரும்புக்காக அனுமதிப் பத்திரமின்றி இரவுவேளை குறித்த நபர்கள் ஏற்றிச் சென்றுள்ளனர்.

அவ்வேளை குறித்த வாகனத்தைக் கோணாவில் பகுதியில் வைத்து அப்பகுதி இராணுவத்தினர் சோதனையிட்டுள்ளனர். சோதனையின்போது உதிரிப்பாகங்கள் கடத்திச் சென்ற விடயம் தெரியவந்தது.

வாகனத்தையும் அதில் பயணம் செய்த மூவரையும் இராணுவத்தினர் கிளிநொச்சிப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-6)



கிளிநொச்சி பொது மருத்துவமனை வளாகத்தின் முன்பக்கத்தில் உள்ள குழியில் குப்பைகள், கழிவுகள் கொட்டப்பட்ட நிலையில் நீர் நிரம்பிக் காணப்படுகிறது. இதனால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன் நுளம்பு பெருகும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. (ஐ)

# சிறுவர்களுக்கு உதவிகள்



சிறுவர் அபிவிருத்தி நிறுவனத்தினால் முல்லைத் தீவு மாவட்டத்தில் உள்ள 300க்கும் மேற்பட்ட தாய் தந்தையர்களை இழந்த சிறுவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன.

இந்தப் பாடசாலை உபகரணங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கைவேலி, வள்ளிபுனம் மற்றும் மல்லிகைத்தீவு பகுதிகளில் உள்ள மாணவர்களுக்கே வழங்கப்பட்டன. பாடசாலை உபகரணங்களை சிறுவர் அபிவிருத்தி நிறுவ்னத்தின் தல்லவர் சி.வீ.கே.சிவஞானம் வழங்கினார். (த-86)

# வவுனிக்குளம் 23 அடி நீருடன் பாதுகாப்பாக இருக்கிறது

## நீர்ப்பாசன அதிகாரி தகவல்

அக்கராயன், ஜன. 8

வவுனிக்குளம் வால்கட்டு வெட்டப்பட்டிருந்ததால் 18 அடி நீரையே குளத்தில் தேக்க முடிந்திருக்கும். அந்த முயற்சிதவிர்க்கப்பட்டதால் தற்போது 25 அடி நீர் தேக்கப்பட்டுள்ளது என வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரி எஸ். சுதர்சன் தெரிவிக்கையில்:-

வவுனிக்குளம் புனரமைக்கப் பட்டமையினால் ஆபத்து எதுவும் ஏற்படாது என நம்பிக்கையுடன் இருந்தோம். இதன்மூலம் குளத்தின் நீர்மட்டம் பேணப்பட்டது. 1983 ஆம் ஆண்டும் அதிக மழை காரணமாக வால்கட்டு வெட்டப்பட்டது. அதன் காரணமாகக் குறைந்தளவு நீரே குளத்தில் தேக்க முடிந்தது.

ஆனால் குளம் புனரமைக்கப்பட்ட நிலையில் கூடுதல் நீரைக் குளத்தில் தேக்கியுள்ளோம் - என்றார். (ஐ-18)

## துணுக்காய் ஒருங்கிணைப்புக் குழு கூட்டம்

அக்கராயன்,ஜன.8

துணுக்காய் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உனைஸ் பாருக் தலைமையில் நடைபெறவுள்ள. இந்தக் கூட்டத்தில் அபிவிருத்தி விடயங்கள் ஆராயப்படும் என துணுக்காய் பிரதேச செயலர் சி.குணபாலன் அறிவித்துள்ளார். (ஐ-18)

# மாற்றுக் காணிகள் வழங்க கோரிக்கை

**வவுனிக்குளம், சிவபுரம்,பாலிநகர், மல்லாவிக்குளம் போன்ற இடங்களில் கழிவுக் காணிகளுக்கு பதிலாக**

அக்கராயன்,ஜன.8

துணுக்காய்ப் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள தாழ் நிலங்களில் சட்டவிரோதமாக மக்கள் குடியிருப்புகள் அமைத்திருப்பதால் அடிக்கடி வெள்ளப் பாதிப்புக்கு அவர்கள் இலக்காவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக வவுனிக்குளம், சிவபுரம்,பாலிநகர், மல்லாவிக்குளம் போன்ற இடங்களில் கழிவுக் காணிகளில் மக்கள் குடியிருக்கின்றனர்.

இவர்கள் நிரந்தர வீடுகளைக் கூட இந்தக் காணிகளில் அமைந்துள்ளனர்.

இந்தக் காணிகள் தாழ் நிலப்பகுதிகள் என கழித்து விடப்பட்டவை. இவற்றில் குடியிருப் பாளர்களது நடவடிக்கைகள் காரணமாக வெள்ள நீர் தேங்கி நிற்கும் நிலையே உருவாக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக வருடம் தோறும் இவர்கள் வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்றனர்.

இது குறித்து துணுக்காய்ப் பிரதேச செயலகம் கவனம் எடுத்து மாற்று வழிகளை மேற்கொள்ளவேண்டும் என நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். (ஐ-18)

# வவுனியா ஓட்டோ சாரதிக்கு வயோதிபர் கொடுத்த அதிர்ச்சி

வவுனியா, ஜன. 8

வயோதிபரை ஏமாற்ற முனைந்த ஓட்டோச் சாரதி ஏமாற்றமடைந்த சம்பவம் ஒன்று வவுனியா நகரில் இடம்பெற்றது.

கொழும்பில் இருந்து வவுனியாவுக்கு ரயில் மூலம் வந்த வயோதிபர் வவுனியா ரயில் நிலையத் தரிப்பிடத்தில் இறங்கினார். அவர் பம்பைமடுவுக்குச் செல்ல வேண்டும் என ஓட்டோச் சாரதியிடம் தெரிவித்தார். ஓட்டோச்சாரதி இரவு நேரம் என்பதால் 850 ரூபாவுக்குக் குறைய ஓட முடியாது என்று தெரிவித்ததையடுத்து குறிப்பிட்ட வயோதிபர் ஓட்டோவில் ஏறினார்.

மன்னார் வீதி வேப்பங்குளம், பட்டாணிச்சூர் பகுதியை வந்தடைந்ததும் ஓட்டோச் சாரதி மன்னார் வீதியில் மரக்காரம்பளை பகுதியின் ஊடாக வெள்ளநீர் பாய்ந்து ஓடுகிறது எனக் கூறியுள்ளார். வயிரவப்புளியங்குளம் ஊடாகச் சென்று பம்பைமடுவரை வந்தடைந்தது ஓட்டோ.

இதற்கிடையில் வயோதிபர் எஸ்.எம்.எஸ். மூலம் மரக்காரம்பளை பகுதியில் உள்ள உறவினருடன் தொடர்பு கொண்டு வெள்ளம் பாய்கிறதா? என்று கேட்டார். அதற்கு இல்லை என பதில் கிடைத்தது.

டிமிக்கி காட்டும் ஓட்டோச் சாரதிக்குப் பாடம் புகட்ட எண்ணிய வயோதிபர் இறங்க வேண்டிய இடத்தில் இறங்காமல் வேறு இடத்தில் இறங்கி அருகில் உள்ள ஆள் இல்லாத வீட்டின் பின்புறமாகச் செல்வதற்கு ஆயத்தமாகினார். எவ்வளவு காசு என்று ஓட்டோச் சாரதியிடம் அவர் கேட்டார். அவர் 2 ஆயிரம் ரூபா என்றதும் வாங்கிய வயோதிபர் தான் வீட்டுக்குள் சென்று தருவதாகவும் சொல்லிவிட்டு ஆள் இல்லாத வீட்டின் பின்புறமாக சென்று தனது சொந்த வீட்டை அடைந்தார்.

வயோதிபர் பணத்துடன் வருவார் என குறித்த இடத்தில் நீண்ட நேரமாகக் காத்திருந்த ஓட்டோச் சாரதி, கறக்க நினைத்த காசு கிடைக்காமையையிட்டு ஏமாற்றத்துடன் திரும்பினார். (த-402)



சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் ஏற்பாட்டில் கல்வியை ஊக்குவிக்கும் நோக்கோடு லண்டனைச் சேர்ந்த அன்பர் ஒருவர் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் உயர்தரத்தில் கல்வி பயிலும் மாணவி ஒருவருக்கு சைக்கிள் வழங்குகிறார். அருகில் பேரவைத் தலைவர் சிவகஜன், பாடசாலை அதிபர் உமா இராசையா ஆகியோர் உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளப் பாதிப்புக்கு நட்ட ஈடு வழங்குக

## மன்னார் விவசாயிகள் ஜனாதிபதிக்கு மனு

மன்னார், ஜன. 8

வெள்ளத்தால் ஏற்பட்ட பயிரழிவுகளுக்கு நட்ட ஈடு வழங்குமாறு கோரி மன்னார் மாந்தை மேற்குப் பிரதேச விவசாய அமைப்பு ஜனாதிபதிக்கு மனு ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மன்னார் மாவட்டத்தில் இதுவரை பல தசாப்தங்கள் காணாத மழை வெள்ளம் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நெற்பயிர்கள் அழிவடைந்துள்ளதுடன் பாதிக்கப்பட்டும் உள்ளது. மேட்டு நிலப் பயிர்ச் செய்கை அதிகம் அழிவடைந்தும் பாதிக்கப்பட்டும் உள்ளன.

அத்துடன் பல குளங்கள், உடைப்பெடுத்துள்ளதுடன் விவசாய வீதிகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

எனவே மன்னார் மாவட்டத்தில் கடந்த சிறுபோகத்திலும் வறட்சியால் அதிகமான பாதிப்பு ஏற்பட்டு நெற்பயிர்கள் அழிவடைந்த போதும் எமது விவசாயிகளுக்கு எதுவித நட்டஈடும் வழங்கப்படவில்லை. அவர்கள் வங்கி கடனை மீளச் செலுத்த முடியாமல் உள்ளனர்.

ஆனால் அக்காலத்தில் பாதிக்கப்பட்ட வடமத்திய மாகாணத்துக்கு கால போகத்துக்கு உதவிகள் வழங்கப்பட்டன. ஆனால் எமது வேண்டுகைக்கு இதுவரை

> விவசாயச் செய்கையையே நம்பி வாழும் நாம் கடன் பெற்றும் வங்கிகளில் நகை அடைவுவைத்தும், நீண்ட எதிர்பார்ப்புடன் விவசாயச் செய்கையில் ஈடுபட்டோம். ஏற்கனவே போரினால் ஏதிலிகள் ஆகியவர்கள் நாங்கள்.

பதில் கிடைக்கவில்லை.

எனவே எமது குடும்ப வாழ்வாதாரத்துக்கு விவசாயச் செய்கையையே நம்பி வாழும் நாம் கடன் பெற்றும் வங்கிகளில் நகை அடைவு வைத்தும், நீண்ட எதிர்பார்ப்புடன் விவசாயச் செய்கையில் ஈடுபட்டோம். ஏற்கனவே போரினால் ஏதிலிகள் ஆகியவர்கள் நாங்கள்.

எனவே அரசு பாதிக்கப்பட்ட எமது விவசாயிகளுக்கு முழுமையான நட்டஈடு வழங்க வேண்டும். அத்துடன் நாங்கள் மீண்டும் நெற்செய்கையில் ஈடுபட விதை நெல், உழவு கூலி, உரம் ஆகியன இலவசமாக வழங்க வேண்டும்.

அத்துடன் உடைப்பெடுத்த குளங்கள், கால்வாய்கள், விவசாய வீதிகள் இவற்றையும் மீளமைத்துத் தர வேண்டும் என்று அவசர அவசியமாக வேண்டுகை விடுக்கின்றோம். - என்றுள்ளது. (த-12)



நல்லூர் பிரதேச செயலகத்தில் நீண்ட காலம் கணக்காளராகப் பணியாற்றிய எஸ்.பத்மநாதன் யாழ். மாநகர சபைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். இதனை அடுத்து வருடாந்த ஒன்று கூடலின் போது பிரியாபசார நிகழ்வு இடம்பெற்றது. அதில் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கிறார். (ம-7)

# பரீட்சார்த்த மின் விநியோகம் குடாநாட்டில் தொடர்கிறது

யாழ்ப்பாணம்,ஜன. 8

யாழ். குடாநாட்டுக்கான 24 மெகாவாட்ஸ் மின்சார விநியோகம் தற்போது பரீட்சார்த்தமாக வழங்கப்பட்டு வரு கிறது.

எதிர்வரும் தைப்பொங்கலுக்குப் பின்னர் இந்த மின்சார விநியோகம் நிரந்தரமாக்கப்படும் பட்சத்தில் மின் விநியோகம் சீராக மக்களுக்குக் கிடைக்கும் என்று மின்சார அதிகாரி ஒருவர் கூறினார்.

குடாநாட்டில் தற்போது இடம்பெறும் வீதி அகலிப்பு புனரமைப்பு பணிகளுக்காக மின்சாரக் கம்பங்களைப் பின்னகர்த்துவதற்கும் மற்றும் புதிய கேபிள்கள் இணைப் பதற்கும் திருத்தப் பணிகளுக்காகவும் சில பிரதேசங்களில் மின்வெட்டுகள் இடம்பெறுகின்றன.

**சில இடங்களில் பழைய மின்சார இணைப்பு கேபிள்கள், மின் கம்பங்கள் என்பன மாற்றப் பட்டு புதிய இணைப்பு கேபிள்கள் பொருத்தி மின் கம்பங்கள் நடப் பட்டு வருகின்றன.**

இந்தத் திருத்தப் பணிகள் நிறைவு பெற்றால் சம்பந்தப்பட்ட பிரதேசங்களுக்கான மின்சாரம் சீராகக் கிடைக்கும்.

அதனை விடச் சில இடங்களில் பழைய மின்சார இணைப்பு கேபிள்கள், மின் கம்பங்கள் என்பன மாற்றப் பட்டு புதிய இணைப்பு கேபிள்கள் பொருத்தி மின் கம்பங்கள் நடப்பட்டு வருகின்றன.

இதன்போது மின்சார விநியோகத்தில் தடங்கல் ஏற்படுகின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-17)

# கசிப்புடன் பெண் கைது

வரணி,ஜன.8

வரணி மாசேரிப் பகுதியில் நீண்டகாலமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட பெண் ஒருவர் நேற்று முன்தினம் சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொதுமக்கள் வழங்கிய தகவலை அடுத்து, மாசேரிக் காட்டுப் பகுதிக்குள் தாம் மறைந்திருந்து குறித்த பெண்ணை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபரான பெண் நேற்று முன்தினம் நண்பகல் காட்டுக்கு விறகுவெட்ட செல்வது போல் சென்று 15 லீற்றர் வரையான கசிப்பை எடுத்து வந்த வேளை கைதாகியுள்ளார் என்று பொலிஸார் தெரி வித்தனர்.

இவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-9- 122)

# வீதி திருத்தப் பணிகள் மும்முரம்

## ஜனாதிபதியின் வருகையை முன்னிட்டு

யாழ்ப்பாணம்,ஜன. 8

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளதை முன்னிட்டுப் பிரதான வீதிகளின் புனரமைப்புப் பணிகள் துரிதப் படுத்தப்பட்டுள்ளன.

ஆஸ்பத்திரி வீதிச் சந்தியில் இருந்து செல்லும் பலாலி வீதி நல்லூர் கோயில் வீதியில் உள்ள இராமலிங்கம் வீதி, கோப்பாய் இராச வீதி மற்றும் நகரில் கே.கே.எஸ் வீதி என்பவற்றின் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

**இந்த வீதிகள் இரவிலும் மின்சார வெளிச்சத்தில் திருத்தப்பட்டு வருகின்றன.**

இந்த வீதிகள் இரவிலும் மின்சார வெளிச்சத்தில் திருத்தப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் 14 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகை தரும் ஜனாதிபதி யாழ்.போதனா வைத்தியசாலை மற்றும் நல்லூர் கந்தசுவாமி கோயில், கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி, நயினாதீவு போன்ற இடங்களுக்குச் செல்லவுள்ளார்.

இந்த நிலையிலேயே வீதிகளின் புனரமைப்புப் பணிகள் இரவு, பகல் பாராது இடம் பெற்று வருகின்றன.(ம-17)

# திணைக்களங்களுக்கு வாகனங்கள் வசதி

யாழ்ப்பாணம் ஜன.8

யாழ்.மாவட்டத்திலுள்ள சில திணைக்களங்களுக்கு வாகனங்களும் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்களும் அண்மையில் வழங்கப்பட்டன.

கனேடிய சர்வதேச அபிவிருத்தி முகவரமைப்பின் நிதி உதவியில் யாழ்ப்பாணத்தில் வைத்து இவை வழங்கப்பட்டன.

யாழ். மாவட்ட விவசாய பயிற்சி நிலையம், விதை உற்பத்திப் பண்ணை என்பனவற்றுக்கு 7 ஓட்டோக்களும் விவசாயத் திணைக்களத்தைச் சேர்ந்த விவசாய போதனாசிரியர்களுக்கு 17 மோட்டார் சைக்கிள்களும், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தைச் சேர்ந்த கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு 9 மோட்டார் சைக்கிள்களும் வழங்கப்பட்டன.

வட மாகாண விவசாய கால்நடை அபிவிருத்தி நீர்ப்பாசன காணி கடற்றொழில் அமைச்சின் செயலாளர் யு.எல்.எம்.ஹால்டீன் இந்த வாகனங்களை கையளித்தார்.

(ம-4)

# நயினாதீவு வெளிச்சவீடு விரைவில் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஜன. 8

நயினாதீவில் உள்ள வெளிச்சவீடு விரைவில் புனரமைக்கப்படவுள்ளது என்று வேலணை பிரதேச சபையின் உறுப்பினர் சி.ந.கருணாகரகுரு மூர்த்தி தெரிவித்தார்.

சபையால் இதற்கென ஒதுக்கப்பட்ட நிதி மூலம் இந்த வெளிச்சவீட்டை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இரவு வேளைகளில் கடலில் பயணம் செய்யும் படகுகளின் வசதி கருதியும் மற்றும் கடற்றொழிலாளர்களின் பாதுகாப்புக் கருதியும் இந்த வெளிச்ச வீடு புனரமைக்கப்படவுள்ளது.

குறிப்பாக இரவு வேளைகளில் நெடுந்தீவில் இருந்து பயணிகளுடன் வருகை தரும் படகுகள் குறிகாட்டுவான் துறையை எட்டமுடியாது திசை மாறிச் செல்லும் நிலை காணப் படுகின்றது.

இருள் சூழ்ந்த நேரத்திலும் மற்றும் மழை காலங்களிலும் இவ்வாறான நிலையில் படகுகள் வெளிச்ச வீடு இன்றிச் சிரமம் அடைகின்றமை குறிப்பிடத் தக்கது. (ம-17)



காரைநகர் பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 800 பேருக்கு உலர் உணவுப் பொருள்கள் கடந்த வாரம் வழங்கப்பட்டன. காரைநகர் பிரதேச சபை உறுப்பினர் வீ.கண்ணன் உலர் உணவுப் பொருள்கள் வழங்குகிறார். (ம-250)

# நல்லூர் ஆலயச் சூழலில் காவலரண் அகற்றப்படவில்லை

யாழ்ப்பாணம்,ஜன. 8

நல்லூர் ஆலயச் சுற்றாடலில் இராணுவத்தினர் அமைத்துள்ள காவலரணை உடனே அகற்றுவதாக யாழ். மாநகர முதல்வர் அறிவித்திருந்தார்.

ஆனால் ஒருவாரம் ஆகிவிட்ட போதும் அது அகற்றப் படவில்லை.

மாறாக முன்னர் இருந்த இடத்திலிருந்து சற்றுவிலகி காவலரண் அமைத்து தொடர்ந்தும் தங்கியுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை காவலரணை அமைத்திருந் தனர். இதனால் பலரும் அதிருப்தி வெளியிட்டு வந்தனர்.

அதனைத் தொடர்ந்து கடந்த வியாழனன்று மாநகர முதல்வர் செய்தியாளர் சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தார்.

அதன்போது நல்லூர் சுற்றாடலில் அமைக்கப்பட்ட இராணுவ காவலரண் விரைவில் அகற்றப்படும்.

அது தொடர்பில் இராணுவக் கட்டளைத் தளபதியுடனும் இங்குள்ள படை அதிகாரிகளுடனும் கலந்துரையாடி காவலரணை விரைவில் அகற்றுவேன் என்று கூறியிருந்தார்.

ஆனால், அவர் அவ்வாறு கூறி இன்றுடன் ஐந்து நாளாகின்ற போதும் காவலரண் அகற்றப்படவில்லை. மாறாக அது நகர்ந்து பிறிதொரு இடத்தில் தொடர்ந் தும் உள்ளது.

மாநகர முதல்வர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதற்கான காரணத்தை அவர் கூறவில்லை.

இராணுவத்தினரும் அந்த இடத்தில் காவலரண் அமைத்ததற்கான காரணத்தைக் கூறவில்லை இந்த நிலையில் ஆலயத் துக்குச் சென்று வருபவர்கள் உட்பட பலரும் இது தொடர் பில் விசனம் தெரிவித்துள் ளனர்.

சரித்திரப் பிரசித்தி பெற்ற ஆலயத்தின் அருகே இந்தக் காவலரண் வேண்டப்படாத ஒன்று. அதனை அகற்ற வேண்டும் என்று கூறுகின்றனர். (ம-4- 17)

# அச்சுவேலி பஸ் தரிப்பிடம் தைப்பூசத் தினத்தில் திறப்பு

யாழ்ப்பாணம்,ஜன. 8

வலி.கிழக்கு பிரதேச சபையால் அமைக்கப்பட்ட அச்சுவேலி மத்திய பஸ் தரிப்பிட கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் யாவும் நிறைவு பெற்றுள்ளன. இந்தப் புதிய பஸ்தரிப்பிடம் நவீன முறையில் சுமார் 25 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய பஸ்தரிப்பிடக் கட்டடம் மற்றும் அதற்கு அருகில் அமைக்கப்பட்ட மரக்கறிச் சந்தைக் கட்டடம் போன்றவற்றை எதிர்வரும் தைப்பூசத் தினத்தில் திறந்து வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அச்சுவேலிப் பகுதியில் பஸ் நிலையம் ஒன்றை அமைப்பதற்கு தனியார் ஒருவர் சபையிடம் அனுமதி கேட்டு விண்ணப்பித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (ம-17)

# மண்டைதீவு பிரதேசத்துக்கு இந்த மாதம் மின்சாரம்

யாழ்ப்பாணம்,ஜன. 8

மண்டைதீவுப் பிரதேசத்துக்கான மின் விநியோகம் இந்த மாதத்துக்குள் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது என்று மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் பிரதேச மக்களுக்கு மின்சார விநியோகத்தை ஏற்படுத்துவதற்கான ஆரம்பகட்ட மின் இணைப்பு பணிகள் மிகவும் துரிதமாக மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

ஏற்கனவே மின்கம்பங்கள் அமைக்கப்பட்டுள்ளதோடு அதற்கான மின் விநியோக பிரதான மார்க்க மின்சார இணைப்புப் பணிகளும் இடம்பெற்று வருகின்றன.

இந்த மாதத்துக்குள் பணிகள் நிறைவடைந்து விடும்.

அடுத்து மின் விநியோகம் மேற்கொள்ளப்படும் என்று மேலும் கூறப்பட்டது.

இதேவேளை, புங்குடுதீவு, இறுப்பிட்டி பிரதேசத்துக்கு விரைவில் மின்சாரம் விநியோகிக்கப்படவுள்ளது.

இந்தப் பிரதேசத்துக்கு மின்சார விநியோகத்தை ஏற்படுத்தும் முகமாகத் தற்போது இரண்டு மின்மாற்றிகள் அங்கு அமைக்கப்பட்டுள்ளன.

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்த மின் விநியோகம் பிரதேச மக்களுக்கு வழங்கப் படவுள்ளது.

ஊர்காவற்றுறையில் இருந்து பிரதான மின் மார்க்கம் ஊடாக மின்சார விநியோகம் இந்தப் பிரதேசத்துக்கு ஏற்படுத்தப்படவுள்ளது.

புங்குடுதீவில் சகல பிரதேசங்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட்ட நிலையில் இறுப்பிட்டிப் பகுதிக்கு இதுவரைக்கும் மின் விநியோகம் வழங்கப்படாமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலியல் குற்றவாளிகளுக்கு ஆண்மை நீக்கும் யோசனை

### நிராகரித்தது காங்கிரஸ்

டில்லி, ஜன.8

பாலியல் வன்புணர்வில் ஈடுபடும் குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனையாக நீதிபதி ஜே.எஸ். வர்மா தலைமையிலான குழு பரிந்துரைத்த ஆண்மை நீக்க யோசனையை காங்கிரஸ் கட்சி நிராகரித்துள்ளது.

டில்லி மாணவி பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டு உயிரிழந்த பின்னர் பாலியல் வன்கொடுமை சட்டங்களில் திருத்தம் கொண்டுவந்து, தண்டனைகளை கடுமை யாக்க வேண்டும் என்கிற கோரிக்கை எழுந்தது. மத்திய அரசும் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, நீதிபதி ஜே.எஸ்.வர்மா தலைமையில் ஒரு குழுவை அமைத்து, பாலியல் வன்புணர்வில் ஈடுபட்ட குற்றவாளிகளுக்கு என்னென்ன தண்டனைகள் வழங்கலாம் என்பது குறித்து ஆலோசனை வழங்கக் கேட்டுக்கொண்டது.

வர்மா குழு அனுப்பிய யோசனைகளில் இளம் குற்றவாளிகள் என்று கருதப்படும் குற்றவாளிகளின் வயது வரம்பைக் குறைத்தல், 30 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கல், வழக்குகளை விரைந்து முடிக்க விரைவு நீதிமன்றங்கள் அமைத்தல், போன்ற யோசனைகளை பரிசீலிக்க காங்கிரஸ் முடிவு செய்துள்ளது.

## வன்புணர்வால் உயிரிழந்த மாணவியின் பெயரை வெளியிட்டார் அவரது தந்தை

டில்லி, ஜன.8

டில்லியில் 6 பேர் கொண்ட கும்பலால் பாலியல் வன்புணர்வுக்குள்ளாகி உயிரிழந்த தனது மகளின் பெயர் 'ஜோதி சிங் பாண்டே' என்று அவரது தந்தை பத்ரிசிங் பாண்டே பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார்.

மகளின் பெயரை உலகம் அறிந்து கொள்ளட்டும். எனது மகளைப் போன்று பாதிக்கப்பட்டு உயிர் வாழ்ந்து வரும் இந்தியப் பெண்களுக்கு இது உத்வேகமாக இருக்கட்டும். இதை பெருமையுடன் அறிவிக்கிறேன் என்று கூறியுள்ளார்.



டில்லியில் ஓடும் பஸ்ஸில் தனது ஆண் நண்பருடன் பயணித்த 23 வயதுடைய மருத்துவ பீட மாணவியை 6 பேர் கொண்ட கும்பல் வன்புணர்வுக்குட்படுத்தினர். பின்னர் இரண்டு வாரம் உயிருக்குப் போராடி சிங்கப்பூர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு உயிரிழந்தார். அவரது பெயர் உள்ளிட்ட விபரங்களை [illegible] பொலிஸ் துறையும் அரசும் வெளியிடவில்லை.

ஆனால் அவரது பெயரை வெளியிட வேண்டும், அவரைக் கௌரவப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைகள் எழுந்தன. மத்திய இணை அமைச்சர் சசி தரூரும் இக்கோரிக்கையை வைத்தார். மேலும் புதிய திருத்தப்பட்ட வன்புணர்வு குற்றத் தடுப்புச் சட்டத்திற்கு அந்தப் பெண்ணின் பெயரைச் சூட்ட வேண்டும் என்றும் அவர் கோரினார்.

இந்த நிலையில் குறித்த மாணவியின் தந்தை பத்ரிசிங் பாண்டே தற்போது தனது மகளின் பெயரை பகிரங்கமாக அறிவித்துள்ளார். இதுதொடர்பாக லண்டனைச் சேர்ந்த 'தி சண்டே பீப்பிள்' என்ற பத்திரிகைக்கு அவர் பேட்டி அளித்துள்ளார். அதில் அவர் தனது மகளின் பெயர் ஜோதி சிங் பாண்டே என்று குறிப்பிட்டுள்ளார். (வ)

## தி.மு.கவின் அடுத்த தலைவர் ஸ்டாலினே

### கருணாநிதி உறுதி



சந்தர்ப்பம் கிடைத்தால் அடுத்த தலைவர் பதவிக்கு ஸ்டாலின் பெயரை முன்மொழிவேன் என்று கருணாநிதி உறுதிபடத் தெரிவித்தார்.

சென்னை, அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க கட்சியின் மாவட்ட செயலாளர்கள் கூட்டம் தலைவர் கருணாநிதி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தின் பின் கருணாநிதி செய்தியாளர்களிடம் அளித்த பேட்டியில், சந்தர்ப்பம் கிடைதால் தலைவர் பதவிக்கு ஸ்டாலின் பெயரை முன்மொழிவேன்.

தலைவர் பதவிக்கு ஸ்டாலின் பெயரை முன்மொழிந்தால் என்னதவறு என்று கேள்வி எழுப்பினார். ஏற்கனவே தலைவர் பதவிக்கு ஸ்டாலின் பெயரை அன்பழகன் முன்மொழிந்துள்ளார்-என்றார்.

# பிரிவினைவாத அமைப்புகளுடன் இனிமேல் பேச்சுக்கு இடமில்லை

### மத்திய அரசு உறுதி

கவுகாத்தி, ஜன.8

வடக்கு,கிழக்கு மாநிலங்களில் செயற்படும், பிரிவினைவாத அமைப்புகள் உட்பட நாட்டின் எந்தப் பகுதியில் செயற்படும் பிரிவினைவாத அமைப்புகளுடனும் இனிமேல் அமைதிப் பேச்சுக்கே இடமில்லை என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மத்திய உள்துறையில், வட கிழக்கு மாநில விவகாரங்களைக் கவனிக்கும் பிரிவின் இணைச் செயலர், ஷாம்பு சிங் நேற்று முன் தினம் மேகாலயாவில் செயற்படும், பிரிவினைவாத அமைப்பான ஏ சிக் தேசிய தன்னார்வ குழு உறுப்பினர்களுடன் கவுகாத்தியில் பேச்சு நடத்தினார். பேச்சுக்குப்பின் அவர் தெரிவித்ததாவது:-



நாட்டில் உள்ள எந்த பிரிவினைவாத அமைப்புடனும் இனிமேல் அமைதிப் பேச்சுக்கு இடமில்லை. ஒவ்வொரு முறையும் நாம் ஒரு பிரிவினைவாத அமைப்பினரைப் பேச்சுக்கு அழைக்கிறோம்; அவர்களும் வருகின்றனர். ஆனால் அந்த அமைப்பிலிருந்து திடீரென ஒரு பகுதியினர் வெளியேறி அரசுக்கு எதிராக சட்ட விரோத மற்றும் நீதிக்குப் புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

பின்னர் தங்களுடன் அரசு பேச்சு நடத்த வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். அதற்கு இணங்கி அரசும் பேச்சு நடத்தினால் பொருத்தமற்ற கோரிக்கைகளை முன்வைக்கின்றனர். அவர்களின் கோரிக்கைகள் எல்லாம் நிறைவேற்ற முடியாதவை. அவ்வாறானவர்கள் அரசிடம் சரணடைவதே சரியானது. மேகாலயாவில் செயற்படும், 'கேரோ தேசிய விடுதலை இராணுவ' அமைப்பினர் குண்டர்கள் அடங்கியுள்ள அமைப்பு. அவர்களுடன் பேச்சு நடத்த மத்திய அரசுக்கோ, மாநில அரசுக்கோ ஆர்வமில்லை.

அவர்களை எந்த வகையில் ஒடுக்க வேண்டுமோ; அந்த வகை யில் ஒடுக்குவோம். குண்டர்கள் இடம் பெற்றுள்ள அந்த அமைப்பினர், மக்களிடம் இருந்து பணம் பறிக்கின்றனர்; அவர்களை துன்புறுத்துகின்றனர்.

இவ்வாறான குண்டர்களை எல்லாம் அரசு எப்படி பேச்சுக்கு அழைக்க முடியும்- என்றார். (வ)

## ஐ.ஓ.சி.பெற்றோல் கிடங்கில் தீ; 3 பேர் சாவு; ரூ.45 கோடி நட்டம்

சூரத், ஜன.8

குஜராத் மாநிலத்தில் இந்தியன் எண்ணெய்க் கூட்டுத்தாபன பெற்றோல் கிடங்கில் ஏற்பட்ட பயங்கரமான தீ விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர்.

குஜராத் மாநிலத்தில் ஹஸிரா என்ற இடத்தில் ஐ.ஓ.சி. நிறுவனத்துக்கு சொந்தமான 9 பெற்றோல் சேமிப்புக் கிடங்குகள் உள்ளன. அதில் 5 ஆயிரம் கிலோ லீற்றர் பெற்றோல் இருந்த கிடங்கு கடந்த திங்கட்கிழமை தீப்பிடித்தது. கொழுந்துவிட்டு எரிந்த தீ 24 மணி நேர போராட்டத் துக்குப் பின்னர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

குறித்த தீ விபத்தில் கடந்த சனிக்கிழமை இருவரும், நேற்று முன்தினம் ஒருவரும் உயிரிழந்தனர். இறந்த மூவரும் ஒப்பந்தத் தொழிலாளர்கள். மத்திய பெற்றோலியத்துறை அமைச்சர் வீரப்பமொய்லி சம்பவ இடத்துக்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். (வ)

## சேவை வரியைக் கண்டித்து நடிகர்கள் உண்ணாவிரதம்



மத்திய அரசு நடைமுறைப்படுத்தியுள்ள சேவை வரி திரையுலகினருக்கு கடும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறி தமிழக திரையுலகினர் நேற்று உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர். படப்பிடிப்பு மற்றும் சினிமாக் காட்சிகளை ரத்து செய்துவிட்டு தமிழ் திரையுலகினர் சென்னை, வள்ளுவர் கோட்டம் அருகே நேற்று மேற்படி போராட்டத்தில் ஈடுபட்டனர். நடிகர் சங்கம் உள்ளிட்ட 14 அமைப்புகளைச் சேர்ந்தோர் இதில் கலந்துகொண்டனர். (வ)

## காஷ்மீர் எல்லையில் மோதல்; பாக்.சிப்பாய் உயிரிழப்பு

ஜம்மு, ஜன.8

காஷ்மீர் எல்லையில் இந்தியப் படையினர் தாக்குதல் நடத்தியதில் பாகிஸ்தான் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். மேற்படி மோதல் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

எல்லையின் குறுக்காக இருதரப்பும் ஒருவர் மீது மற்றவர் துப்பாக்கியால் சுட்டனர். இதில் பாகிஸ்தானிய சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். கட்டுப்பாட்டு எல்லையைத் தாண்டி வந்து ஹாஜி பிர் வட்டகையிலுள்ள பாகிஸ் தானிய இராணுவ நிலை ஒன்றை இந்திய இராணுவம் தாக்கியதாகக் கூறப்படுகின்ற குற்றச்சாட்டை இந்தியா மறுத்துள்ளது.

கடைப்பிடிக்கப்பட்டு வரும் போர்நிறுத்தத்தை பாகிஸ்தானிய படையினர் மீறியதால்தான் தமது படையினர் பதிலுக்குச் சுட நேர்ந்தது என்று இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.


## பணிநிலை வேண்டுகை

1 வரவேற்பாளர் (Receptionist)
(ஆங்கில / சிங்கள மொழிகள் சரளமாகப் பேசக்கூடியவர்கள்)

2 நேரச்சு இயக்குனர்
(Offset Machine Minder -KOR A/D/S)

3 கணினி வடிவமைப்பாளர்
(Computer Graphic Designer)
(Adobe Photoshop, Indesign)

4 கணினி தட்டெழுத்தாளர்
(Computer Typist - Tamil / English / Sinhala)

பணிநிலை 2, 3, 4 விடயங்களுக்கு அச்சக அனுபவம் உள்ளவர்கள் மட்டும் நேரில் வரவும்.

09-10 .01.2013 (புதன், வியாழக் கிழமைகளில்) காலை 10 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை நேரில் வரவும்

HARIKANAN (Pvt.) Ltd.
Printers of the North
1st Floor, 681, K.K.S. Road, Jaffna.

* நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்ட நேரம் கவனத்திற் கொள்ளப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூக வலைத் தளங்களை கட்டுப்படுத்த மென்பொருள்

### பரீட்சிக்கிறது ஈரான்

தெஹ்ரான், ஜன.8

சமூக வலைத்தளங்களை கட்டுப்படுத்தக்கூடிய நவீன மென்பொருளை ஈரான் வடிவமைத்துள்ளது.

பேஸ்புக், டுவிட்டர் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் முஸ்லிம்களுக்கு எதிரான கருத்துகள், ஆபாச படங்கள் பரவுவதாக முறைப்பாடு எழுந்தது.

அதையடுத்து ஈரானில் இணையத்தளங்கள் கண்காணிக்கப்பட்டு வருவதுடன், இவ்வாறான தகவல்கள் பரவுவதை கட்டுப்படுத்துவது குறித்து ஆராயப்படுமென ஈரானிய அரசு தெரிவித்திருந்தது.

இந்தநிலையில் ஈரான் பாதுகாப்புத்துறை அதிகாரி இஸ்மாயில் அகமது முகாதம் கூறுகையில்,

''சமூக வலைத்தளங்களை கட்டுப்படுத்தக்கூடிய நவீன மென்பொருளை வடிவமைத்து வருகிறோம். இதன் மூலம் சமூகத்துக்கு பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய விடயங்களை கட்டுப் படுத்தலாம்.

தற்போது இந்த மென்பொருளை சோதனை ரீதியாக பயன்படுத்தி வருகிறோம். இதன் மூலம் பொதுமக்கள் தங்களுக்கு தேவையான பயனுள்ள தகவல்களை மட்டுமே பெறமுடியும்'' என்று தெரிவித்துள்ளார்.

## அரச ஆவணங்களில் இனி பலஸ்தீன் என குறிப்பிடுக

### ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் பணிப்பு

காஸா, ஜன.8

அரச ஆவணங்களில் பலஸ்தீன் என்று உத்தியோகபூர்வமாக குறிப்பிடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அனைத்து அரச ஆவணங்களிலும் இதுவரை பலஸ்தீன் அதிகார சபை என்றே குறிப்பிடப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் 'ஸ்டேட் ஒஃப் பலஸ்தீன்' என்று குறிப்பிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

நாட்டின் இறைமையை பாதுகாப்பதற்கும் பலஸ்தீனின் எதிர்காலத் திட்டங்களுக்கும் இந்த செயற்பாடு உந்து சக்தியாக அமையும் என ஜனாதிபதி அப்பாஸ் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்புரிமையற்ற பார்வையாளர் அந்தஸ்து அண்மையில் பலஸ்தீனத்துக்கு கிடைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அடிபணியாது சிரியா


## ஆதரவாளர்கள் மத்தியில் அசாத்

டமஸ்கஸ், ஜன.8

அரசுக்கு எதிரானவர்கள் கடவுளின் எதிரிகள். அவர்களை எதிர்கொள்ள நாடு எல்லாவிதத்திலும் தயாராகவே உள்ளது என்று கூறியிருக்கிறார் சிரிய ஜனாதிபதி பஸார் அல் அசாத்.

சிரியாவில் எதிர்த்தரப்பினருடனான மோதல்கள் மிகவும் மும்முரமடைந்துள்ள நிலையில் கடந்த ஜூன் மாதத்துக்குப் பிறகு அந்த நாட்டின் ஜனாதிபதி அசாத் முதற் தடவையாக மீண்டும் நாட்டு மக்களுக்கு உரையாற்றியுள்ளார்.

மத்திய டமஸ்கஸின் அரங்கம் ஒன்றில் தனது ஆதரவாளர்களின் மகிழ்ச்சி ஆரவாரங்களுக்கு மத்தியில் உரையாற்றிய அசாத்-



''இந்த கிளர்ச்சிக்கு உள்நாட்டுக் காரணங்களை விட அதிகமான வெளிநாட்டு காரணங்கள் பலவும் இருக்கின்றன. சிரியாவை பிளவுபட்ட ஒரு நாடாகப் பார்க்க வெளிநாடுகள் விரும்புகின்றன. வேறு சிலர் சிரியாவை பலவீனமாக்க முனைகின்றனர். வேறு சிலர் குற்றவாளிகளுக்கு பயிற்சியையும் ஆயுதங்களையும் வழங்குகிறார்கள். அண்டைநாடுகள் சிரியாவுக்கு எதிராக திரண்டுள்ளன. ஆனால் சிரியாவின் மக்கள் என்றும் பலமாகவே இருக்கிறார்கள். அவர்களை பிரிவடைய நான் என்றும் விடமாட்டேன்.

எந்தவொரு முடிவும் மக்களின் விருப்பத்தின் பேரிலேயே மேற்கொள்ளப்படும். தேசிய மட்டத்தில் ஒரு சமரச பேச்சையும் மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பையும் நடத்துவதற்கான வாக்கெடுப்பை நடத்துவதற்கான திட்டம் ஒன்றை தயாரித்துள்ளேன். இராஜதந்திர அடிப்படையிலான நகர்வுகளை சிரியா என்றும் நிராகரித்தது கிடையாது. ஆனால் பயங்கரவாதக் கருத்துக்களைக் கொண்ட நபர்களுடன் சிரியா என்றும் சமரசம் செய்யாது. அப்படியானவர்களுடன் சமரசம் செய்ய நாம் முற்பட்டால் அது சிரியாவை பலவீனமாக்கும்'' என்றார்.

### அமெரிக்கா கண்டனம்

வோஷிங்டன், ஜன.8

சிரியா ஜனாதிபதி அசாத்தின் உரைக்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

அசாத் தனது உரையின் போது ''பயங்கரவாதத்தில் மட்டும் நம்பிக்கை கொண்டவர்களுடனும், மேற்கத்திய நாடுகளின் கைப்பாவையாகச் செயல்படுபவர்களுடனும் பேச்சுக்கள் நடத்த முடியாது'' என்று கூறியிருந்தார்.

அதற்குக் கண்டனம் தெரிவித்துள்ள அமெரிக்கா, அசாத்தின் உரை மீண்டும் அவர் ஆட்சி அதிகாரத்தை தக்கவைப்பதிலேயே குறிக்கோளாக இருப்பதை காட்டுகிறது. மக்களின் மாற்றத்திற்கு ஏற்றதாக இல்லை என்று தெரிவித்துள்ளது.

## அமெ. பாதுகாப்புச் செயலாளராக சக் ஹெகல்



வோஷிங்டன், ஜன.8

அமெரிக்க பாதுகாப்புச் செயலாளராக சக் ஹெகலை அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா நியமிப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க புதிய பாதுகாப்புச் செயலாளராக சக் ஹெகலை ஒபாமா அறிவிக்க உள்ளார் என்றும் குடியரசு கட்சி இதற்கான ஒப்புதல் வழங்கும் என்றும் தெரியவந்துள்ளது.

66 வயதான சக் ஹெகல், முன்னாள் குடியரசுக் கட்சியின் பிரதிநிதிகள் சபையின் உறுப்பினராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சீனாவில் உறைந்தது கடல்நீர் முடங்கின 1,000 கப்பல்கள்



பீஜிங், ஜன.8

மூன்று தசாப்தங்களுக்கு பிறகு சீனாவில் கடும் உறைபனி காலநிலை தற்போது நிலவி வருகின்றது. அதனால், கடல்நீர் பனியாக உறைந்துவிட்டது. சீனாவின் லயோனிங் மாகாணம், ஜினோஹூ பகுதியில் உள்ள துறைமுகத்தில் 1,000 கப்பல்கள் மற்றும் வள்ளங்கள் தமது பயணங்களை மேற்கொள்ள முடியாது தரித்து நிற்கின்றன.

சீனாவில் மைனஸ் 7.4 டிகிரியாக வெப்பநிலை குறைந்துள்ளது. பெருங்கடலும்கூட உறைபனியாகி உள்ளது.

இதனால் ஆயிரக்கணக்கான கப்பல்கள் ஐஸ் கட்டிகளுக்கு நடுவில் சிக்கியுள்ளன. சீனாவில் 28 ஆண்டுகளுக்குப் பிறகு ஏற்பட்டிருக்கும் மோசமான தட்பவெப்ப நிலையால் பஸ், ரயில் சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

வடமேற்கு சீனாவில் போகல் கடல் நீர் உறைந்து விட்டது. கடல் முழுவதும் சுமார் 27 ஆயிரம் சதுர மீட்டர் அளவுக்கு நீர் உறைந்து பனிக்கட்டியாக மாறியுள்ளது.

கடலில் உறைந்துள்ள பனிக்கட்டிகளால் கப்பல்களுக்கு சேதம் ஏற்படாத வகையில் மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

### வெனிசுலா நாடாளுமன்றத் தலைவராக

## கெபல்லோ மீண்டும் தெரிவு

கராகஸ், ஜன.8

வெனிசூலா நாடாளுமன்றத்தின் தலைவராக ஜனாதிபதி ஹியூகோ சாவேஸின் நண்பரும் அவரது கட்சியைச் சேர்ந்தவருமான டியோல்டாடோ கெபல்லோ மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

புற்றுநோய்க்காக கியூபாவில் சிகிச்சை பெற்று வரும் சாவேஸ் இந்த முடிவை எடுத்துள்ளார்.

இராணுவத்தில் அதிகாரியாகப் பணியாற்றியுள்ள கெபல்லோ, சாவேஸின் நம்பிக்கைகுரியவர்களில் முக்கியமானவர். இராணுவ வீரர்கள் மத்தியில் அவருக்கு செல்வாக்கு அதிகம்.

அதேநேரம் சாவேஸ் மீண்டும் ஜனாதிபதியாகப் பதவியேற்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. ஏனெனில் வெனிசூலா நாட்டு அரசியல் சாசன சட்டப்படி, புதிய ஜனாதிபதி ஜனவரி 10ஆம் திகதி தேசிய அவை முன்பு பதவியேற்க வேண்டும். ஆனால் சாவேஸ் தீவிர சிகிச்சையில் உள்ளதால் அவர் பதவியேற்க வரமுடியாத சூழ்நிலை உள்ளது.

இதையடுத்து பதவியேற்பை சிறிதுகாலம் தள்ளிவைக்க சாவேஸின் ஐக்கிய சோஷலிசக் கட்சி உறுப்பினர்கள் முடிவெடுத்துள்ளனர். உச்ச நீதிமன்றத்தில் வைத்து புதிய ஜனாதிபதி எப்போது வேண்டுமானாலும் பதவியேற்கலாம் என்று அரசியல் சாசன சட்டத்தில் கூறப்பட்டுள்ளதை அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். சாவேஸ் பதவியேற்க முடியாத சூழ்நிலையில், தேசிய அவையின் தலைவராக இருப்பவர் தலைமைப் பொறுப்பை ஏற்க வேண்டுமென எதிர்க்கட்சிகள் கருத்துத் தெரிவித்துள்ளன.

## அல் குவைதா தலைவரின் சகோதரர் கைது



டமஸ்கஸ், ஜன.8

அல் குவைதா இயக்கத்தின் தலைவர் மொகமது அல்- ஜவாகிரியின் சகோதரர் சிரிய இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அல் குவைதா தீவிரவாதிகளின் தலைவர் பின்லேடன் மறைவுக்குப் பின்னர், அய்மான் அல்-ஜவாகிரி அல் குவைதாவின் தலைவரானார்.

அவரது தம்பி மொகமது அல்- ஜவாகிரி. இவர் சிரிய ஜனா திபதி பஷர் அல்- அசாத்துக்கு எதிராகப் போராடும் புரட்சி படைக்கு உதவி வருகிறார்.

புரட்சியாளர்களுக்கு ஆத [illegible] செயல்பட்டு வருகிறது.

அல் குவைதாவுடன் தொடர்புடைய இந்த அமைப்பை சேர்ந்தவரான மொகமது அல்-ஜவாகிரி புரட்சிப் படைக்கு உதவுவது சிரிய அரசுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது.

அதையடுத்து ஜவாகரி [illegible] இராணுவத் தால் [illegible] செய்யப்பட்டுள்ளார்.

## அமெ. வான் தாக்குதலில் 16 தலிபான்கள் சாவு

### 3 முகாம்கள் நிர்மூலம்

இஸ்லாமாபாத், ஜன.8

பாகிஸ்தானில் அமெரிக்கப் படைகள் நடத்திய வான் தாக்குதலில் 16 தலிபான்கள் கொல்லப்பட்டனர்.

பாகிஸ்தானின் தெற்கு வஜிரிஸ்தான் பகுதியிலேயே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இப்பகுதியின் பாபர்கார்க் என்ற மலைப்பகுதி தலிபான்கள் ஆதிக்கத்தில் உள்ளது. இந்தப் பகுதியில் நேற்று முன்தினம் அமெரிக்கப் படைகள் வான் தாக்குதலை மேற்கொண்டன. அதில் 16 தலிபான்கள் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க விமானப் படைகள் ஏவுகணைகளை கொண்டு தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. அதில் மூன்று தலிபான்களின் முகாம்கள் நிர்மூலமாக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒபாமாவின் வெற்றிக்கு காரணம் கேபிள் ரீவியே!

வோஷிங்டன், ஜன.8

அமெரிக்க அதிபர் தேர்தலின் போது ஒபாமாவின் வெற்றியில் முக்கிய பங்கு வகித்தது கேபிள் ரீவிதான் என்று ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் நடத்திய ஆய்வில் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் நடப்பாண்டில் கேபிள் தொலைக்காட்சிக்கான விளம்பரமானது 650 மில்லியன் டொலராக உயர்ந்திருக்கிறது. இது கடந்த 2006ஆம் ஆண்டு தேர்தலின் போது 136 மில்லியன் டொலராக இருந்தது.

மொத்தம் 6 லட்சம் கேபிள் விளம்பரங்களை ஒபாமாவும் 3 லட்சம் விளம்பரங்களை ரோம்னியும் வெளியிட்டிருந்தனர்.

குறிப்பாக தேர்தலுக்கு முந்தைய சில வாரங்களில் ஒபாமா தரப்பு முழு வீச்சில் கேபிள் தொலைக்காட்சிகள் மூலம் பிரசாரம் செய்வதில் முனைப்பு காட்டி இருந்தனர்.

கிட்டத்தட்ட அந்த வாரங்களில் ரோம்னி தரப்புக்கு கேபிள் தொலைக்காட்சிகள் இல்லாமலேயே போய் விட்டது எனலாம். ரோம்னி தரப்பில் ஒபாமா தரப்புக்கு சவால்விடும் வகையில் விளம்பரம் செய்ய போதுமான நிதி இல்லை. ரோம்னி தரப்பை விட கூடுதலான விளம்பரங்களைச் செய்து ஒபாமா சாதித்திருக்கிறார் என ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

# ஆஸியில் காட்டுத் தீ

## 100 பேரைக் காணவில்லை



டாஸ்மோனியா, ஜன. 8

ஆஸ்திரேலியாவின் தீவு மாகாணமான டாஸ்மானியாவில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீ காரணமாக 100 பேர் காணாமற் போயுள்ளனர். 3 ஆயிரம் பேர் பாதுகாப்பாக வேறு இடங்களுக்கு அகற்றப்பட்டுள்ளனர்.

டாஸ்மானியாவில் கடுமையான வெயில் தாக்கிவருகிறது. 41 டிகிரி செண்டிகிரேட்டுக்கு மேல் அங்கு வெப்ப நிலை நிலவுகிறது. இதனால் இங்குள்ள காட்டில் 10இக்கு மேற்பட்ட இடங்களில் தீப் பிடித்து எரிந்து வருகிறது.

காட்டுத்தீ அருகில் உள்ள வீடுகளை தீக்கிரையாக்கியது. அந்தப் பகுதியில் உள்ள 3000 பேரை மீட்புப் படையினர் மீட்டு பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றினர். பெரும்பான்மையான மக்கள் அவசர கால மையங்களில் விடப்பட்டனர்.

ஆங்காங்கே ஒரு சில உடல்கள் எரிந்த நிலையில் கிடக்கின்றன. இருந்தும் அப்பகுதியில் இருந்த 100 பேர் பற்றிய விவரங்கள் தெரியவில்லை என்று மீட்புக் குழுவினர் தெரிவித்தனர்.

## சீனாவில் தீ விபத்து; 6 பேர் சாவு

பீஜிங், ஜன.8

சீனாவின் ஷாங்காய் நகரில் உள்ள சந்தைப் பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் 6 பேர் உயிரிழந்தனர். இதில் சிலர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்து நடந்த பகுதியில் இருந்து 5 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

சம்பவ இடத்தில் யாரும் சிக்கியுள்ளனரா என மீட்பு படையினர் தேடி வருகின்றனர்.

விபத்துக்கான காரணம் தெரியவரவில்லை.

## 72 ஆண்டுகளுக்குப் பின் இணைந்த சகோதரிகள்



உலக போரின் போது பிரிந்த சகோதரிகள் 72 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது இணைந்துள்ளனர்.

ஐரோப்பிய நாடான பொஸ்னியாவைச் சேர்ந்தவர்கள் டேனிஜா மற்றும் ஹெடிஜா.

இரண்டாம் உலகப் போர் நடந்த காலகட்டத்தில் இவர்களது பெற்றோர் கொல்லப்பட்டதால் பிரிந்து விட்டனர்.

அப்போது ஹெடிஜாவுக்கு வயது 11. இவர்களது சகோதரர், அமெரிக்காவுக்கு சென்றுவிட்டதாக கூறினர்.

மீண்டும் தன் உடன்பிறப்புகளை பார்ப்போம் என்ற நம்பிக்கையை இழந்த ஹெடிஜா, ஆதரவற்றோர் இல்லத்தில் வளர்ந்தார்.

தன் குடும்பத்தினரை பற்றி தாயிடம் தகவலை சேகரித்து, அது தொடர்பாக இணையத்தளத்தில் தகவலை வெளியிட்டார் ஹெடிஜாவின் மகன்.

பேஸ்புக் மூலம் இந்த தகவலை தெரிந்து கொண்ட டேனிஜா, தனது சகோதரியைச் சந்திக்க ஆசைப்பட்டார். இதனையடுத்து ஒன்று சேர்ந்த சகோதரிகள், கண்ணீருடன் தங்கள் இளமை கால நினைவுகளை பரிமாறிக் கொண்டனர்.

தற்போது இருவரும் இணைந்து, தங்களது சகோதரனை தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

## பழைமைவாத கிறிஸ்வர்களின் நத்தார் கொண்டாட்டம் நேற்று

பெத்தலகேம், ஜன.8

உலகம் முழுவதிலும் உள்ள பழைமைவாத கிறிஸ்தவ பிரிவினர் நேற்று நத்தார் பண்டிகையை கொண்டாடினர்.

பழைமையான ஜூலியன் நாள்காட்டி தற்போதைய கிரிகோரியன் நாள்காட்டியை விட 2 வாரம் பின்தங்கியுள்ளது. கிறிஸ்தவர்களில் ஒரு பிரிவினர் ஜூலியன் நாள் காட்டியை பின்பற்றுகின்றனர்.

கிரிகோரியன் முறைப் படி டிசெம்பர் 25 நத்தார் என்பதால் அதிலிருந்து 13 நாள்கள் கழித்தே பழமை வாத பிரிவினர் கிறிஸ்மஸை கொண்டாடுகின்றனர்.

இதன்படி எகிப்து, பெத்லகேம் என உலகின் பல பகுதிகளில் உள்ள பழைமைவாதத்தை பின்பற்றும் கிறிஸ்தவர்கள் நத்தார் பண்டிகையை கொண்டாடுகின்றனர். ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் உள்ள தேவாலயத்தில் நடந்த சிறப்பு பிரார்த்தனையில் ஜனாதிபதி விளாடிமிர் புடின் தனது மனைவியுடன் கலந்துகொண்டார்.

## ஈராண்டதனில் பிரார்த்திக்கின்றோம்

சிவனாய்
17
*
02
*
1920

சிவமாய்
01
*
01
*
2011



சிவபூசா துரந்தரர்

### வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்

திதி: அபரபக்க துவாதசி

திகதி: 08.01.2013
செவ்வாய்க்கிழமை

வெண்துகிலாடையும் விளங்கு உத்தரியமும்
புண்ணிய நுதலில் புனித வெண்ணீறும் அணிந்து
அல்லும் பகலும் ஐந்தெழுத்தை ஓதி- யாவர்க்கும்
அன்பனாய் பண்பாளனாய் நல் ஆசிரியனுமாய்
எண்ணிய எண்ணியாங்கு எய்திய திண்ணியனாய்க்
கண்ணின் மணியெனக் காத்து- எங்களை
அவையத்துள் முந்தி இருப்பச் செய்த -அப்பு நீங்கள்
மண்ணும் வெளியும் வானும் நின்று மன்றாடும்
அம்பலத்தானின் ஆனந்த எல்லையில் தனிப்பெருங்கூத்தின்
பேரின்பவெள்ளத்துள் திளைத்து மாறிலா மகிழ்ச்சியில் மலர
மனமுருகிப் பிரார்த்திக்கின்றோம்.

"எபநேசர்"
நாயன்மார்கட்டு, நல்லூர்.

(28067)(5.6.7)

பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### வைத்தி கணபதிப்பிள்ளை



மண்டைதீவு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிட மாகவும் யாழ்ப்பாணம் இல.16C, மடம் வீதியை வதிவிடமாகவும் கொண்ட வைத்தி கணபதிப்பிள்ளை (மேசன்) 05.01.2013 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தி- இராமாசி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான மருதர்- சொர்ணம் தம்பதியரின் அன்பு மரு மகனும் அமிர்தமணியின் (குண்டுமணி) பாசமிகு கணவரும் சுபித்தா, சாந்தா, கண்ணதாசன்(சுவிஸ்), சாரதா, அகிலன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ் சென்ற கந்தையா- நாகமுத்துவின் அன்புச் சகோதரரும் கணபதிப்பிள்ளை- கில்டா (சுவிஸ்) , ராசா, சிறி (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ் சென்ற செல்லாச்சி மற்றும் விசாலாட்சி, தங்கமேனி , இராமையா, காலஞ் சென்ற கண்ணகை மற்றும் பூமணி யோகம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆனந்தராஜா, திரவியராஜா ஆகியோரின் தாய் மாமனும் தீபா, லக்ஷன், பாலினி, வோஜி, யதீஸ்,யதீஸ்கா, கார்த்திகா, நேகா, சுஜானி,சுஜித், சுஜாந்த், சிந்து, மது, கோபி ஆகியோரின் பாசமிகு பேரனும் சாருஜனின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(08.01.2013) செவ்வாய்க் கிழமை மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மண்டைதீவு தலைக்கிரி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கண்ணதாசன் 0041344615677
அகிலன் 004721390 491
யதீஸ் 004917671669665

இல. 16C, மடம் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4764.

தகவல்:
குடும்பத்தினர்.

(28038) (6.7.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைத்தனம் போதிக்கும் பாடம்

(15)

உலகப் புகழ்பெற்ற எழுத்தாளராக அவர் கடுமையாக உழைத்திருக்க வேண்டும் என்பது ஒருபுறமிருக்கட்டும். தோல்விகளை அவர் சமாளித்த விதமும், அவருடைய சாதனையின் ஒரு பகுதியாகவே கருதப்பட வேண்டும்.

நம்மால் எப்போது சாதிக்க முடியாமல் போகிறது என்று யோசித்துப் பார்க்கலாம். ஒரு தோல்வி ஏற்பட்டவுடனேயே சோர்ந்து போகிறோம். 'நம்மால் இதெல்லாம் ஆகாது' என்கிற முடிவுக்கு வந்து விடுகிறோம். அடுத்த வேலையைத் தொடங்குகிறோம். அதுவும் நினைத்தபடி நடப்பதில்லை. உடனே மனம் தளர்ந்து அதை விட்டு விடுகிறோம். இப்படியாக எந்த ஒன்றையும் முயன்று செய்யாமல் பலவற்றையும் தொட்டுத் தொட்டு விட்டு விடுகிறோம். இந்தக் குணம் உடையவர்களால் எந்தக் காலத்திலும் ஒரு சிறிய காரியத்தைக் கூட வெற்றிகரமாகச் செய்து முடிக்க முடியாது. சாதனையாளர்களின் வாழ்க்கையைப் பார்த்தால் சில அடிப்படை விடயங்கள் நமக்குத் தெளிவாகும்.

உழைத்தார்கள், ஆர்வத்துடன் உழைத்தார்கள். தோல்விகள் ஏற்பட்டபொழுதும் உழைத்துக் கொண்டே இருந்தார்கள்.

வெண்ணெய் திரண்டு வரும்போது தாழியை உடைப்பது என்று சொல்வார்கள். வெற்றி கைக்கு எட்டும்சமயத்தில், பொறுமை இல்லாமல் முயற்சிகளைக் கைவிட்டு, தோற்றுப் போனவர்களும் இருக்கிறார்கள். அதனால்தான் சாதனையாளர்களின் சாதனைகளை மட்டும் பார்த்து நாம் பிரமிக்கக் கூடாது. அந்தச் சாதனையை உருவாக்குவதற்கு முன் அவர்கள் எப்படி வாழ்க்கை நடத்தினார்கள் என்பதையும் பார்க்க வேண்டும்.

மண் பொம்மை செய்கின்றவர்களைக் கூர்ந்து கவனியுங்கள். பொம்மை செய்வதற்கு ஏற்ற களிமண்ணை முதலில் அவர்கள் தேர்ந்து எடுக்கிறார்கள். எல்லாக் களிமண்ணும் பொம்மை செய்வதற்குத் தகுந்ததாக இருப்பதில்லை. ஆகவே அதற்குரிய களிமண்ணை முதலில் தேடிக் கண்டு பிடிக்கிறார்கள். பிறகு, அதிலுள்ள கோது நீக்கி அதைப் பதப்படுத்துகிறார்கள். அதற்கு பிறகு தான் தங்களுடைய திறமையினைப் பயன்படுத்தி பொம்மையை உருவாக்குகிறார்கள். அடுத்து அதை உலர்த்த வேண்டிய முறையில் உலர்த்துகிறார்கள். அதற்கு அப்புறம்தான் அதன் மீது வர்ணம் தீட்டுகிறார்கள். கண்களை மட்டும் கடைசியில்தான் தீட்டுவார்கள். கண்கள் தீட்டப்படும் வரை அந்தப் பொம்மை பொலிவிழந்து காணப்படும். கண்களைத் தீட்டிய பிறகு அது ஜீவன் பெற்று பார்ப்போரைப் பரவசப்படுத்தும்.

முழுமையான பொம்மையைப் பார்க்கின்றவர்கள் அதனுடைய அழகில் பரவசப்பட்டு நிற்பார்களே தவிர, அது களிமண்ணால் ஆன உருவம் என்பதோ, அல்லது வர்ணம் தீட்டப்படாத வரை அது கவர்ச்சியற்றது என்பதோ கவனத்துக்கு வராது.

அதைப் போலத்தான் சாதனையாளர்களின் சாதனைகள் நம்மைப் பிரமிக்க வைக்கின்றனவே தவிர அதற்குப் பின்னேயுள்ள எதுவும் நம்முடைய கவனத்துக்கு வருவதில்லை.

சாதனை புரிய வேண்டும் என்கிற உற்சாகம் நமக்கு ஏற்பட வேண்டுமானால் சாதனையாளர்களின் வாழ்க்கை வரலாற்றினைப் படிக்க வேண்டும். படித்து இரசிப்பதுடன் நின்றுவிடக் கூடாது. பொதுவாக சாதனையாளர்களின் வாழ்க்கையின் கடைசி அத்தியாயங்கள் தான் சாதனைகளைச் சொல்லும். ஆனால் படிக்கின்றவர்கள் அதற்கு முன்னால் உள்ள அத்தியாயங்களைத் தான் கவனமாகப் படிக்க வேண்டும். சாதனைகள் எப்படி உருவாயிற்று? என்பதைவிட சாதனையாளர்கள் எவ்வாறு உருவானார்கள் எனத் தெரிந்து கொள்வதுதான் முக்கியம்.

எந்தச் சாதனையும் ஒரே நாளில் நிகழ்ந்துவிடுவது இல்லை. ஒரு மனிதனுடைய முயற்சிகளின் கூட்டுப் பலனே சாதனை என்று அழைக்கப்படுகிறது. அதனால் உழைப்புக்கும் பலன் உடனே கிடைக்க வேண்டுமென்று எதிர்பார்க்கக் கூடாது. உழைத்து விட்டு காத்திருக்கப் பழக வேண்டும். எந்த உழைப்பும் வீண் போவதில்லை. இதை நாம் முதலில் நம்ப வேண்டும்.

உழைத்தேன், பலனில்லை என்று ஆதங்கப்படுகின்றவர்கள் அவசரகாரர்கள். விதைத்த உடனே எவரும் அறுப்பதில்லை. நட்டது முளைக்க நாள்கள் தேவைப்படுகின்றன. எந்தச் சாதனையும் வளர்ச்சியின் வடிவமாகத்தான் அமைகிறது. திடீர்ச் சாதனை என்று எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

அமெரிக்காவின் பிரபல எழுத்தாளர்களுள் ஒருவரான கர்வின் வேலஸ் என்பவரிடம் ஒரு நாவலை எழுதுவதற்கு உங்களுக்கு எவ்வளவு காலம் பிடிக்கும் எனக் கேட்டார்கள்.

சொல்ல முடியாது அவர் பதில் சொன்னார். பிறகு அதற்கு அவரே விளக்கமும் கூறினார். 'ஒரு நாவலில் வரும் சம்பவங்கள் பாத்திரங்கள் பற்றி பல ஆண்டுகளாக நான் சிந்தித்துக் கொண்டேயிருக்கிறேன். அதற்கு வேண்டிய தகவல்களை நேரம் கிடைக்கும் போதெல்லாம் சேகரிக்கிறேன். சிந்தனையில் கதை வடிவம் பெற்ற பிறகு எழுதத் தொடங்குகிறேன். டைப்ரைட்டரின் முன் அமர்ந்து கதையை அடித்து முடிக்கும் நேரத்தை மட்டும் நாவலுடைய நேரமாக நான் சொல்ல முடியாது. ஏனெனில் எழுத்து வடிவம் பெற்ற நேரமாக மட்டும்தான் அது இருக்க முடியும்' இவ்வாறு அவர் விளக்கம் அளித்தார்.

இதிலிருந்து தெரிகின்ற உண்மை மிகவும் ஆதாரமானது. ரேடியோவைக் கண்டு பிடிக்க உங்களுக்கு எவ்வளவு காலம் பிடித்தது, டெலிவிஷனைக் கண்டுபிடிக்க உங்களுக்கு எவ்வளவு காலம் பிடித்தது என்றெல்லாம் அவற்றின் கண்டு பிடிப்பாளர்களைக் கேட்டுக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. அதன் சாத்தியம் பற்றிய சிந்தனை என்றைக்குத் தோன்றியதோ அன்றைக்கே அது பற்றிய வேலையும் தொடங்கி விட்டதாகத்தான் அர்த்தம். இதிலிருந்து சாதனைகள் எந்தத் துறையில் நிகழ்ந்தாலும் அவை திடீரென்று நிகழ்ந்து விடுவதில்லை என்பது தெளிவு.

பி.சி.கணேசன் (தொடரும்)

# வாழ்நாள்களில் மக்கள் மனதில் இடம் பிடிப்பவர்கள் ஒரு சிலரே

## சாவகச்சேரி வணிகர் மன்றத் தலைவர் உரை

தென்மராட்சி,ஜன.8

பிறப்பவர்கள் அனைவரும் இறப்பது நியதி. அவர்களில் வாழ்ந்த காலத்தில் தமது உன்னத பணியால் மக்கள் மத்தியில் நிரந்தர இடத்தைப் பிடித்து புகழுடன் வாழ்ந்து மடிந்தவர்கள் ஒரு சிலரே. அந்த வகையில் தென்மராட்சி பிரதேசத்தைப் பொறுத்த வரையில் மக்கள் மனதில் நீங்கா இடத்தைப் பிடித்த சாவகச்சேரி முன்னாள் வணிகர் மன்றத் தலைவர் நமசிவாயத்தை எந்தவொரு மக்களும் மறக்கமாட்டார்கள்.

1994 ஆம் ஆண்டு மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் சங்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுத் தனது வர்த்தகப் பணியுடன் வணிகர்களின் நலன்கருதி செயற்பட்டுக் கொண்டிருந்த வேளையில் எதிர்பாராதவிதமாக சாவடைந்த சேவையாளரை நாம் நினைவு கூருவது வணிகர் சமூகத்துக்கே பெருமைமிக்கது.

இவ்வாறு சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற முன்னாள் தலைவர் அமரர் ச.நமசிவாயத்தின் 19 ஆவது ஆண்டு நினைவுநாள் நிகழ்வில் மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் உரையாற்றினார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

வணிகர்களைப் பொறுத்தவரையில் வணிக நடவடிக்கையில் ஈடுபட்டால் வேறு சிந்தனைக்கு இடம் கிடையாது. இரவு பகலாக வியாபார சிந்தனையே காணப்படும். அவர்களுக்கு ஓய்வு என்பதே கிடைப்பதில்லை.

அந்த நிலையில் வாரத்தில் ஏழு நாள்களும் தனது வணிக நிலையத்தைத் திறந்து மக்களுக்கு தனது வணிக சேவையை வழங்கியதுடன் ஆன்மிகப் பணியிலும் சமூகப் பணியிலும் சிறப்புடன் ஈடுபட்டவர் அமரர் நமசிவாயம்.

இவ்வளவு பொறுப்புக்களிலும் 300 இற்கு மேற்பட்ட வணிகர்களைக் கொண்ட வணிகர் மன்றத்தின் தலைமைப் பொறுப்பேற்று தனது சேவைக் காலத்தில் வணிகர்களின் மனதில் நீங்கா இடம் பிடித்த பெருமையும் அவரைச் சாரும்.

தனது தலைமைப் பணிக்குரிய சேவையை மேற்கொண்டிருந்த வேளையில் எதிர்பாராத விதமாக பாதிக்கப்பட்டு சாவடைந்த போது சாவகச்சேரி நகரமே சோகத்தில் மூழ்கியது. அது அவரது சேவைக்கு கிடைத்த உயரிய மதிப்பாக கருத முடிந்தது. இதனைக் கருத்தில் கொண்டு மன்றம் ஒவ்வொரு ஆண்டும் அவருக்கு அஞ்சலி செலுத்துகிறது-என்றார். (ம-9)



காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் நடை பெற்ற மணிவாசகர் சபையின் இரண்டாம் நாள் விழாவில் தமிழகத்தில் இருந்து வருகை தந்த புலவர் மாமணி ச.அருணசடேசன் சொற்பொழிவு நிகழ்த்துகிறார். (ம-250)

# பல சமூக சேவைகளை ஆற்றுவனவாக சனசமூக நிலையங்கள் மாறவேண்டும்

## வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினர் உரை

சனசமூக நிலையங்கள் வெறுமனே பெயரளவில் மட்டும் இயங்காது, தமது பிரதேசத்தில் கல்விப் பணி, அறப்பணி, சமூகப்பணி போன்ற பல்பரிமாண செயற்பாட்டை ஆற்றும் ஓர் உயர்ந்த நிறுவனமாகத் திகழ வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர் லயன் சி.ஹரிகரன்.

காங்கேசன்துறை உதயசூரியன் சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் கௌரவிப்பும் கோண்டாவில் வேதபாராயண சனசமூக நிலைய மண்டபத்தில் வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினரும், நிலையத் தலைவருமாகிய வ.முருகேசு தலைமையில் அண்மையில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சனசமூக நிலைய நிர்வாகங்கள் தமது பிரதேசத்தில் உள்ள அனைவரையும் அங்கத்தவர் ஆக்குவதுடன் அவர்களிலிருந்து நல்ல ஒரு நிர்வாகக் கட்டமைப்பைத் தெரிவு செய்து செயற்பட வேண்டும்.

பல்வேறுபட்ட கல்வி சமய சமூகப் பணிகளை சனசமூக நிலையங்கள் ஆற்ற வேண்டும். வெறுமனே பெயரளவில் மட்டும் செயற்படாது தமது பதவி ஆண்டு காலப் [illegible] சேவையை ஆற்றினோம் என்று ஒவ்வோர் உறுப்பினர்களும் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

கல்வி அறிவுள்ள பலரையும் தமது நிர்வாகக் கட்டமைப்புக்கு ஆலோசனையாளர்களாக நியமித்து நல்லதொரு பிரதேச அபிவிருத்தியைக் கட்டியெழுப்ப வேண்டும்.

இன்றைய நவீன யுகத்தில் சிறுவர்கள் தொடர்பில் பெற்றோர்கள் மிகவும் கவனத்துடனும், நிதானத்துடனும் செயற்பட வேண்டும். பெற்றோர்கள் தாம் பிரயோகிக்கும் ஒவ்வொரு வார்த்தைகளிலும் செயற்பாடுகளிலும் நிதானம் வேண்டும்.

பெற்றோர்களின் ஒவ்வொரு செயற்பாடுகளையும் சிறுவர்கள் மிகவும் அவதானத்துடன் கூர்ந்து கவனிப்பர். பின்னர் பாடசாலைகளிலோ அல்லது பொது இடங்களிலோ அந்த வார்த்தைகளைப் பிரயோகிப்பர். பெற்றோர் போல் செயற்படுவர்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளை அரவணைக்க வேண்டிய நேரத்தில் அன்புடன் அரவணைத்தும், கண்டிக்க வேண்டிய நேரத்தில் கண்டித்தும் பிள்ளைகளின் உளநலனை உணர்ந்து செயற்பட வேண்டும்.

தற்போது நமது நாட்டில் கலாசார சீரழிவுகளும் தற்கொலைகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன. பெற்றோர்கள் தமது பிள்ளைகளை அவர்களின் உள நலனைக் கருத்தில் கொண்டு அவர்களின் உள நலனுக்கு ஏற்றால் போல் அவர்களுக்கு அன்பு மொழிகளைக் கூறி ஆதரவு நல்கி அவர்களுக்கு சரியான புத்திமதிகளை எடுத்துக் கூற வேண்டும்.-என்றார். (ம)

# சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம்



மன்னார் எழுத்தூரைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி மெலானி திரேசா புண்ணியலிங்கம், வவுனியா, மன்னார் நீதி நிர்வாக வலயத்துக்கான சமாதான நீதிவானாக நீதி அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த மாதம் மன்னார் மாவட்ட நீதிவான் ஏ.யூட்ஷன் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

மாந்தை மேற்கு பிரதேச சபையின் செயலாளராகப் பணியாற்றிய இவர், தற்போது மன்னார் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் பதவி நிலை உத்தியோகத்தராகக் கடமையாற்றுவதுடன் சமய, சமூகப் பணிகளையும் ஆற்றிவருகின்றார். (ம)

# இலக்கியத்துறையாளனுக்கு கலாபூஷணம் விருது



28 ஆவது கலாபூசண விருது வழங்கல் நிகழ்வில் கடந்த 50 வருடங்களுக்கு மேலாக இலக்கியம் மற்றும் படைப்பு எழுத்துத் துறைகளில் களம் பதித்த பண்டத்தரிப்பு பிரான்பற்றைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை தெய்வேந்திரமும் கௌரவிக்கப்பட்டார்.

யாழ். இளம் எழுத்தாளர் சங்கத்தில் கடமையாற்றிய போது பத்திரிகைகளில் கவிதை, கட்டுரைகளை 500 இற்கும் மேல் படைத்துள்ளார். பல நாடகங்களை அரங்கேற்றி பல விருதுகள், பட்டங்கள் பெற்றவர். அண்மைக் காலத்தில் இவரது சேவைக்காக கலாபூஷணம் அரச விருது வழங்கப்பட்டது. (ம-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளின் கல்விக்கு தடையாக இருப்பது குடும்பப் பின்னணியே.....

■ ஆர்.கே.மேனன்
ஆசிரியர், யா / சென்.சாள்ஸ் மகாவித்தியாலயம்

யாழ். மாவட்டம் உள்ளிட்ட வட மாகாணக் கல்வி நிலையில் பெரிய வீழ்ச்சி கண்டுள்ளது. வீழ்ந்த கல்வித்தரத்தை உயர்த்துவதற்காக பலவாறெல்லாம் சிந்தித்து, பல பரிகார கற்பித்தல் செயன்முறைகளையெல்லாம் முன்னெடுத்து வருகின்றோம். இதற்கான மாற்றங்கள், விளைவுகள் கிடைக்கின்றனவா..? திறன் விருத்தி என்பது நீண்ட கால மாற்றத்திற்குட்பட்டது என்றாலும் படிமுறை மாற்றங்கள் நிகழ்கின்றதா..? என்றால் இல்லை என்றே கூற வேண்டும்.

எங்களுடைய மாணவர்களின் கல்விநிலை வீழ்ச்சிக்குக் காரணம் என பலவற்றை முன் மொழிந்தாலும் மறைந்திருக்கும் முக்கிய காரணங்களில்

மீள் கற்றல் இன்மை ஊக்கப்படுத்தலின் மூலம் கற்றலின் முக்கியத்துவம் வலுப்படுத்தப்படாமை, கற்றலுக்கான சூழல் இன்மை என்பவற்றை முதன்மைக் காரணிகளாகக் குறிப்பிடலாம்.

**மீள் கற்றல் இன்மை**

பாடசாலை நேரத்திலோ அல்லது பிரத்தியேக கற்பித்தல் நேரத்திலோ எவ்வளவு தான் ஆரோக்கியமான கற்றல் கற்பித்தல் பொறிமுறை இடம் பெற்றாலும் மீள் கற்றல் இன்மை இல்லையென்றால் பரீட்சை வெளியீடு சாதகமாக இருக்காது.

அலகு ரீதியாக கற்கும் விடயங்களை வகுப்பறைக்கு அப்பால் கொண்டு சென்றவுடன் மூன்று தடவைகள் மீள் உள்வாங்கலுக்கு உட்படுத்த வேண்டும்.

வகுப்பறை செயற்பாட்டில் ஈடுபட்ட அன்றைய தினமே மீள் உள்வாங்கலுக்கு ஒரு முறை உட்படுத்த வேண்டும். இது கற்றதை தெளிவு படுத்தும். பின்பு இடையிட்ட உள்வாங்கலை மேற்கொள்ள வேண்டும். இது அனுபவ சேர்க்கை மூலம் எண்ணக்கரு மறப்பதை மீள் நினைவு படுத்தும். பின்பு பரீட்சை நெருங்கும் போது விடய ஒப்புவிப்புக்காக மூன்றாவது தடவை மீள் உள் வாங்கல் செய்ய வேண்டும். இவ்வாறானதிட்டமிட்ட உள்வாங்கல்களை மாணவர்களும் மேற்கொள்வதில்லை. பெற்றோர்களும் மேற்பார்வை செய்வது இல்லை.

உள்வாங்கல்கள் பலவகை. அக்கறை உள்ள மாணவர்களில் பலருக்கு எப்படி விடயதானத்தினை உள்வாங்குவது என்பது தெரிவதில்லை. இது சுய கற்றலில் மிகப்பெரிய பிரச்சினையாகும். "எனது பிள்ளை நீண்ட நேரம் கற்கிறது, அர்ப்பணிப்புடன் கற்கிறது, ஆனால் வெளியீடுகள் பரீட்சையில் தெரிவதில்லை" எனப் பல பெற்றோர்கள் முறையிடுவது வழக்கம். பிள்ளை கல்விக்காக செலவிடும் நேரத்தை அளவிடும் நாம் எப்படியான சுயகற்றல் உள்வாங்கல்களை பிள்ளைகள் மேற்கொள்கிறார்கள் என்பதையும் உற்று நோக்க வேண்டும்.

சுயகற்றல் முறைகள் பல. அவற்றுள் பரீட்சை வெற்றி கிடைக்க வேண்டுமானால் பின்வரும் முறைகளில் கற்கலாம். ஒரு பந்தியை கருத்தூன்றி வாசிக்க வேண்டும். பின்பு புத்தகத்தினை மூடிவிட்டு பந்தியில் கூறப்பட்ட விடயங்களை நினைவுபடுத்திப் பார்க்க வேண்டும். (சொல்லிப் பார்க்கலாம்) சொல்ல முடியவில்லையானால் மீண்டும் பந்தியை வாசித்து மீண்டும் நினைவுபடுத்திப் பார்க்க வேண்டும். (பந்தியை பாடமாக்கி சொல்வதல்ல, பந்தியில் சொல்லப்பட்ட பொழிப்பை உங்கள் மொழியில் நினைவுபடுத்தல்). பின்பு அடுத்த பந்தியையும் மேற்சொன்னவாறு நினைவுபடுத்தல். பின்பு இரண்டு பந்தியிலும் சொல்லப்பட்ட விடயத்தை மீள் நினைவு படுத்தல். இவ்வாறு மேற்கொள்ளும் போது சிறு நேரத்தின் பின் சற்றுத் தலைவலி ஏற்படும். இதுவே உள்வாங்கலின் ஆதாரம். மூடி வைத்துவிட்டு செயற்பாடு ரீதியான பாடத்தை முன்னெடுக்கலாம். பக்கம் பக்கமாக வாசித்து விட்டு எதுவுமே தெரியாது நேரத்தை வீணடிப்பதை விட இரண்டு பந்திகள் உள்வாங்கப்பட்டது என்பது மேலானது.

கணிதபாடத்தில் எமது மாணவர்கள் அல்லது பிள்ளைகள் விடும் தவறு செயற்பாட்டினை சுயமாக செய்து பார்ப்பது இல்லை. உளவியலாளர்கள் தெளிவாக இதனை நிரூபித்துள்ளனர். செயற்பாட்டினை செய்து பார்க்கும் போது கைவிரல் நரம்புத் தொகுதிகள் ஊடாக மூளை மண்டலத்தில் சேகரிப்பு மையத்திற்கு சென்றடையும் வீதம் அதிகம். கணிதத்தில் எமது பிள்ளைகள் பிரித்தலில் இடர்படுகின்றார்கள். இதற்கான காரணம் செய்முறைப் பயிற்சி இன்மை. மேலோட்ட வாசிப்பின் ஊடாக கணித செய்கைகளை பார்க்கும் போது விளங்குவது போல் இருக்கும். ஆனால் உள் இருக்கும் எமது முன் எண்ணக்கரு இடர்பாடு புரிவதில்லை. ஆகவே மாணவர்கள் கணிதத்தில் [illegible] வெற்றிகளை சம்பாதிப்பதற்கு பொறிமுறையை அவதானித்து விட்டு செய்து பார்த்து விடை எடுக்கும் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும். மாணவர்களே !.. உங்கள் மனதைத்திறந்து கேட்டுப்பாருங்கள். புத்தகத்தில் உள்ள பயிற்சிகள் அத்தனையையும் அலகு ரீதியாக செய்து பார்க்கிறீர்களா ? கணிதத்தில் ஓர் அலகில் உள்ள ஒவ்வொரு உதாரண மாதிரிகளையும் செய்து விளங்க வைத்து அவை ஒவ்வொன்றிற்குமான பயிற்சிகளை கொடுக்கலாமே தவிர பாடப்புத்தகத்தில் உள்ள அத்தனை பயிற்சிகளையும் செய்ய பாடசாலைக் கல்விக்காலம் போதாது. வீட்டு வேலைக்கான பயிற்சிகளை கொடுத்து விடும் போது ஒரு சில மாணவர்கள் அதை செய்வதில்லை. ஆசிரியர் கட்டாயப்படுத்தும் போது ஏனைய மாணவர்களின் கொப்பிகளை பார்த்து பயனற்ற விதத்தில் எழுதிவரும் போது வீட்டு வேலைக்கான வெளியீடு சரிகிறது. விடயதானங்களை பெற்றோருக்கு தெரியாது இருப்பது ஒருபுறமிருக்கட்டும். பாடசாலை ஆசிரியருடன் சேர்ந்து கொடுத்து விடும் வீட்டு வேலைகளைக் கண்காணித்து எதில் தனது பிள்ளை இடர்படுகின்றான் என்பதையேனும் ஆசிரியரிடம் முன்வைக்கலாம் அல்லவா.



இவை இடம் பெறவில்லையானால் அதிகாரிகள் ஆசிரியர்களைக் குறை சொல்லிப் பயனில்லை. ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் தொழிற்பட்டுப்பயனில்லை.

**ஊக்கப்படுத்தலின் மூலம் கற்றலின் முக்கியத்துவம் வலுப்படுத்தப்படாமை**

மாணவர்கள் சிறியவர்கள் அற்ப சந்தோசங்களையும், உணர்வு மயமான சிந்தனைகளையும் சுமந்தவர்கள். இவர்களுக்கு எது சரி ? எது தப்பு?... எதிர்கால வேதனைகள் எப்படிப்பட்டது என்று தெரியாதவர்கள்?.. இவர்கள் அர்ப்பணிப்பை விரும்புவதில்லை. சுகபோகமான சுதந்திர வாழ்வியலுக்கு வழி தேடுபவர்கள். இவர்களின் விருப்பு வெறுப்புகளினூடாக எதிர்கால கல்வியில் வெற்றியின் வடிவத்தினை உளமார உணர வைக்க வேண்டும். இது சாதாரண வாழ்வியல் செயற்பாட்டின் மூலமே முடியும். கல்வி கற்றவர்களின் சுகபோக வாழ்க்கையினை படம் பிடித்துக் காட்டுவதன் ஊடாக எண்ணநிலை மாற்றங்களைக் கொண்டு வர முடியும். தற்காலம் தொலைக்காட்சி, கணினி போன்ற பல வகையான திடீர் வளர்ச்சியால் மாணவர்களின் அதாவது பிள்ளைகளின் திடீர் திறன் வளர்ச்சியோடு பெற்றோர்களின் வாழ்வியல் அனுபவம் போட்டி போட முடியாத நிலை காணப்படுகின்றது.

கல்வியின் காத்திரத்தை உணர்ந்து செயற்படும்போதுதான் உணர்வுகளுடன் கூடிய கற்றலுக்கான ஆயத்த நிலை உருவாகும். இதுதான் தொடர்கல்வியை, கற்றலை ஊக்குவிக்கும். தரம் 5 புலமைப்பரிசில் பிள்ளையின் விருப்பிற்கூடான கற்றல் ஆர்வத்தைத் தூண்டாமல் திணிப்பின் மூலம் பெற்றோர்கள் வெற்றி பெறுகின்றனர். ஆனால் பிள்ளைக்கு அர்த்தமற்ற பத்திரிகைப் பாராட்டுக்கள் கிடைக்கின்றன. இது உண்மையில் பிள்ளை பெற்ற வெற்றியல்ல. இத்திணிப்பின் மூலம் கிடைக்கப்பெற்ற வெற்றி நிலைக்காது. பெற்றோர்கள் தங்களுக்கு தெரிந்த கலைத்திட்ட உள்ளடக்கங்களை தரம் 5 வரை திணித்துவிட்டு பின்பு தெரியாத கலைத்திட்ட விடயதானத்தில் பின்வாங்குகின்றனர். ஏன் கற்றல் முறைமைகளை தொடர்ந்தும் ஊக்குவிக்க தயங்குகின்றீர்கள். திணிப்பு என்பது வேறு, ஊக்குவிப்பு நுட்பமுறைகள் என்பது வேறு என்பதை பெற்றோர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

**கற்றலிற்கான சூழல் இன்மை**

தற்கால சமூகத்தில் குடும்ப வன்முறைகள் மலிந்து காணப்படுகின்றன. இதற்கான காரணங்கள் தீர்வுகள் பற்றி அடுத்தவர் மத்தியஸ்தம் வைத்து தீர்க்க முடியாது. அவரவரே தம் பிரச்சினைக்குத் தீர்வுகளைக் கண்டறிய வேண்டும். இல்லையேல் இது இப்படித்தான் என்றுவிட்டு பிள்ளைகளுக்கான வாழ்வியலை அமைத்துக் கொள்ள வேண்டும். யாருக்காக நீங்கள் வாழ்கின்றீர்கள் எமது வாழ்வியல் வெற்றி பிள்ளைகளின் எதிர்காலமே. இதனைத் தொலைத்து எமது சுய கௌரவங்களை கட்டியெழுப்பும் வாதப்பிரதிவாத முரண்பாடுகளை வளர்த்துக்கொள்வதில் என்ன அர்த்தம். இதை சிந்தித்துப்பாருங்கள். நிதானமான ஒரு தீர்வு கிட்டும்.

தினமும் மது போதையில் வரும் தந்தைக்கு பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய சிந்தனை இல்லை. பெற்ற தந்தைக்கே பிள்ளையைப் பற்றிய சிந்தனை இல்லையெனில் பிள்ளைகளின் கல்வி நிலை வீழ்ச்சிக்கு மற்றவர்களைக் குறை சொல்லி என்ன பயன். திறன் சார்ந்த ஆரோக்கியம் என்பது சூழலில் நிச்சயம் தங்கியுள்ளது. கற்றல் சூழலில் தங்கியுள்ளது. எதிர்பார்ப்புக்கள் பெற்றோருக்கு அதிகளவாக இருப்பதை உணரும் போதுதான் தான், படிக்க வேண்டும் என்கின்ற முனைப்பு பிள்ளைக்கு உருவாகும். கல்வியைப் பற்றியே சிந்திக்காத பெற்றோர்களும் உள்ளனர்.

வெறுமனே கல்விப் புலங்களை மட்டும் குற்றம் சொல்வதில் பயனேதுமில்லை. செயலூக்கமுள்ள ஒரு நடத்தை மாற்றத்திற்கு சேர்ந்து இயங்கும் பண்பு தேவை. பெற்றோர்கள் குறைகளை பறைசாற்றாமல் ஆசிரியர்களுடன் சேர்ந்து உங்கள் பிள்ளைகளின் கல்விக்காய் முனைப்புடன் தொழிற்படுங்கள். கற்றல் சூழலை உருவாக்கிக் கொடுங்கள். உங்கள் தலைக்கனங்கள், முரண்பாடுகள், சுய கௌரவங்களை மூட்டை கட்டி வைத்து விட்டு பிள்ளைகளுக்காக வாழுங்கள். இதுவே உங்கள் வாழ்வில் அர்த்தத்தைத் தேடித்தரும் என்பதே யதார்த்தம். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டே ரைம்ஸ் கட்டுரையிலிருந்து

கோகுலன்

# எதிர்பார்த்தது ஒன்று நடந்திருப்பது வேறொன்று.....!

★ ஜனாதிபதியின் பிரகடனத்தின் மூலம் நீதியரசரை பதவி நீக்க முனைப்பு

★ உயர் நீதிமன்றத் தீர்ப்பை முன்வைத்து ஷிராணி பதவி துறக்க மறுக்கலாம்.

★ ஆபத்தான நிலையை எதிர்நோக்கு கிறது அரசு

கடந்தவாரம் அரசுக்கு கிடைத்த ஒரு கூடாத செய்தி என்னவென்றால், பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க தொடர்பான குற்றப் பிரேரணையை ஆய்வு செய்த நாடாளுமன்ற தெரிவுக் குழுவுக்கு அவ்வாறு செய்வதற்கான சட்ட அதிகாரமோ வலுவோ கிடையாது என்று தீர்ப்பு வழங்கியமையாகும். அந்த வகையில் ஏழு பேர் மட்டுமே கையெழுத்திட்ட தெரிவுக்குழுவின் 1,575 பக்கங்கள் கொண்ட ஆய்வு அறிக்கை நாட்டின் மிக உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் வழியில் செல்லுபடியற்றதாகியுள்ளது.

அரசமைப்பை வியாக்கியானம் செய்வதற்கு அதிகாரமுள்ள ஒரேயொரு அதிகார சபை உயர் நீதிமன்றமே என்று அங்கீகரிக்கப்பட்டிருந்தாலும் சட்டவாக்கல்துறை இத்தீர்ப்புக் குறித்து எவ்வாறு பிரதிபலிக்கும் என்பதை வரும் செவ்வாய்க்கிழமை அறிந்து கொள்ளக் கூடியதாகவிருக்கும்.

நாடாளுமன்றத்தில் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ அன்றைய தினம்வழமையானமுறையில் அறிக்கையொன்றை விடுக்கவிருக்கின்றார். நீதிமன்றத் தீர்ப்பை அவர் நிராகரிப்பார் என்றும், அதில் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத தவறுகள் காணப்படுவதாக சுட்டிக்காட்டுவார் என்றும் தகவல்கள் கிடைத்துள்ளன.

அரசுத் தலைவர்கள் மறைமுகமாக அதற்கான ஆயத்தங்களை செய்துவருவதாகத் தெரிவதுடன், அமைச்சர்கள் சிலர் வெளியிட்டு வரும் கருத்துக்களும் குற்றப் பிரேரணை வரும் 10 ஆம், 11 ஆம் திகதிகளில் விவாதிக்கப்பட்டு சபையில் நிறைவேற்றப்படும் என்பதையும் எடுத்துக் காட்டுகின்றன. அதன்பிறகு பிரதம நீதியரசரை பதவி நீக்கம் செய்வதற்கு பெரும்பான்மை அங்கத்தவர்கள் விரும்புகிறார்கள் என்பதைப் பற்றியும் குற்றப் பிரேரணையொன்றை நிறைவேற்றலாம் என்பது குறித்தும் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்குவார். இதனையடுத்து ஜனாதிபதி பிரகடனம் ஒன்றை விடுத்து புதிய பிரதம நீதியரசர் ஒருவரையும் நியமிப்பார். இப்பொழுதே அந்தப் பதவிக்கான ஒரு புதிய நபரைக் கண்டுபிடிப்பதில் அரச தரப்பினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் என்று தெரிய வருகின்றது.

ஜனாதிபதியும் வேறு சில உயர் மட்ட அமைச்சர்களும் முன்னாள் சட்டமா அதிபர் சி.ஆர்.டி சில்வாவை அப்பதவியை ஏற்றுக்கொள்ளும்படி செய்ய முயற்சி எடுத்தார்கள் என்றும் அவர் அதற்கு மறுத்துவிட்டார் என்றும் தகவல் கசிந்துள்ளது.

அவர் ஜனாதிபதியின் நெருங்கிய நண்பர் என்பது ஒருபுறமிருக்க கற்றுணர்ந்த பாடங்கள் தொடர்பான ஆணைக்குழுவின் தலைவராக இருந்துள்ளதுடன் அக்குழு தெரிவித்த பரிந்துரைகள் மூலம் அவருக்கு நல்ல பெயர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஏற்பட்டிருக்கிறது.

சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் பதவிக்கு போட்டியிடும்படியும் ஒரு பிரிவினர் அவரை வற்புறுத்தியுள்ளனர். ஆனால் தாம் எந்தத் தரப்பையும் சாராத சுயாதீனமான சட்டத்தரணியாகவே இருந்துவரவிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

சில்வா இவ்வாறு மறுத்துள்ள நிலையில் தற்போது பதவியில் இருந்துவரும் நீதியரசர் ஒருவரின் பெயரும் சட்டமா அதிபர் பணிமனையில் பணியாற்றும் சிரேஷ்ட அதிகாரி ஒருவரின் பெயரும் கூட இப்போது ஆலோசனையில் இருப்பதாகத் தெரிகிறது.

பிரதம நீதியரசர் மீதான குற்றப் பிரேரணை நிறைவேற்றப்பட்டு ஜனாதிபதியால் அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு புதிய பிரதம நீதியரசர் ஒருவர் நியமிக்கப்படுவாரானால் அது அரசுக்கு சகல கோணங்களிலும் அபாயங்களையும் முட்டுக்கட்டைகளையும் ஏற்படுத்துவதாகவே இருக்கப் போகின்றது.

### ஷிராணி பதவி விலக மறுத்தால்....?

முதலாவதாக தற்போது பதவியிலிருக்கும் பிரதம நீதியரசர் பதவி விலகினால் அல்லாமல் தாம் தொடர்ந்து பதவியில் இருப்பதற்கு சகல உரிமைகளும் இருப்பதாகக் கூறக்கூடும்.

நாடாளுமன்ற தெரிவுக்குழு செல்லுபடியற்றது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருப்பதால் நாடாளுமன்றத் தீர்மானமும் செல்லுபடியாகாதென்ற நிலைப்பாட்டில் இந்த நிலைமை ஏற்பட இடமுண்டு.

இந்த இறுதி நேரத்திலும் சில நடுவர்கள் பிரதம நீதியரசர் பதவி விலக வேண்டும். அதற்கு மாற்றீடாக அரசு அவர் மீதான குற்றப் பிரேரணை மற்றும் நடவடிக்கைகளை விலக்கிக் கொள்ள வேண்டும் என்பதாக ஒரு சமரசத் திட்டத்தை முன்வைத்திருப்பதாகத் தெரிகின்றது.

அரசு தனக்கு நாடாளுமன்றத்தில் இருக்கும் அபரிமிதமான பெரும்பான்மை ஆதரவைப் பயன்படுத்தி அவரை வெளியேற்ற முயற்சித்தால் அதாவது உடல் ரீதியில் அப்புறப்படுத்த முயன்றால் அச்சமூட்டும் நிலைமையொன்று உருவாவதற்கு இடமேற்படும். அப்படியான நடவடிக்கைகக்கு செல்லுபடியாகும் காரணங்கள் முன்வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

பெயர் குறிப்பிடவிரும்பாத சட்ட நிபுணர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் தொடர்ச்சியாக எதிர் விளைவுகளை அது ஏற்படுத்தும், அபாயகரமான தலையீடுகளுக்கும் இட்டுச் செல்லும் என்று எச்சரித்தார். வேறு நிறைவேற்று செயற்பாடுகளைப் போலவே, ஜனாதிபதியால் புதிய பிரதம நீதியரசர் ஒருவர் நியமனம் பெற்றால் அதுவும் நீதிமன்றில் ஆட்சேபிக்கப்படக்கூடும். உயர் நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பைச் சுட்டிக்காட்டி தற்போதைய பிரதம நீதியரசரை தொடர்ந்து பதவியில் இருக்கலாம் என்ற வகையில் பிரகடனம் ஒன்றை விடுக்கும்படி ஒருவர் வழக்குத் தொடரலாம் என்றார் அவர்.

அவ்வாறான மோதல் ஒன்று ஏற்படுவதானது- அது இப்போது தவிர்க்க முடியாமல் போகலாம் என்றாலும் நீதித் துறைக்கோ அரசுக்கோ நாட்டுக்கோ நல்லதாக இருக்காதென்பதையும் கூறத் தேவையில்லை.

பிரதம நீதியரசரை பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்ற அவசரத்தில் தமது நடவடிக்கைகளால் ஏற்படப்போகும் ஆபத்துகள் பற்றியோ தொலைதூர எதிர்விளைவுகள் பற்றியோ, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியின் உயர் தலைவர்கள் உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை. எல்லாவற்றையும் தமது அரசியல் நோக்கிலேயே அவர்கள் எடுத்துக் கொள்கின்றனர்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமனம் சட்டப்படி செல்லுபடியாகாதென்பது வெளிவந்த உடனேயே அந்தக் குழுவில் அங்கம் வகித்த அமைச்சர்கள்தான் அதுபற்றி அதிகமாக அலட்டிக் கொண்டவர்கள். தாங்கள் ஏன் பிரதம நீதியரசரை குற்றவாளியாகக் கண்டார்கள் என்பது உட்பட அவர் மீதான வேறும்பல குற்றச்சாட்டுகளை வெளிப்படுத்தினார்கள். இந்தக் குற்றச் சாட்டுகளில் பலவும் அவர் மீதான குற்றச் சாட்டுகளில் பட்டியலிடப்பட்டிருக்கவில்லை.

தெரிவுக்குழுவின் அறிக்கை இந்த வாரமே ஊடகங்களுக்கு வழங்கப்பட்டது. பிரதம நீதியரசர் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும் என்ற செயற்பாடுகள் முழுவதும் ஒரு முறையற்ற மிகவும் அவசரமாக மேற்கொள்ளப்பட்டவைகளே. பிரதம நீதியரசரின் கணவர் மீது இலஞ்சக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டவுடனேயே பிரதம நீதியரசர் பதவியிலிருந்து விலகி விடுவார் என்று அரச தரப்பினர் எதிர்பார்த்திருக்கிறார்கள். இதை அவர்களே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இது நடக்கவில்லை. அவர் பதவியிலிருந்து விலகிக் கொண்டு விட்டுக்கொடுப்பார் என்று எதிர்பார்த்த சந்தர்ப்பங்களில் எல்லாம் மீண்டும் எழுந்து போராடி வருகின்றார் என்று அந்த வட்டாரங்களில் இருந்து தகவல் கிடைத்துள்ளது. இந்த நிலையில்தான் குற்றப் பிரேரணையை எதிர்க்கும் அனைவரையும் பெயர் குறிப்பிட்டும் வேறு விதமாக அவமானப்படுத்தியும் வந்திருக்கிறது அரச தரப்பு. அவர்களில் சிலர் சட்டத்துறைகளைச் சேர்ந்தவர்களுமாவர்.

அவர்களில் பலர் நாட்டின் அறிவாளிகள் மட்டுமல்ல அரசை தீவிரமாக ஆதரித்து வந்தவர்களுமாவர். அவர்கள் மீது அவதூறுகளை மீண்டும் மீண்டும் சுமத்தியமையானது பிரதம நீதியரசருக்கு ஆதரவை அதிகரித்தது மட்டுமன்றி அரசின் செல்வாக்கையும் அதிகமாகப் பாதித்துள்ளது. ★

# மண் பரிசோதனையும் அதன் பயன்பாடும்

பயிர்வளர்ச்சிக்கு மண் அத்தியாவசியமான ஒரு மூலப்பொருளாகும். பயிர்செய்கையின்போது மண் தாவரத் தொகுதியிலிருந்து போசணைப் பொருள்கள் பலவழிகளில் இழக்கப்படுவதால் மண் வளம் பாதிக்கப்டுகின்றது.

மண்வளம் அல்லது அதன் உற்பத்தித் திறன் பயிர் உற்பத்தியையும் வளர்ச்சியையும் தீர்மானிக்கும் ஓர் அடிப்படைக் காரணியாக விளங்குகின்றது. இதனால் இயற்கை மூலப்பொருளைப் பராமரிக்க வேண்டியது அவசியமாகின்றது. போசணைப் பொருள்களின் அளவை மண்ணில் பராமரிப்பதற்கு மண்ணுக்கு சேதன, அசேதன பசளைகள் வழங்கப்பட வேண்டும். மண்ணில் பயிரிடப்படும் பயிர்களுக்கு ஏற்ப போசணை அளவு வேறுபடும். எனவே செய்கை பண்ணப்படும் பயிரில் இருந்து சிறந்த பலனைப் பெறவேண்டுமாயின் பயிரின் தேவைக்கு ஏற்ப போசணைப் பொருள்கள் வழங்கப்பட வேண்டும்.

மண்ணில் இந்தப் போச[illegible]ணைப் பொருள்களின் சமநிலை பேணப்படாத நிலையில் நுண்ணங்கிகளின் எண்ணிக்கை தொழிற்படும் பகுதியை [illegible] தேவைப்படும் அத்தியாவசியமான வேறு சில போசணைப் பொருள்களின் உறிஞ்சலில் பாதிப்பை ஏற்படுத்தல்போன்ற பல தீமையான விளைவுகளை ஏற்படுத்துகின்றன.



விவசாய திணைக்களம், யாழ்ப்பாணம்.

விவசாயிகளின் பயிர் நிலங்களில் பெறப்பட்ட மண் மாதிரிகளைப் பரிசோதனைக்கு உட்படுத்தியபோது அந்த மண்ணில் பொசுபரசு பொற்றாசு அளவு பயிரின் தேவையை விட அதிகளவில்இருப்பது அறியப்பட்டுள்ளது. இதனால் மண்ணில் போசணைப் பொருள்களின் சமநிலை பேணாமல் தாவரத்துக்கான மற்றைய போசணைப் பொருள்களின் உறிஞ்சலில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இறுதியில் தாவரத்தின் போசணைப் பொருள்களின் பற்றாக்குறை அறிகுறிகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

எனவே மண்பரிசோதனை மேற்கொள்ளுதல் மூலம் மண்ணின் பௌதிக, இராசாயனப் பண்புகளை அறிந்து அதற்கேற்ப போசணைப் பொருள்களைச் சிபாரிசு செய்வதன் மூலம் மண்ணை வளப்படுத்தி நல்ல பயனைப் பெறமுடியும்.

விவசாயிகளின் நலன் கருதி திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் மண்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அத்துடன் ஒரு மண் மாதிரிக்கு ருபா 290 மட்டுமே அறவிடப்படுகின்றது. எனவே விவசாயிகள் தங்கள் தங்கள் விவசாய போதனாசிரியர்களின் உதவியுடன் மண் மாதிரிகளை எடுத்து விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் ஒப்படைக்குமிடத்து மண்பரிசோதனை செய்யப்பட்டு அதுபற்றிய அறிக்கையும் சமர்ப்பிக்கப்படும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமையை இறக்கினால் தான் சுகம்

எல்லோரும் நிம்மதியாக வாழவே விரும்புகிறார்கள்...! இலக்கு ஒன்றினை நிர்ணயம் செய்யாமல் அந்த நிம்மதி எப்படிக் கிடைக்கும்? இதைப் புரிந்து கொள்ளாதமையால் தான் சிக்கல்கள் தொடர்கின்றன...! எங்கே நிம்மதி..! எங்கே நிம்மதி...! என்று ஏங்குகிறார்கள்.. பசுமை நிறைந்த புல்வெளியில் இரு ஆடுகள் மேய்வதற்காக விடப்பட்டன. தோற்றத்தில் அந்த இரு ஆடுகளும் ஒன்று போலவே இருந்தன.. ஆனால் குணத்தில் அவ்விரண்டும் இரு துருவங்களாக இருந்தன. ஓர் ஆடு அமைதியும், பொறுமைக்குணமும் கொண்டிருந்தது.. மற்றோர் ஆடோ பதற்றமும் பேராசையும் கொண்டிருந்தது.. பசுமை நிறைந்த அந்தப் புல்வெளியில் இரண்டு ஆடுகளும் இறங்கின. பேராசை கொண்ட ஆடு அந்தப்புல்வெளி முழுவதையும் மேய ஆசைப்பட்டது. அதனால் ஓரிடத்தில் நின்ற புற்களை மேய இயலவில்லை. இங்கொன்றும் அங்கொன்றுமாக புற்களைக் கடித்தபடி அது அலைந்தது..

பொறுமைக் குணம் கொண்ட ஆடு பதற்றப்படவில்லை.. ஓரிடத்தில் நிலையாக நின்று அது புற்களை மேய்ந்து கொண்டிருந்தது.. குறிப்பிட்ட காலம் கடந்ததும் ஆடுகளுக்குச் சொந்தக்காரன் வந்தான்... இரு ஆடுகளையும் ஓட்டிக்கொண்டு வீட்டிற்குச் சென்றான்.. பேராசை கொண்ட ஆட்டுக்கு வயிறு நிரம்பவில்லை.. இங்கொன்றும் அங்கொன்றுமாக கடித்தபடி இருந்ததால் அது பட்டினியாகத் திரும்பியது.. பொறுமையுள்ள ஆடு வயிறு நிறைந்த திருப்தியில் வீடு திரும்பியது. பேராசை காரணமாக உணவு இருந்தும் பட்டினியாக திரும்பியது ஓர் ஆடு! மனிதர்களின் நிலையும் இப்படித்தான் இருக்கிறது. இதனை உணர்த்தத்தான் இந்த ஆடுகள் கதை சொல்லப்பட்டது. மனிதர்கள் வாழ்வதற்குப் பல வாய்ப்புக்கள் இங்கே உள்ளன..! உலகில் உபயோகமற்றவர்கள் என்று எவரும் கிடையாது..! ஒவ்வொருவருக்கும் ஏதேனும் ஓர் ஆற்றல் இருக்கத்தான் செய்கிறது.. ஆண்டவன் அளித்த கொடை என்றே இதைச் சொல்லலாம்.. ஆனால் இந்த ஆற்றலை மனிதர்கள் சரியாகப் பயன்படுத்துகிறார்களா.. இதுவே கேள்வி.. அனைவரும் சிந்திக்க வேண்டிய கேள்வி.. வாழ்வதற்குப் பல வாய்ப்புக்கள் இங்கே உண்டு என்பது உண்மை தான்.. ஆனால் எல்லா வாய்ப்புக்களும் ஒருவருக்குப் பொருந்துவதில்லை.

ஆனால் எல்லா வாய்ப்புக்களையும் நாம் பயன்படுத்த முடியாது. அவரவர்களுக்குப் பொருந்துகிற வாய்ப்புகளைத் தேர்ந்தெடுக்கவேண்டும். இதுவே வெற்றியின் இரகசியம். இதுவே விவேகத்திற்கு அடையாளம். ஒருவர் லொறி வாகனம் வாங்கி இலட்சக்கணக்கில் உழைக்கிறார்.. நாமும் அது போல் இலட்சங்களைக் குவிக்கலாம் என்று நினைக்கக்கூடாது.. அந்த நபருக்கு அத்தொழில் பொருந்தியிருக்கலாம்... அதனால் அவர் இலட்சக்கணக்கில் உழைக்க முடியும்.. அதே திறமை மற்றொருவருக்கு இருக்கும் என்று சொல்ல முடியாது.. கண்மூடித்தனமாக இறங்கிக் கஷ்டங்களை அடையக்கூடாது.. எம்முடைய பலம் என்ன? தொழிலின் பலம் என்ன? என்பதை ஆராய வேண்டும்.


அத்தொழிலில் இடையிடையே ஏற்படக்கூடிய இடையூறுகளைக் கணக்கிட வேண்டும். அந்த இடையூறுகளையெல்லாம் வெல்லும் வழி எம்மிடம் உண்டா? என்பதையும் ஆராய வேண்டும். இவையெல்லாவற்றிலும் தெளிவு ஏற்பட்டால் அத்தொழிலில் இறங்கலாம். எல்லா வாய்ப்புக்களுமே செல்வம் தரக்கூடியது தான்.. அதற்காக எல்லாவற்றையும் தலையில் போட்டுக் கொள்ள முடியுமா? பேராசை கொண்ட ஆடு இப்படித்தானே நினைத்தது..? எல்லாப் புற்களையும் தானே மேய்ந்துவிடலாம் என்று அது தப்புக்கணக்கு போட்டது. முடிந்ததா.. அதனால் ..? பட்டினி தான் அதற்குப் பரிசாகக் கிடைத்தது..! கண் எதிரே உணவு இருந்தும் அந்த ஆடு ஏமாந்தது.. அது போன்ற ஏமாளிகளாக நாம் ஆகக்கூடாது..? பொறுமையுள்ள ஆடு நடந்து கொண்டதைப் போல நாம் நடக்க வேண்டும். பசுமையாக புல்வெளி பரந்து கிடப்பது அந்த ஆட்டுக்கும் தெரியும்.. ஆனால் அது பதற்றப்படவில்லை. தெளிவாக இருந்தது.. நம்மால் முடிந்த அளவுக்குத்தான் புற்களை மேய முடியும் என்பதை அது தெரிந்து வைத்திருந்தது.

அதனால் தான் திருப்தியாக.. நிம்மதியாக அது வீடு வந்தது.. பேராசை கொண்ட ஆடு நிம்மதியை இழந்தது.. நிம்மதியை இழந்தோடு மட்டுமன்றிப் பட்டினியோடு அது துன்பப்பட்டது. நிம்மதி எங்கே என்பது இப்போது புரிந்ததா..? தேவையற்ற சுமைகளைத் தூக்குவதால் தான் நிம்மதி பறிபோகிறது. எம்முடைய மூளையில் தேவையற்ற சுமைகளை ஏற்றக்கூடாது. அப்படி ஏற்றியிருந்தால் அந்தச் சுமைகளை இறக்கியாக வேண்டும்.. சுமையை இறக்கினா லன்றி சுகத்தைப் பெறமுடியாது. நிம்மதியைக் கெடுப்பது தேவையற்ற சுமைகள் தான். இந்தத் தீர்க்க தரிசனம் வந்துவிட்டால் துன்பமோ போ...போ என்று அனுப்பிவிடலாம்.... நிம்மதியே வா.. வா.. என்று அறை கூவி அழைக்கலாம். இதுவே தாரக மந்திரம்.. இதுவே தளர்வு அகற்றும் வேத மந்திரம். இந்த உண்மையைத் தவமாகக் கொள்ள வேண்டும்.



பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்

# ஆகம விதிகளின்படி அமைந்த நல்லூர் கைலாசநாதர் ஆலயம்



(கடந்தவாரத் தொடர்ச்சி.....)

வளவன்

நல்லூர் சிவன் கோயில் வளர்ச்சியில் மற்றொரு திருப்புமுனையாக 1962 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி அமைந்தது. 1942 ஆம் ஆண்டு ஆலய தாபகர் சிவஸ்ரீ கார்த்திகேயக்குருக்கள் சிவபதமடைந்ததையடுத்து ஆலய திருப்பணி ஆரம்பிக்கப்பட்ட தினமான மேற்படி நாளில் நிருத்த மண்டபத்தின் அடிக்கல் நடும் நிகழ்வு இடம்பெற்றது.

சிமெந்துக் கலவைகளால் தூண்கள், இரும்புப்பட்டங்களாலானதும், கல்நார்த் தகடுகளாலானதுமான கூரை வேலைகள் 1970 களில் பூர்த்தி செய்யப்பட்டன. தற்போதுள்ள வசந்த மண்டபம் அமைக்கப்பட்ட அதே காலப்பகுதியில் பரிவார மூர்த்தியாக விளங்கும் ஆறுமுக சுவாமிக்குத் தென்மேற்கு மூலையில் தனியான பரிவாரக் கோயில் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. ஸ்தூபி வேலைகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் 1978 இல் பரிவார ஷண்முகப்பெருமானுக்குரிய கும்பாபிஷேகமும் சிறப்பாக நடைபெற்றது. இத்திருப்பணிகளை ஆலய பரிபாலகர்களுள் ஒருவரான சிவஸ்ரீ கா.இரத்தினகைலாசநாதக்குருக்கள் தாமீட்டிய பொருளைக் கொண்டு நிறைவேற்றியமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆலயத்தின் பரிபாலனம் தொடர்பாக நிர்மாண கர்த்தாவும் பிரதம குருவாக விளங்கிய வருமான கார்த்தி கேயக்குருக்கள் எழுதி வைத்த உறுதிச்சாசனத்தின்படி நிர்வகிக்கப்பட்டு வருகிறது. ஆண் சந்ததியினரே தர்மகர்த்தாவாக விளங்க உரிமையளிக்கும் இச்சாசனம் மேலதிக நிபந்தனை ஒன்றையும் விதித்துள்ளது. ஆண் வாரிசையுடையவர்கள் ஆலய பரிபாலகராகத் திகழ கைலாசநாதன் என்ற பெயரை தமது நாமத்துடன் தனியாகவோ பகுதியாகவோ இணைத்துக் கொள்ள வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் நித்திய நைமித்திய கிரியைகள் இயற்றப்பட வேண்டிய வரன்முறைகள் பற்றியும் விளக்கமாகத் தெரிவித்துள்ளதைக் காண முடிகிறது.

இந்தத்தரும சாசனத்தின் மூலம் சிவன் ஆலயத்தினை நெறிப்படுத்தும் கார்த்திகேயக் குருக்களின் சிரேஷ்ட பத்தினியாகிய மீனாம்பாளுக்கு ஏக புத்திரியாக கமலாம்பிகை பிறந்தார். பின்னர் முன்னேஸ்வரம் சிவஸ்ரீ சிவராம கிருஷ்ண ஐயரின் மகளான சுந்தரம்மாவை கனிஷ்ட பத்தினியாக மணந்தார். அவரது புத்திரருள் சிவஸ்ரீ கைலாசநாதக்குருக்களும் அவரது சகோதரர் சிவஸ்ரீ இரத்தினகைலாசநாதக்குருக்களும் ஆலய பரிபாலனத்தில் குறிப்பிடத்தக்கவர்கள்.

1942 ஆம் ஆண்டு தைமாதம் சுந்தரம்மாவும், ஆடி மாதம் கார்த்திகேயக்குருக்களும் இறைபத[illegible]களும் இணைத் தர்மகர்த்தா[illegible] உரிமை பெற்றனர். தாய் மாமனாகிய சாம்பசிவக் குருக்களின் வழிகாட்டலில் மாணவப்பருவத்திலேயே தர்மகர்த்தாக்களாக பணியில் இணைந்து கொண்டனர்.

கைலாசநாதக்குருக்கள் கொழும்பு பல்கலைக் கழகத்தில் கல்விகற்று பேராதனை பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராக கடமைக்குச் சென்றார். இரத்தின கைலாசநாதக் குருக்கள் தந்தையின் வழிநின்று கிரியை நெறி சோதிடக் கலைகளில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி ஆலயத்தின் வளர்ச்சிக்கும் அயராது உழைத்தார்.

பின்னர் 1995 அம் ஆண்டு யாழ் பல்கலைக் கழகத்தின் இந்துநாகரிகத்துறையின் முதற் பேராசிரியராக கைலாசநாதக்குருக்கள் நியமனம் பெற்றார். யாழ்ப்பாணம் வந்த அவர் தமது சகோதரருடன் இணைந்து ஆலய பரிபாலனக் கிரியைகளில் நியமமான ஒழுங்குகளை ஏற்படுத்துவதிலும் முன்னின்று உழைத்தார்.

> 1995 அம் ஆண்டு யாழ். பல்கலைக் கழகத்தின் இந்துநாகரிகத் துறையின் முதற் பேராசிரியராக கைலாச நாதக் குருக்கள் நியமனம் பெற்றார். யாழ்ப்பாணம் வந்த அவர் தமது சகோதரருடன் இணைந்து ஆலய பரிபாலனக் கிரியைகளில் நியமமான ஒழுங்குகளை ஏற்படுத்துவதிலும் முன்னின்று உழைத்தார்.

இந்தியாவைச் சேர்ந்த சமஸ்கிருத விற்பன்னர்களிடம் மந்திரம், கிரியை,பாவனை போன்ற வேதக்கல்வியைப் பெற்று பல்கலைக்கழக உயர் பட்டங்களை அடைந்தார் பேராசிரியர் கைலாச நாதக்குருக்கள். 1988 இல் சிவன் ஆலயத்தில் நடைபெற்ற மகா கும்பாபிஷேகத்தில் அவர் பிரதம சிவாச்சாரியாராகக் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

நல்லூர் சிவன் கோயில் ஆகமவிதிகளை அடியொற்றி சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. கிழக்கு மேற்காகவுள்ள பழைய பருத்தித்துறை வீதியை (இவ்வீதி 1970 ஆம் ஆண்டு காலப்பகுதி வரை நல்லூர்க்கந்தன் கோயிலுக்கு ஊடாக நேரே அமைந்திருந்தது.) முன்புறமாகக் கொண்டதும், கல்வளவின் நடுவே கிழக்கிலிருந்து மேற்காகவும், வடக்கு நோக்கிய வாசல்களையுடையதாகவும், ஆலயத்தின் கரு வறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம், ஸ்நாபன மண்டபம், அர்சன மண்டபம் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாக மையப் பகுதி விளங்குகிறது.

விநாயகர், ஸ்ரீகமலாம்பிகா, சிவகாமி சமேத நடராஜர், ஸ்ரீகைலாசநாதசுவாமி, வள்ளிதேவசேனா சகித சுப்பிரமணியர் ஆலயங்கள் வடக்கு நோக்கியதாக காட்சி தருகின்றன. கிழக்கு நோக்கிய கருங்கல்லிலான கோமுகைகள் மூலாயத்தை நன்கு அலங்கரிக்கின்றன.

ஸ்ரீகமலாம்பிகை, ஸ்ரீகைலாசநாதசுவாமி ஆகிய இரு மூலஸ்தானங்களினதும் நடுப்புறம் நடராஜர் சந்நிதியும் அம்பாள் மூலாலய அர்த்த மண்டபத்தின் வலம்புறமாக விநாயகர் கருவறையும் சிவன் மூலாலய அர்த்த மண்டபத்தின் இடப்புறமாக சுப்பிரமணியரின் கருவறையும் விளங்குகின்றன.

கிழக்கு நோக்கியுள்ள மூன்று மாடங்களில் தெற்கில் இருந்து வடக்காக சந்தான கோபாலர், வீரபத்திரர், க்ஷேத்ரபாலர் ஆகிய மூர்த்திகளும் மேற்கு நோக்கிய மூன்று மாடங்களில் சண்டேஸ்வரர் ஸ்ரீமஹிஷாசுரமர்தனி

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஞ்சிகுடிச்சாறு, தங்கவேலாயுதபுரத்தில்

# 35 விவசாயக் கிணறுகள் அமைத்துக் கொடுக்கப்படும்

## விவசாய அமைச்சர் உறுதி

அம்பாறை,ஜன.8

கஞ்சிகுடிச்சாறு, தங்கவேலாயுதபுரம் ஆகிய பிரதேசங்களில் 35 விவசாயக் கிணறுகளை அமைப்பதற்கு நிதி வழங்கப்படும்.

இவ்வாறு விவசாய அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன உறுதியளித்தார்.

அம்பாறை மாவட்டத்துக்குச் சென்ற விவசாய அமைச்சர் அபேவர்த்தன, தங்கவேலாயுதபுரத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி.எச்.பியசேன, பிரதேச விவசாயிகளின் நன்மை கருதி விடுத்த வேண்டுகோளுக்கு இணங்கவே குறித்த கிணறுகளை அமைத்துத் தருவதாக அமைச்சர் உறுதியளித்தார்.

சுமார் 3 லட்சம் ரூபா பெறுமதியில் ஒவ்வொரு கிணறும் அமைத்துக்கொடுக்கப்படும். இந்தக் கிணறுகள் தைப்பொங்கல் தினத்துக்கு முன்னர் அமைக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

கஞ்சிகுடிச்சாறு மற்றும் தங்கவேலாயுதபுரம் ஆகிய பிரதேசங்களிலுள்ள 1,500 குடும்பங்களின் விவசாயத் தேவை கருதியே இந்தக் கிணறுகள் அமைக்கப்படவுள்ளன என்று அவர் கூறினார்.

கஞ்சிகுடிச்சாறு,தங்கவேலாயுதபுரம் ஆகிய பிரதேசங்களிலுள்ள மக்கள் நெற் செய்கையில் ஈடுபடுவதோடு, சோளம் மற்றும் கச்சான் உள்ளிட்ட சேனைப் பயிர்ச் செய்கையிலும் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## பேராதனைப் பல்கலையில் பகிடிவதை இடம்பெறாது

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இந்த வருடம் முதல் பகிடிவதை இடம்பெறமாட்டாது என்று பேராதனை பல்கலைக்கழகத் துணைவேந்தர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற சந்திப்பு ஒன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்த வருடம் மார்ச் மாதம் பல்கலைக்கழகத்துக்குப் புதிதாக வரும் மாணவர்கள் பகிடிவதை சம்பந்தமாக அச்சம் கொள்ளத்தேவையில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட மாணவர்களுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலின்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. (ச)

# தொடர்ந்து கொட்டியது மழை; வீடுகளுக்குள் புகுந்தது வெள்ளம்

## கிரான்குளம் பகுதி மக்கள் பரிதவிப்பு



எருவில்,ஜன.8

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆரையம்பதி பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிரான்குளம் பிரதேசத்தின் சில பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

கடந்த சில தினங்களாக பெய்துவரும் மழையால் கிரான்குளம் மத்தி, கிரான்குளம் மேற்கு ஆகிய பிரதேசங்கள் நீரில் மூழ்கியுள்ளதுடன், வீடுகளுக்குள்ளும் வெள்ள நீர் புகுந்துள்ளது. அதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்தப் பகுதிகளுக்கு எந்த அதிகாரிகளும் இதுவரை வருகைதரவில்லை என்று மக்கள் கவலை தெரிவித்தனர்.

தமது பிள்ளைகள் தினமும் அசுத்தமான நீரிலேயே அன்றாட கடமைகளை மேற்கொள்கின்றனர் என்று அவர்கள் கூறுகின்றனர்.

தமது பகுதிகளில் உள்ள வெள்ள நீரை வெளியேற்றுவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட போதிலும், வேறு இடங்களுக்குச் சென்று தங்குவதற்குக் கூட வழியில்லாத நிலை ஏற்பட்டுள்ளது என்று மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்டு வீடுகளுக்குள் முடங்கியுள்ள எமக்கு எந்தவித நிவாரணங்களும் இதுவரை வழங்கப்படவில்லை என்று அவர்கள் சுட்டிக்காட்டினர். (ச-31)

## ஆடை வியாபாரத்தில் ஈடுபட்ட இந்தியப் பெண் கைது

கைதுசெய்யப்பட்ட பெண்ணுக்கு எதிர்வரும் 17ஆம் திகதி விளக்கமறியல்.

கல்முனை,ஜன.8

கல்முனையில் சட்ட விரோதமான முறையில் ஆடை வியாபாரத்தில் ஈடுபட்ட இந்தியப் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

களுவாஞ்சிக்குடி விசேட பொலிஸ் அதிரடிப்படையினர் குறித்த பெண்ணை கைது செய்துள்ளனர்.

சுற்றுலா விசாவில் இலங்கை வந்த குறித்த பெண் சட்ட விரோதமாக ஆடை வியாபாரத்தில் ஈடுபட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட பெண் கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டபோது, எதிர்வரும் 17 திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ச)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம்

### வழங்கினார் யோகேஸ்வரன் எம்.பி.



மட்டக்களப்பு,ஜன.8

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு, பண்டாரியாவெளி கிராம மக்களுக்கு நிவாரணப் பொருள்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கையளிக்கப்பட்டன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் நிவாரண பொருள்களை வழங்கினார். (ச)

## அட்டாளைச்சேனை அமைப்பாளராக நஸீர்

மட்டக்களப்பு,ஜன.8

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அட்டாளைச்சேனை அமைப்பாளராக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் அல்ஹாஜ் ஏ.எல்.எம்.நஸீர் நியமிக்கப்பட்டுள்ளார்.

மிகக் குறுகிய காலத்துக்குள் அரசியலுக்குள் பிரவேசித்து அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தலைவராகவும், பின்னர் மாகாண சபை உறுப்பினராகவும் நஸீர் கூடுதலான மக்கள் ஆதரவைப் பெற்று தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச.)

# கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர் இடமாற்றம்

## தேசிய பாடசாலைகளில் நடைமுறை

எருவில்,ஜன.8

கிழக்கு மாகாணத்தில் தேசிய பாடசாலைகளுக்கான ஆசிரியர் இட்மாற்றம் கடந்த 2 ஆம் திகதியில் இருந்து நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

ஒரே பாடசாலையில் இருபது வருடங்களுக்கு மேலாக கற்பித்தலில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்களை அந்தந்த மாவட்டங்களுக்குள்ளே வேறு தேசிய பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யும் முதலாவது கட்டம் தற்போது நடைபெறுகின்றது.

அந்தவகையில் கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி தேசிய பாடசாலையில் இருந்து 15 ஆசிரியர்கள் நிந்தவூர் சாஹிரா, சம்மாந்துறை ஆகிய தேசியப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்கின்றனர்.

இந்த இடமாற்றத்தில் 3 வருடங்களை பூர்த்தி செய்த ஆசிரியர் ஒருவரும் உள்வாங்கப்பட்டுள்ளார். அது ஏனைய ஆசிரியர்கள் மத்தியில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

நீண்ட நாள்களாக கிழக்கு மாகாண தேசிய பாடசாலைகளுக்கான இடமாற்றம் இடம்பெறும் என்று எதிர்பார்த்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-31)



மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிருப்பு தொகுதிக்கான தமிழரசுக் கட்சியின் விசேட கூட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை களுவாஞ்சிக்குடி, இராசமாணிக்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், பொன்.செல்வராசா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் த.கனகசபை உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# அக்கரைப்பற்றில் டெங்குநோய்; 2 சிறுமிகள் வைத்தியசாலையில்

வீடுவீடாகச் சென்று விழிப்புணர்வு நடை பெற்று வருகிறது

அக்கரைப்பற்று,ஜன.8

அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் இருவர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அக்கரைப்பற்று பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஐ.எல்.சித்தீக் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று மாநகர சபைக்குட்பட்ட 2ஆம் பிரிவுப் பகுதியில் 5 வயது சிறுமி ஒருவரும், 2 வயது சிறுமி ஒருவ்ரும் டெங்கு நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர் என்று அவர் கூறினார்.

டெங்குநோய்த் தாக்கத்துக்கு உள்ளான இருவரும் தற்போது அம்பாறை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று அவர் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று பிரதேசம் முழுவதும் தற்போது டெங்குநோய் விழிப்புணர்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பள்ளிவாசல்களின் ஒலி பெருக்கிகள் மூலமும், துண்டுப்பிரசுரங்கள் மூலமும், வீடுவீடாகச் சென்று விழிப்புணர்வு நடைபெற்றுவருகிறது என்று அவர் கூறினார்.

எனினும் பாதை ஓரங்களிலும், வீடுகளிலும் டெங்கு நுளம்பு பரவுவதற்குரிய குப்பைகள், வெற்றுப்பாத்திரங்கள் அகற்றப்படாமல் உள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வாகனத்தை சீர்செய்வீர்கள். மாணவர்கள் உயர்கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துவார்கள்.

**இடபம்:** தன்னம்பிக்கை துளிர்விடும். தைரியமான முடிவுகளை எடுப்பீர்கள். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சியுண்டு. எதிர்காலத் திட்டங்களைப் பற்றி நண்பர்களிடம் விவாதிப்பீர்கள். உத்தியோகத்தில் திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும்.

**மிதுனம்:** திறம்படச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். ஆன்மிகவாதிகளின் சந்திப்பு நிகழும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். முன்கோபம், வீண் பதற்றம் விலகும்.

**கடகம்:** நம்பிக்கைக்குரியவர்களின் சந்திப்பு நிகழும். குடும்பத்தில் அமைதி நிலவும். பணம் தேவையான அளவு இருக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி, சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். மாணவர்களின் எண்ணங்கள் பூர்த்தியாகும்.

**சிங்கம்:** புதிய முயற்சிகள் வெற்றியடையும். சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிடைக்கும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். பணவரவு உண்டு.

**கன்னி:** யதார்த்தமாகப் பேசி அனைவரையும் வியக்க வைப்பதுடன் தடைப்பட்ட காரியங்களையும் விரைந்து முடிப்பீர்கள். வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக அமையும். மாணவர்களின் நினைவுத்திறன் அதிகரிக்கும்.

## நாளை

மார்கழி -25 புதன்கிழமை 09.01.2013
திதி: திரயோதசி பி.இ. 6.23 வரை
நட்சத்திரம்: கேட்டை பி.இ. 03.21
சுபநேரம்: 05.03- 06.33 வரை
ராகுகாலம்: 12.33- 02.03 வரை

**துலாம்:** உங்களை அறியாமலேயே தாழ்வு மனப்பான்மை தலை தூக்கும். முக்கிய கோப்புகளைக் கையாளும்போது அலட்சியமாக இருக்க வேண்டாம். வியாபாரத்தில் பணியாள்களால் பதற்றம் ஏற்படும். உத்தியோகத்தில் பிறரின் குறைகளைச் சுட்டிக்காட்ட வேண்டாம்.

**விருச்சிகம்:** வாகனத்தை இயக்கும்போது தொலைபேசியில் பேச வேண்டாம். சகோதர வகையில் அலைச்சல் உண்டு. உத்தியோகத்தில் அதிகாரிகளை நம்பி பெரிய முடிவுகள் எடுக்க வேண்டாம்.

**தனுசு:** மனக்குழப்பங்கள் விலகி தெளிவு பிறக்கும். உடன்பிறந்தவர்களால் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் மகிழ்ச்சியுண்டு. வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும்.

**மகரம்:** வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக இருக்கும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். அலுவலகத்தில் மதிக்கப்படுவீர்கள். வழக்குகளிலிருந்த தேக்க நிலை மாறும். தாயாரின் உடல் நிலை சீராக அமையும்.

**கும்பம்:** பிரியமானவர்களை கலந்தாலோசித்து முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உறவினர்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். அரசியல்வாதிகளின் நட்பு கிடைக்கும். நீண்டநாளாக நினைத்திருந்த காரியத்தை இப்பொழுது செய்து முடிப்பீர்கள்.

**மீனம்:** இனந்தெரியாத கவலைகள் வந்து நீங்கும். உறவினர்கள், நண்பர்களின் அன்புத் தொல்லை அதிகரிக்கும். கோபத்தால் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில் சக ஊழியரின் வேலையையும் சேர்த்துப் பார்க்க வேண்டி வரும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | | 9 | | | 6 | 5 | |
| | | 1 | | | 6 | | | 9 |
| | 6 | 9 | 3 | | | | 7 | |
| | 5 | | 1 | | | 2 | 8 | 6 |
| 6 | | | 5 | | 8 | | | 7 |
| 8 | 9 | 4 | | | 2 | | 3 | |
| | 3 | | | | 9 | 8 | 6 | |
| 2 | | | 7 | | | 9 | | |
| | 8 | 5 | | | 1 | | | 3 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 1 | 8 | 7 | 4 | 2 | 6 | 9 | 3 |
| 6 | 9 | 4 | 3 | 1 | 8 | 7 | 2 | 5 |
| 2 | 3 | 7 | 9 | 6 | 5 | 1 | 8 | 4 |
| 4 | 6 | 9 | 1 | 3 | 7 | 8 | 5 | 2 |
| 8 | 2 | 3 | 5 | 9 | 6 | 4 | 7 | 1 |
| 7 | 5 | 1 | 2 | 8 | 4 | 9 | 3 | 6 |
| 3 | 8 | 5 | 4 | 7 | 1 | 2 | 6 | 9 |
| 1 | 7 | 2 | 6 | 5 | 9 | 3 | 4 | 8 |
| 9 | 4 | 6 | 8 | 2 | 3 | 5 | 1 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
24 ★ 07 ★ 1923

மறைவு
09 ★ 12 ★ 2012

நித்திய பிதாவேசு! உமது சித்தத்தின் படி
உம்மிடம் அழைத்துக் கொண்ட அடியான்
அமரர் கயித்தார் மிக்கேல்
அவர்கள் இவ்வுலக வாழ்வில் அறிந்தும்,
அறியாமலும் செய்த பாவங்களை
உமது திருத்தோலின் கடூர காயத்தின் மூலம்
மன்னித்து நித்திய பேரின்ப மகிமையை
அளித்தருள வேண்டுமென்று உம்மை இரந்து
மன்றாடுகின்றோம்.

இன்று (08.01.2013) செவ்வாய்க்கிழமை நண்பகல்
12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்
பெறும் ஆன்ம இளைப்பாற்றி பிரார்த்தனையிலும்
தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும்
கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்
நீதிமன்ற வீதி, மல்லாகம்.

அமரர் கயித்தார் மிக்கேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறக்கும் குழந்தைகளுக்கும் வரி அறவிட்டாலும் ஆச்சரியமில்லை

## புதிய சிஹல உறுமயவின் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு,ஜன.8

திருமணம் முடிப்பதற்கான பதிவுக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. அடுத்த வருடத்திலிருந்து பிறக்கும் குழந்தைக்கும் அந்தக் குழந்தையை சுமந்த தாய்க்கும் வரி அறவிடப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இவ்வாறு புதிய சிஹல உறுமயவின் தலைவர் சரத் மனமேந்திரா குற்றம் சாட்டியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் 'எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு' எனும் தொனிப் பொருளில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில்' கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் வாழமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. பொருள்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. காஸ் விலை அதிகரித்துள்ளது. மின்சாரம், தொலைப்பேசி, தண்ணீர் மட்டுமன்றி எரிபொருள் கட்டணமும் மீண்டும் அதிகரிக்கும்.

தரமில்லாத அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதி நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது.

விலங்குகள் கூட உண்ண முடியாத பொருள்கள் இறக்குமதிசெய்யப்பட்டுள்ளன.

போர்க் காலத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் வடக்கிலும் தெற்கிலும் உயிரிழந்தனர். ஆனால், வடமத்திய மற்றும் தென் மாகாணங்களில் நாளொன்றுக்கு 10 பேர் அமைதியாகவே இன்று உயிரிழக்கின்றனர். ஆசனிக் அமிலத்தின் பயன்பாட்டால் இவ்வாறான உயிரிழப்புகள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பில் அரசு எந்த விதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. நாட்டில் சிவப்பு,மஞ்சள்,மீன் மழை பெய்துள்ளன. அவ்வப்போது பச்சை மழையும் பெய்துள்ளது. இது நல்ல சமிக்ஞையாகும்- என்றார். (ச)

## நாணயத்தாளை கடத்த முயன்ற கெமரூன் நாட்டு நபர் சிக்கினார்



கொழும்பு,ஜன.8

வெளிநாட்டு நாணயத்தாள்களை கடத்த முயன்றதாகக் கூறப்படும் கெமரூன் நாட்டு நபர் ஒருவரை சுங்க அதிகாரிகள் நேற்று திங்கட்கிழமை காலை கைதுசெய்தனர்.

இந்தச் சந்தேகநபர் சுமார் 3.5 மில்லியன் ரூபா பெறுமதியான நாணயத் தாள்களை மும்பைக்குக் கடத்த முயன்ற போதே கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபரிடமிருந்து 21,000 யூரோக்களை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். (ச)

## களனி பிரதேசசபை உறுப்பினர் கொலை; பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்படும்

### உறுதி வழங்கினார் ஜனாதிபதி



கொழும்பு,ஜன.8

களனி பிரதேசசபை உறுப்பினர் ஹசித மடவல படுகொலைச் சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்படும்.

இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார். இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விரிவான சுயாதீன விசாரணைகள் நடத்தப்படும் என்று அவர் கூறினார்.

இதேவேளை, ஹசித மடவலவின் படுகொலையுடன் களனிப் பிரதேச சபையின் முக்கிய அரசியல்வாதி ஒருவருக்கு தொடர்பு உண்டு என்று கருதப்படுகிறது.

2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3 ஆம் திகதி களனி பிரதேசத்தைச் சேர்ந்த அரசியல்வாதி ஒருவரின் ஊழல் மோசடிகள் தொடர்பில் தகவல்கள் வெளியிடப்பட்டன. அதற்குக் கிடைத்த பதிலடியாக இந்தக் கொலையைக் கருத வேண்டும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச)

## பிரதம நீதியரசர் விவகாரத்தில் தலையீடு செய்ய வேண்டும்

### மனித உரிமை சபையிடம் வேண்டுகோள்


கொழும்பு,ஜன.8

பிரதம நீதியரசர் விவகாரத்தில் மனித உரிமை சபை தலையீடு செய்ய வேண்டும் என்று ஆசிய சட்ட வள மையம் கோரிக்கை விடுத்துள்ளது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப் பிரேரணை சட்டம் ஒழுங்கை பாதிக்கும் என்று ஆசிய சட்ட வள மையம் தெரிவித்துள்ளது.

குற்றப் பிரேரணை செயற்பாடுகளினால் நாட்டின் ஜனநாயகம் மற்றும் சட்டம் ஒழுங்கு தொடர்பான பிரச்சினைகள் எழக்கூடும். பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை ஜனநாயகத்தைப் பாதிக்கும் என ஏற்கனவே ஐக்கிய நாடுகள் அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது என்று ஆசிய சட்ட வள மையம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. (ச)



களனிப் பிரதேச சபை உறுப்பினரான ஹசித்த மடவல சுட்டுக்கொலை செய்யப்பட்டதையடுத்து, களனி பிரதேசத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

## 'திவிநெகும' வேலைத்திட்டம் அதிகாரிகளுக்கு விளக்கமளிப்பு

### 15 இல் ஆரம்பம் என்கிறார் பஸில்

கொழும்பு,ஜன.8

'திவிநெகும' வேலைத்திட்டம் தொடர்பில் கீழ்மட்ட அதிகாரிகள் மற்றும் சமயத் தலைவர்களுக்கு தெளிவுபடுத்தும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இவ்வாறு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

'திவிநெகும' தொடர்பில் அமைச்சின் அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தும் வேலைத்திட்ட நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

. இந்த வேலைத்திட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி தொடக்கம் 20ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தப் பட வுள்ளது என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த வேலைத்திட்டத்தில் கிராம சேவையாளர்கள், சமுர்த்தி அதிகாரிகள், குடும்ப சுகாதார சேவையாளர்கள் உட்பட பல அதிகாரிகள் உள்வாங்கப்படவுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

**இந்த வேலைத் திட்டத்தில் கிராம சேவையாளர்கள், சமுர்த்தி அதிகாரிகள், குடும்ப சுகாதார சேவையாளர்கள் உட்பட பல அதிகாரிகள் உள்வாங்கப் படவுள்ளனர்.**



## ரயிலுடன் மோதி இளைஞன் சாவு

புத்தளம்,ஜன.8

புத்தளத்திலிருந்து சிலாபம் நோக்கி பயணித்த ரயிலுடன் மோதுண்டு இளைஞர் (வயது-27) ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று திங்கட்கிழமை காலை புத்தளம் - சிலாபம் ரயில் மார்க்கத்தில் பத்துளுஓயா பிரதேசத்தில்இடம்பெற்றது.

இந்த விபத்தில் உயிரிழந்தவர் பத்துளுஓயா பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச)

## தனியார் வைத்தியசாலைகளில் பணியாற்றத் தடை

கொழும்பு,ஜன.8

அரச மருத்துவ நிர்வாக சேவையில் கடமையாற்றும் மருத்துவ நிபுணர்கள் தனியார் வைத்தியசாலைகளில் பணியாற்றுவது தடை செய்யப் படும். அது தொடர்பாக விசேட சுற்றறிக்கை எதிர்வரும் பெப்ரவரி மாதம் வெளியிடப்படும் என்று சுகாதார அமைச்சின் செயலாளர் நிஹால் ஜயத்திலக்க தெரிவித்தார்.

அரச மருத்துவ நிர்வாக சேவையில் கடமையாற்றும் மருத்துவர்கள் தனியார் வைத்தியசாலையில் பணிபுரிவது ஏற்கனவே தடை செய்யப்பட்டிருந்தது என்று அவர் கூறினார்.

எனினும் ஒரு சிலர் தொடர்ந்தும் தனியார் வைத்தியசாலையில் கடமையாற்றுவது தெரியவந்துள்ளது.

அதனைக் கருத்தில் கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## பள்ளிவாசலை அகற்றுமாறு பிக்குகள் நடத்திய ஆர்ப்பாட்டத்துக்கு எதிர்ப்பு

### முஸ்லிம் தமிழ்த் தேசிய முன்னணி கண்டனம்

கொழும்பு,ஜன.8

. அநுராதபுரம், மல்வத்து ஓயா என்னும் இடத்திலுள்ள பள்ளிவாசலையும், அங்கு வாழும் முஸ்லிம் மக்களையும் அங்கிருந்து உடனடியாக அகற்றவேண்டும் என்று வலியுறுத்தி, பௌத்த பிக்குகளால் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டமைக்கு முஸ்லிம் தமிழ்த் தேசிய முன்னணி கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் முஸ்லிம் தமிழ்த் தேசிய முன்னணியின் தலைவர் அஸாத் ஸாலி தெரிவித்ததாவது:-

முஸ்லிம் மக்களுக்கு எதிராக நாட்டில் தொடர்ச்சியாக அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன.

தம்புள்ளையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த அடக்குமுறைகள் அநுராதபுரம் வரை தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

முஸ்லிம்களுக்கு எதிராக இந்த அரசால் இவ்வளவு அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டு வருகின்ற நிலையிலும், அரசுடன் ஒட்டிக்கொண்டுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கின்றது.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்து முஸ்லிம் காங்கிரஸ் செயற்பட வேண்டும்.

முஸ்லிம்களுக்கு எதிரான அடக்குமுறைகளை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும் என்றார் .

(ச-சி)

## ஹசித கொலையுடன் எனக்கு தொடர்பில்லை

### மேர்வின் சில்வா சொல்கிறார்

கொழும்பு,ஜன.8

களனி பிரதேச சபையின் உறுப்பினர் ஹசித மடவலவின் கொலையுடன் எனக்கு எவ்வித தொடர்பும் இல்லை என்று பொது மக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சில சந்தர்ப்பங்களில் இவ்வாறான கொலைகளின் போது சிலர் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படும். இறுதியில் அந்தக் குற்றச்சாட்டுக்கள் பொய் என்று நிரூபிக்கப்பட்டுள்ளன.

அமைச்சர் லலித் அதுலத் முதலி கொலை செய்யப்பட்ட போது அப்போதைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச மீது குற்றம் சுமத்தப்பட்டது. இறுதியில் அந்தக் குற்றச்சாட்டு பொய் எனத் தெரிவிக்கப்பட்டது. சுட்டுக்கொலை செய்யப்பட்ட ஹசித மடவலவின் உற்றார், உறவினர்களுக்கு இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.-என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி வெற்றிடம்

## முல்லைத்தீவு மாவட்ட வணிக, கைத்தொழில், வேளாண் ஒன்றியம்

மேற்படி முல்லைத்தீவு மாவட்ட வணிக, கைத்தொழில், வேளாண் ஒன்றியத்தில் பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப் படவுள்ளன.

1. பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் (Chief Executive Officer)
2. தகவல் உத்தியோகத்தர். (Information Officer)

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தமது பின்வரும் தகைமைகளைப் போட்டோபிரதி மூலம் 17.01.2013 ஆம் திகதிக்கு முன்பாக எமக்குக் கிடைக் கத்தக்கதாக அனுப்பிவைக்கவும்.

1. சுயவிவரம் அடங்கிய விண்ணப்பம்
2. தொழில் சார் தகைமைகள், அனுபவங்கள் முதலியன.
3. தமிழ், ஆங்கில, சிங்களமொழிகளில் உள்ள தேர்ச்சிகள்.
4. கிராம உத்தியோகத்தரின் வதிவிடச்சான்றிதழ்

தலைவர்/செயலாளர்,
**முல்லைத்தீவு மாவட்டவணிக, கைத்தொழில், வேளாண் ஒன்றியம், அனிஞ்சியன்குளம், யோகபுரம், மல்லாவி.** (C/5417)(2.6.7)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

*யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கான அறிவித்தல்*

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களினதும் வழமையான கல்விச் செயற்பாடுகள் செவ்வாய்க்கிழமை (08.01.2013) முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன. இவ்வறிவித்தலின் பிரகாரம் அனைத்து மாணவர்களும் பல்கலைக்கழகத்துக்கு சமுகமளிக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகின்றீர்கள்.

பதிவாளர்
07.01.2013


## O/L க்கு பின்னர் உங்கள் அடுத்த இலக்கு..

**Skills Training For O/L, A/L & Diploma Students**

ADOA ஒரே பாடநெறியில் மூன்று சான்றிதழ்கள் 3 in 1

**Adv. Diploma in Office Administration**

Office Application/Quick Books/DTP & Internet

Free Course Material – Duration: 4 Months



- Diploma in IT & Web Programming
- Diploma in Web Design & Development
- Diploma in Computer Application
- Adv. Diploma in Hardware & Networking
- Adv. Diploma in Java Programming
- Dip. in Accounting Using Quick Books

கொம்பியூட்டர் பயிற்சிகளுக்கான நேரடி கட்டணச் சலுகை

Graphics Animation Training
- Adv. Dip. in Digital Pre-press
- Dip. in Digital Video Production
- Diploma in 2D & 3D Animation
- Master Diploma in Multimedia

**CSC - ASIAN COMPUTER EDUCATION**

| யாழ்.நகரில் | நல்லூரில் | சாவகச்சேரியில் | நெல்லியடியில் |
|---|---|---|---|
| 2G, ஸ்ரான்லி வீதி, | 9, குமார வீதி, | கட்டுக்காணி வீதி | கொடிகாமம் வீதி, |
| T.P : 021-222 5677 | T.P : 021-222 9191 | T.P : 021-2270267 | T.P : 021-2262399 |


# OBITUARY

## EDITH CHANDRA MARIAMPILLAI



Beloved daughter of Late Mr.& Mrs Ernest, Loving wife of Late Edwin Mariampillai, Loving Mother of Manjula, Shyamala, Ravi, Suresh and Mithran, Mother - in - Law of Anton Emmanual, Late Pastor. M.Inparuban, Kohila, Prathisha & Gayathri, Precious grand mother of Samantha, Christina, Noel, Keturah, Deborah, Rannard, Joshua, Zandra, David, Rachel, Mirakla, Mishael Loving Great grand mother of.Noah, Beloved Sister of Late Peace Joseph, Hyacinth Ernest, Late Gloria Johnpillai, Grace Varnakulasinghe and Late Joy Ernest Rntered glory on 06.01.2013.

Funeral details will be announced Later.

**129, Main Street, Jaffna.** (28039)(6.7.11)

Mrs.Kohila Inparuban (Daughter, Informant)

## துண்டி மயானம் புனரமைப்பு

கொழும்புத்துறை துண்டி இந்து மயானப் புனரமைப்புப் பணிகள் மயான பரிபாலன சபையினால் ஆரம்பிக்கப் பட்டு துரிதகதியில் நடைபெற்று வருகிறது.

மயான எல்லைச் சுற்று சுற்றுமதில் அமைக்க நடவடிக்கைகள் முதற்கட்டமாக நடைபெற்று வருகின்றது.

அடுத்தகட்டமாக மயானமடம், எரியூட்டும் பகுதிக்கான மழைப் பாதுகாப்புக் கூரை என்பன அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

துண்டி இந்து மயானத்தைப் பயன்படுத்தும் கொழும்புத்துறை, ஈச்மோட்டை, கொய்யாத்தோட்டம். பாண்டியன்தாழ்வு சுண்டுக்குளிப் பகுதிகளில் வசிக்கும் மக்களிடமிருந்து திரட்டப்படும் நிதியைக்கொண்டு இந்தப் பணிகளை மேற்கொள்வதாக பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

மயானம் அமைந்திருந்த பகுதியை சுற்றி முன்னர் அமைக்கப்பட்டிருந்த சுவர்கள் இந்தப் பகுதியில் இடம்பெற்ற போர் நடவடிக்கையின் போது முற்றாக அழிவடைந்துள்ளன. தற்போது மயானத்தைச் சூழ மக்கள் மீளக்குடியமர்ந்து வருவதால் சுகாதாரம், பாதுகாப்பு நிலையை கருத்தில் கொண்டு மதில் அமைக்கப்பட்டு வருகின்றது. (ம-135)

## வெங்காயச் செய்கையில் ஆர்வம்

விதை வெங்காயத்தின் விலை 50 கிலோ 6 ஆயிரம் ரூபாவாக உயர்ந்திருப்பதோடு தரமான விதை வெங்காயத்தை இயல்பு நிலையில் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் காலபோக வெங்காயச் செய்கை ஆரம்பமாகியுள்ளது. யாழ்ப்பாண உள்ளூர் வெங்காயத்துக்கு கணிசமான விலையும் சந்தைப்படுத்துவதில் சிரமம் இல்லாத நிலையும் கடந்த காலங்களில் காணப்பட்டதை அடுத்து இந்த வருடம் வெங்காயச் செய்கையில் விவசாயிகள் ஆர்வத்தோடு ஈடுபட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் விதை வெங்காயம் ஐம்பது கிலோ 6 ஆயிரம் ரூபாவுக்கு மேலும் உயர்ந்துள்ளது. அத்துடன் தரமான விதை வெங்காயத்தை இயல்பு நிலையில் பெற்றுக் கொள்ள முடியாத நிலையும் காணப்படுகிறது என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர். விதை வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ள போதிலும் விவசாயிகள் இந்த வருடம் ஆர்வத்தோடு வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். (ம-11)

## முதலாமாண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 21.08.1938

ஆண்டவன்அடியில் 21.12.2011

**அமரர் இரத்தினசபாபதி குணநாயகி (பொன்னார்)**

தரணியில் நீங்கள் எம்முடன் வாழ்ந்த
அந்தப் பசுமையான நினைவுகள் என்றென்றும்
அகலா அணையாத தீபமாக இப் பூவுலகில்
நீங்கள் இறுதிவரை வாழ்வீர்கள்

இல-79 .வியாசர் வீதி. தோணிக்கல் .வவுனியா. (24364)(4.6.7)

கணவர், குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 27.06.1940



உதிர்வு 21.12.2011

**திருமதி. செல்லையா கமலம்**

திதி: அபரபக்க ஏகாதசி

ஆண்டொன்று சென்றாலும் அம்மா உன் வதனமுகம்
எம் மனதில் நிஜமாக நிற்கிறதே ஊர் பிரிந்தால் என்ன உலகம்
உருண்டால் என்ன உன் நினைவு மாறாதம்மா.

க.பிறேம், வள்ளி புனம், புதுக்குடியிருப்பு. (278042)(6.7.11)

உடன் பிறப்புகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 14.02.1931



மறைவு 09.12.2012

**அமரர் கந்தவனம் கயிலாசபிள்ளை**

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் நீக்கமற நிலைத்து விட்ட - ஐயா!
வையத்துள் நாம வாழும் காலம் வரை நீங்கள் தெய்வமாக என்றும் எமக்கு வழி காட்டி நிற்க
வேண்டும் ஐயா! பாரினில் மாண்புற நாம் வாழ்வதைப் பார்த்து
மகிழ்வீர் என்றிருந்தோம் பாதியில் எம்மை விட்டு நீர் சென்றதேனோ? - ஐயா

09.12.2012 அன்று சிவபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் மறைவில் பல வழிகளிலும் பங்கு கொண்டு உதவிகள் புரிந்து, ஆறுதல் கூறி, அனுதாபச் செய்திகள் அனுப்பி இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (08.01.2013) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'அன்னை அகம்', ஆனைக்கோட்டை வீதி. கொக்குவில். (27598)(6.7.11)

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




பெரும்பாலும்மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

## விபத்தில் முதியவர் காயம்

வேகமாக வந்த மோட்டார் சைக்கிளும் மிதி வண்டியும் மோதியதில் மிதி வண்டியில் பயணம் செய்தவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகி தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றுள்ளது.

சூராவத்தை சுன்னாகத்தைச் சேர்ந்த சரவணன்-அருணாசலம் (வயது-71) என்ற முதியவரே இவ்வாறு காயப்பட்டவராவார். மல்லாகத்திலிருந்து சுன்னாகம் நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது பின்னால் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதிவிட்டு நிற்காது வேகமாக தப்பிச் சென்று விட்டதாக தெரிய வருகின்றது. (3-36)

சட்டக் கல்லூரி அனுமதிப் பரீட்சையில் மோசடியா?

# சி.ஐ. டியினரால் நிரூபிக்க முடியுமோ, இல்லையோ: எம்மால் முடியும் என்கிறார் அமைச்சர் சம்பிக்க

2012ஆம் ஆண்டு சட்டக் கல்லூரி அனுமதிப் பரீட்சையில் திட்டமிட்ட முறையில் மோசடிகள் இடம்பெற்றுள்ளன. இது தொடர்பாக இரகசியப் பொலிஸாரால் நிரூபிக்க முடியுமோ இல்லையோ ஆனால் இவற்றை ஆதாரபூர்வமாக நிரூபிக்கத் தான் தயாரென மின்சக்தி எரிசக்தி துறை அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

சட்டக்கல்லூரி அனுமதிப் பரீட்சையில் மோசடிகள் இடம்பெற்று வருவதாக பல தரப்பினராலும் கருத்துக்கள் கூறப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

''2012ஆம் ஆண்டுக்கான சட்டக் கல்லூரி அனுமதிக்கான பரீட்சையில் திட்டமிட்ட முறையில் மோசடிகள் இடம்பெற்றுள்ளன. தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலமான மாணவர்கள் அதிகளவில் சித்தியடைந்துள்ளனர்.

இவ்வாறான நிலையில், இந்தவிடயம் தொடர்பில் ஆராய்ந்து பார்த்தபோது, இதில் பெரும் பிரச்சினைகள் இடம்பெற்றுள்ளமை தெரியவருகிறது. மேற்படி பரீட்சைக்கான புள்ளி வழங்கல் நேர்மையான முறையில் இடம்பெற்றது என எவராவது கூறுவாராயின், அது முழுப் பொய்யாகும்.

''சட்டக் கல்லூரி அனுமதிப் பரீட்சையில் மோசடிகள் இடம்பெற்றுள்ளன என்பதை எம்மால் ஆதாரபூர்வமாக நிரூபிக்க முடியும். மேற்படி பரீட்சை வினாத்தாள் முன்கூட்டியே வெளியிடப்பட்டதா, இல்லையா என்பதை இரகசிய பொலிஸாரால் நிரூபிக்க முடியுமோ இல்லையோ, ஆனால் அதை எம்மால் உறுதியாக நிரூபிக்க முடியும். அதற்குத் தகுந்த ஆதாரங்கள் எம்மிடம் இருக்கின்றன'' . இவ்வாறு தெரிவித்துள்ளார் அமைச்சர் சம்பிக்க.

அதேவேளை, சட்டக் கல்லூரி அனுமதிப் பரீட்சையில் மோசடிகள் இடம்பெற்றுள்ளன என எழுந்துள்ள குற்றச் சாட்டுக்கள் தொடர்பில், நிலையியல் கட்டளை 23/2ஆம் பிரிவுக்கமைய நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம், நாடாளுமன்றத்தில் விசேட அறிவிப்பொன்றை விடுக்கவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (3)

# பொங்கல் பொருள்களை நேரகாலத்துக்கு சங்கங்கள் விநியோகிக்க வேண்டும்

## கூட்டுறவு உதவி ஆணையாளர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜன.8

தைப்பொங்கலை முன்னிட்டு பொங்கல் பொருள்களை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நுகர்வோருக்கு முன்கூட்டியே விநியோகிக்க வேண்டும் என்று மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் சங்கங்களைக் கேட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்; குடாநாட்டில் உள்ள அனைத்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் பொங்கலுக்குரிய பொருள்களை முன்கூட்டியே கொள்வனவு செய்ய வேண்டும்.

இந்தப் பொருள்கள் யாவும் தரமானதாக இருப்பதோடு மக்களுக்கு அவற்றை முன்கூட்டியே விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வழமையாக சில சங்கங்கள் தைப்பொங்கலுக்கு முதல் நாளே பொங்கல் பொருள்களைக் கொள்வனவு செய்து நுகர்வோருக்கு விநியோகித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (3-17)

# நல்லூர் பிரதேச சபையினால் புனரமைக்கப்படவுள்ள வீதிகள்

நல்லூர் பிரதேச சபையினால் இந்த வருடம் வீதி புனரமைப்புப் பணிக்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில் கோண்டாவில் பகுதியில் பாரதி வீதி முதலாம் ஒழுங்கைக்கு ஒரு லட்சத்து 99 ஆயிரத்து 80 ரூபாவும், விவேகானந்தா வீதி முதலாம் ஒழுங்கை ஆறு லட்சத்து 24 ஆயிரத்து 890 ரூபாவும், நாராயண வீதி 3 ஆம் ஒழுங்கைக்கு மூன்று லட்சத்து 50 ஆயிரத்து 280 ரூபாவும், காளி கோயில் முன் ஒழுங்கைக்கு மூன்று லட்சத்து 35 ஆயிரத்து 160 ரூபாவும், வீரபத்திரர் ஒழுங்கைக்கு இரண்டு லட்சத்து 4 ஆயிரத்து 120ரூபாவும், உப்புமடம் பிள்ளையார் கோயில் வீதிக்கு ஐந்து லட்சத்து 3 ஆயிரத்து 40 ரூபாவும், ஞானவீர சங்க சனசமூக நிலையத்துக்குச் சமீபமாக அருகில் உள்ள வீதிக்குமூன்று லட்சத்து 80 ஆயிரத்து 160 ரூபாவும், முத்தட்டுமடம் வீதி முதலாம் ஒழுங்கைக்கு இரண்டு லட்சத்து 77 ஆயிரத்து 200 ரூபாவும், சமுர்த்தி வங்கி ஒழுங்கைக்கு இரண்டு லட்சத்து 76 ஆயிரத்து 480 ரூபாவும் டிப்போ வீதி வடக்கு கோளாவத்தை சிவன் வீதிக்கு இரண்டு லட்சத்து 99 ஆயிரத்து 520 ரூபாவும், புனரமைப்பு வேலைகளுக் கென இந்த ஆண்டு சபை நிதியில் இருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (3-7)

## வாழ்வாதார உதவியாக மர முந்திரிகைக் கன்றுகள்

யாழ்ப்பாணம், ஜன.8

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் நல்லூர் பிரதேச செயலகத்துக்கு 150 மரமுந்திரிகைக் கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. அரியாலை கிழக்கு ஜே/90 கிராம அலுவலர் பிரிவில் உள்ள பயனாளிகளுக்கு இந்த மர முந்திரிகைக் கன்றுகள் வாழ்வாதார உதவியாக வழங்கப்பட்டுள்ளன.

மணல் பாங்கான பகுதிகளான ஜே/89, ஜே/90 கிராம அலுவலர் பிரிவுகளுக்கு மேலதிகமாக வரவிருக்கும் கன்றுகளும் வழங்கக் கூடியதாக இருக்கும் எனவும் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தெரிவித்தார். (3-7)

## திருட்டு போனது நீர் நிரப்பும் இயந்திரம்

கொழும்புத்துறை, ஜன.8

யாழ்.கச்சேரியடி முதலியார் ஒழுங்கையில் உள்ள வீடொன்றில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நீர் நிரப்பும் இயந்திரம் திருடப்பட்டுள்ளது.

தண்ணீர்த் தாங்கிக்கு நீர் நிரப்புவதற்காக பொருத்தப்பட்டிருந்த 'மோட்டரே' இவ்வாறு திருட்டுப்போயுள்ளது.

அன்றைய தினம் பகல் வேளையில் இனந்தெரியாத சிலர் அந்தப் பகுதியில் நடமாடியதாக பொதுமக்கள் தெரிவித்தனர். (3-135)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**
46/2, பழைய வீதி, வட்டாரம்- 6 கோப்பாயில் சகல வசதிகளுடன் கூடிய வீடு மற்றும் 6 பரப்பு 7 குளிக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0775462482
(28040) (6.7.4)

**காணி விற்பனைக்கு**
உடையார் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலில் உள்ள கிணற்றுடன் கூடிய 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 1133375, 0041 772910427.
(27566) (6.7.4)

**அறை வாடகைக்கு**
யாழ். நகரின் மத்தியில் சகல வசதிகளுடன் கூடிய பெரிய அறை வாடகைக்குண்டு.
உயர் பதவி வகிப்போர் (இளம் தம்பதியர்) விரும்பத்தக்கது.
தொடர்பு: 0771884629.
(28043)(6.7.4)

**TV கள் மலிவு விற்பனை**
மிக மிக மலிவு விலையில் SONY Wega Flat TV கள் 21"-13000/=, 29"-16000/= ,பைனியர் அம்பிளிபயர், Box வகைகள் ,DVD என்பன
தொடர்பு:0770440570 (அப்பளம்)
சோனிரேட் சென்ரர் (கொமர்சல் வங்கி எதிரில்) 56, K.K.S வீதி, சுன்னாகம்.
(27264) (6.7.4)

**கடைகள் வாடகைக்கு**
யாழ். முனீஸ்வரன் வீதியில் அமைந்து இருக்கும் கடைகள் வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு: 0776932324.
(28037)(6.7.4)

**விற்பனைக்கு**
NP PT- 9xxx தொடரிலக்க வெள்ளை நிற நியூமொடல் மகேந்திரா A/C, Power Steering லீசிங்குடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0716182182, 0777730303.
(சி/5254)(6.7.4)

## நிஜம் இரண்டு நிழலாகி சில ஆண்டுகளாகின்றன

7ஆம் ஆண்டு | 10ஆம் ஆண்டு

மண்ணில் 17.01.1923
விண்ணில் 29.12.2006
திதி:தசமி 22.12.2012



அமரர் சின்னத்துரை நவரத்தினம்
(பிரபல வைத்தியர்-கோப்பாய் மத்தி)



அமரர் மங்கையர்க்கரசி நவரத்தினம்

மண்ணில் 19.08.1925
விண்ணில் 30.12.2002
திதி:துவாதசி 08.01.2013

அப்பா! அம்மா! என்ற சொல்லுக்கு அர்த்தம் தந்து வாழ்ந்தவர்களே!
அன்பு! என்ற சொல்லுக்கு உங்கள் சொந்தங்களைக் கண்டு
இன்முகத்தோடு அரவணைத்து விருந்தோம்பிப் பெருவாழ்வு வாழ்ந்தவர்களே!
ஆலமரம் போல வாழ்ந்து நீங்கள் இன்று சாய்ந்து போனாலும்
அதன் விழுதுகளில் ஈரம் இன்னும் காயவில்லையே!
இன்றுவரை நீங்கள் எம்முடன் இருப்பதாகவே
எமது உள்ளம் ஆசையுடன் அசைபோடுகின்றது.
உணர்வுகள் துடிக்கின்றன!


ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

V.T.S. லேன்,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.
(28008)(5.6.7)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 24.03.1940



உதிர்வு 09.12.2012

### அமரர் கார்த்திகேசு பஞ்சலிங்கம்

(பிரதம மருத்துவ ஆய்வு கூட தொழில் நுட்பவியலாளர்)

உங்களை நாம் மறந்தால் தானே நினைப்பதற்கு. எத்தனை நாள் சென்றாலும் உங்களுடைய அன்பும் பாசமும் எம் மனதை விட்டு விலகா. பொலன்னறுவையிலிருந்தும் கொழும்பிலிருந்தும் தொலைபேசியில் அழைத்துக்கொண்டேயிருப்பீர்களே. உங்கள் பிரிவு எமக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு மும் மொழிகளிலும் சரளமாகப் பேசி மூவினத்தினத்ரோடும் சுமமாகப் பழகி. நன்றாகவே வாழ்ந்தீர்களே. அமரருக்கு இறுதி மரியாதை செலுத்தியவர்கள் எல்லோருக்கும் எம் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். உங்கள் ஆத்மா சாந்தி யடைய நாம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

நவாலி வீதி, சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

குடும்பத்தினர்.
(27968)(6.7.11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன எழுத்தாளர்களின் பதிப்புரிமையை மீறியது அப்பிள்
## ரூ.22 கோடி நட்டஈடு வழங்க நீதிமன்றம் உத்தரவு

சீன எழுத்தாளர் களினதும் அந்நாட்டு நிறுவனங்களினதும் பதிப்புரிமையை மீறிய குற்றத்திற்காக பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குமாறு சீன நீதிமன்றம் அப்பிள் நிறுவனத்துக்கு உத்தரவிட்டுள்ளது.

தங்களது புத்தகங்களின் இலத்திரனியல் பதிப்பு தமது அனுமதி இன்றி Apple's online store ஊடாக விற்பனை செய்யப்பட்டதாக பாதிக்கப்பட்ட 8 எழுத்தாளர்களும் 2 நிறுவனத்தினரும் தெரிவித்து நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்தப் வழக்கை கடந்த வாரம் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட சீன நீதிமன்றம் பாதிக்கப்பட்டவர்களுக்கு சுமார் 21 கோடி 90 லட்சம் ரூபாவை நட்டஈடாக வழங்குமாறு அப்பிள் நிறுவனத்துக்கு உத்தரவிட்டது.

இந்த பதிப்புரிமை மீறல் விடயத்தில் தாம் கூடிய கவனம் செலுத்துவதாக அப்பிள் நிறுவனத்தின் பேச்சாளர் கரோலின் வூ தெரிவித்தார்.

இவ்வாறு பதிப்புரிமையை மீறிய குற்றத்திற்காக சீனாவில் அப்பிள் நிறுவனத்துக்கு முன்பும் ஒரு தடவை அபராதம் விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

சீன கலைக்களஞ்சிய வெளியீட்டாளர் ஒருவரின் பதிப்புரிமையை மீறியமைக்காகவே கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் அந்த அபராதம் விதிக்கப்பட்டது.

அதன்படி, பாதிக்கப்பட்ட வெளியீட்டாளருக்கு 520,000 சீன நாணயத்தை அப்பிள் நிறுவனத்துக்கு வழங்க நேர்ந்தது. இதுபோக இந்த நிறுவனம் சட்டப் பிரச்சினை ஒன்றையும் சீனாவில் அண்மையில் எதிர்கொண்டது.

அப்பிள் நிறுவனம் தனது Tablet pc இக்கு வைத்துள்ள பெயர் 'iPad' என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றாகும். ஆனால்,சீனச் சந்தையில் iPad என்ற பெயருக்கு தாமே சொந்தக்காரர் எனத் தெரிவித்து அந்த நாட்டின் Proview என்ற நிறுவனம் உரிமை கோரியது. 2000 ஆம் ஆண்டு இப்பெயர் தம்மால் பதியப்பட்டுள்ளது என்றும் கூறியது.

ஆனால், iPad என்ற பெயரை உலகம் முழுவதும் பயன்படுத்துவதற்கான உரிமையை Proview நிறுவனத்தின் தைவான் இணை நிறுவனத்திடம் இருந்து சுமார் 7 கோடி 31 லட்சம் ரூபாவுக்குப் பெற்றதாக அப்பிள் நிறுவனம் கூறியது.

iPad என்ற பெயரை சீனச் சந்தையில் பயன்படுத்துவதற்காக அப்பெயரை விற்கும் உரிமை தனது இணை நிறுவனத்துக்கு இல்லை என்று Proview கூறியது.



இதனால், iPad என்ற பெயரை சீனாவின் சில பகுதிகளில் இருந்து நீக்கும் நிலைக்கு அப்பிள் நிறுவனம் தள்ளப்பட்டது. இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக அப்பிள் நிறுவனம் கடந்த வருடம் ஜூலை மாதம் Proview நிறுவனத்துக்கு 798 கோடி ரூபாவை வழங்கியது.



# எம். டி குணசேன புத்தக நிலையத்தின் நம்பிக்கை அங்கத்துவ முன்னெடுப்பு

புத்தகங்களைப் பிரசுரித்து, அச்சிட்டு விற்பனை செய்வதில் முன்னிலை வகித்து வருகின்ற எம்.டி. குணசேன நிறுவனம் தொழில்துறையின் வரலாற்றில் முதற்தடவையாக நம்பிக்கை அங்கத்துவ முன்னெடுப்பொன்றை ஆரம்பித்து வைத்துள்ளது.



எம்.டி. குணசேன நிறுவனத்தின் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளரான ரஜீவ் குணசேன முதலாவது நம்பிக்கை அங்கத்துவ அட்டையை கொழும்பு விசாகா வித்தியாலயத்தின் அதிபரான திருமதி சந்தமாலி அவிருப்பொல மற்றும் திருமதி ஷயாமி டீன் ஆகியோரிடம் கையளித்துவைத்தார்.

புத்தாக்கத்திற்கு வழிவகுத்துள்ள இந்த அறிமுகத்தின் உதவியுடன் வாடிக்கையாளர்கள் தற்போது எந்தவொரு எம்.டி குணசேன விற்பனை நிலையங்களிலும் ஒரு நம்பிக்கை அங்கத்துவ உறுப்பினராக மாறி தாங்கள் கொள்வனவுகளை மேற்கொள்ளும் வேளைகளில் அங்கத்துவப் புள்ளிகளை உபயோகித்துக் கொள்ளவோ, அங்கத்துவ உறுப்பினர்களுக்கு மட்டும் பிரத்தியேகமாக கிடைக்கப்பெறுகின்ற பருவகால ஊக்குவிப்புக்களை அனுபவிக்கவோ, நிறுவனத்தின் நிகழ்வுகளுக்குப் பிரத்தியேகமாகக் கிடைக்கப்பெறுகின்ற பருவகால ஊக்குவிப்புக்களை அனுபவிக்கவோ, நிறுவனத்தின் நிகழ்வுகளுக்குப் பிரத்தியேகமாக அழைக்கப்படவோ, புதிய உற்பத்திகள் மற்றும் சேவைகள் தொடர்பான பிந்திய செய்திகள் மற்றும் புதிதாக வெளியிடப்பட்டுள்ள தகவல்களைப் பெற்றுக்கொள்ளவோ என ஏராளமான பிரத்தியேகமான அங்கத்துவ சலுகைகளை அனுபவிக்க முடியும்.

# ஹட்ச் தொலைத்தொடர்பு நிறுனத்துக்கு புதிய நிறைவேற்று அதிகாரி நியமனம்



ஹட்ச் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக திருகுமார் நடராசா நியமிக்கப்பட்டுள்ளார் என்று ஹட்சிசன் ஏசியா ரெலிகொமியுனிகேஷன்ஸ் லிமிடெட், ஹொங்கொங் அறிவித்துள்ளது. உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதென ஹட்ச் அறிவித்துள்ளது.

தொலைத்தொடர்புகள் துறையில் சுமார் 20 வருட காலம் பணியாற்றிய அனுபவத்தை கொண்டுள்ள திரு, இதில் 14 வருடங்களை ஹட்சிசன் ரெலிகொம், ஹொங்கொங் அலுவலகத்திலும், 4 வருடங்களை சிங்கப்பூர் ரெலிகொம் நிறுவனத்திலும், அண்மையில் மத்திய கிழக்கு நாடுகளில் ஜிஎஸ்எம் வலையமைப்பை வெற்றிகரமாக மத்திய ஆபிரிக்க நாடுகளில் செயற்படுத்திக் கொண்டிருக்கிறார்.

இலங்கையின் தொலைத்தொடர்புகள் துறையில் முன்னர் பணியாற்றிய அனுபவத்தை கொண்டுள்ள இவர், 2002 - 2007 வரையிலான காலப்பகுதியில் 5 ஆண்டுகள் வரையில் இலங்கையின் ஹட்ச் நிறுவனத்தில் பணியாற்றியிருந்ததுடன், 2004 ஆம் ஆண்டில் ஜிஎஸ்எம் சேவைகளை இலங்கையில் ஆரம்பித்திருந்தார்.

# அப்பிளின் பிரதம நிறைவேற்று அதிகாரியின் சம்பளம் குறைப்பு



அப்பிள் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி டிம் குக்கின் சம்பளம் 378 மில்லியன் அமெரிக்க டொலரில் இருந்து 1.4 மில்லியன் அமெரிக்க டொலராகக் குறைக்கப்பட்டுள்ளது.

டிம் குக் அப்பிள் நிறுவத்தில் அதிகமான பங்குகளைக் கொண்டிருந்ததாலேயே 378 மில்லியன் அமெரிக்க டொலர் சம்பளமாக வழங்கப்பட்டது என்றும் இப்போது அவருக்கு எதுவித பங்குகளும் இல்லாததால் சம்பளம் குறைக்கப்பட்டுள்ளது என்றும் அப்பிள் நிறுவத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கை வங்கியின் முன்னாள் தலைவருக்குப் பாராட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜன.08

இலங்கை வங்கியின் தலைவராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற டாக்டர் காமினி விக்கிரமசிங்கவுக்கு வடமாகாண இலங்கை வங்கிக்கிளைகள், மற்றும் கமக்கார அமைப்புக்கள், கடற்றொழிலாளர் சங்கங்கள் இணைந்து சேவை நலன் பாராட்டு விழாவை கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் இலங்கை வங்கி தலைமைக் காரியாலய மண்டபத்தில் நடத்தின.

வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் ஏ.டி.சுமணஸ்ரீ தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிழக்கு மாகாண இலங்கை வங்கி உதவிப் பொது முகாமையாளர் ஆனந்தநடேசன் கலந்து கொண்டார். நிகழ்வில் வடமாகாணத்தைச் சேர்ந்த இலங்கை வங்கியின் 68 கிளைகளின் கிளை முகாமையாளர்கள் , கமக்கார அமைப்புக்கள் , கடற்றொழில் சங்கங்கள், வணிகர் மன்றங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

டாக்டர் காமினி விக்கிரமசிங்க தலைவராக இருந்த காலத்தில் யுத்தத்தினால் அழிவடைந்த வடமாகாணத்தின் அபிவிருத்தியைக் கருத்திற் கொண்டு மக்களின் வாழ்வாதாரத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன் மேற்கொண்ட சேவைகள் தொடர்பாக கலந்து கொண்ட பிரதிநிதிகளால் உரையாற்றப்பட்டன. குறிப்பாக பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை அதிகரிக்கும் நோக்குடன் வடமாகாணத்தில் வங்கிக் கிளைகளின் எண்ணிக்கையை 20 இலிருந்து 68 ஆக அதிகரித்து மக்களுக்கு அளப்பரிய சேவையை வழங்கியதாகவும் சிறு கைத்தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு கடன்களை வழங்கியதுடன் வடமாகாணத்தில் அதற்கான ஆலோசனை நிலையத்தையும் அமைத்துக் கொடுத்துள்ளதாகவும் வடமாகாணத்தில் உள்ள வர்த்தகர் கள், விவசாயிகள், கடற்றொழிலாளர்களுக்கு தேவையான அளவு கடன்களை வழங்கி பாதிக்கப்பட்ட பல குடும்பங்களின் வாழ்வாதாரத்தை அதிகரிக்கச் செய்தமை, வடமாகாணத்தில் யுத்தத்தின் பின்னர் அமைக்கப்பட்ட நலன்புரி நிலையங்களுக்குள் கிளைகளை அமைத்து மக்களுக்கு உன்னத பணியாற்றியமை தொடர்பாகவும் பாராட்டி பலர் உரையாற்றினர்.

இலங்கை வங்கி தலைவரின் சேவையினைப் பாராட்டி வெள்ளிக் கிரீடம் அணிவிக்கப்பட்டதுடன் பாராட்டு மற்றும் நினைவுப் பத்திரங்களும், பல பரிசுகளும் வழங்கப்பட்டன. (த-9)

# ஒரு கோடி Galaxy phone விற்பனை




அறிமுகப்படுத்தப்பட்டு 2 ஆண்டுகளில் ஒரு கோடி 'கேலக்சி எஸ் ' செல்போன்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன என்று சம்சுங் நிறுவனம் தெரிவித்துள்ளது.

நவீன வசதிகளை கொண்ட கேலக்சி எஸ், கேலக்சி எஸ்2, கேலக்சி எஸ்3, கேலக்சி நோட், கேலக்சி நோட் 2 மற்றும் கேலக்சி ஒய் ரகங்கள், வாடிக்கையாளர்களை மிகவும் கவர்ந்தன என்றும் இதனால் அவற்றின் விற்பனை அதிகரித்துள்ளன என்றும் சம்சுங் -மொபைல் துணைத் தலைவர் அசிம் வார்சி கூறினார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீரில் கரைந்த ஈராண்டுகள்.....



## விஜயகுமார் சரோஜினிதேவி

மண்மகிழ
24.05.1956

கண்நெகிழ
01.01.2011

அம்மா என்று வாயார
உனை அழைக்க
எம் வார்த்தைகள் தவிக்குதம்மா
எம் நினைவுகளால் தோய்ந்த நிலா
இன்று வெளிச்சத்தைப் பறித்துச்
சென்றாய் அம்மா
எம்மை உன் கண்ணுக்குள்
அடைகாத்து கருவறையில்
சுமந்தவளே!
நீ மண்ணுக்குள் போனதால்
நாம் மண்டியிட்டுத் தவிக்கின்றோம்.

குடும்பத்தினர்.
நாவலடி, கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

(A/5420)(2-6)

# மரம் விழுந்ததால் போக்குவரத்துத் தடை

கல்முனை,ஜன.8

கல்முனை - மட்டக்களப்பு பிரதான வீதியின் போக்கு வரத்துக்கள் நேற்று செவ்வாய்க் கிழமை நண்பகல் முதல் தடைப்பட்டுள்ளன.

களுவாஞ்சிக்குடி பிரதான வீதியோரத்தில் இருந்த புளிய மரம் ஒன்று வீதியின் குறுக்காக வீழ்ந்துள்ளதாலேயே கல்முனை - மட்டக் களப்பு பிரதான வீதியின் போக்குவரத்துக்கள் தடைப் பட்டுள்ளன.

கடும் காற்றுடனான மழை பெய்து வருவதன் காரணமாக களுவாஞ்சிக் குடி நுழை வாயில் பகுதியில் இந்த மரம் சரிந்து வீழ்ந்துள்ளது.

குறித்த மரத்தை வீதியிலிருந்து அகற்றி, போக்குவரத்தினை சீர்செய்வதற்கான நடவடிக்கைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

கட்டடங்கள் விற்பனைக்கு
யாழ். நகர் மத்தியில்
கட்டடங்கள் விற்பனைக்கு
உண்டு
தொடர்பு: 0776006506

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அழைப்பும்



தோற்றம்
03.06.1937

மறைவு
09.12.2012

## அமரர் சின்னத்தம்பி யோகர்

(ஓய்வு பெற்ற பரிசோதகர், இலங்கை போக்குவரத்துச் சபை - கோண்டாவில் டிப்போ.)

இன்று (08.01.2013) செவ்வாய்க்கிழமை அந்தியேட்டிக்கிரியைகள் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்

ஏழாலை மத்தி
ஏழாலை.

குடும்பத்தினர்
யோ. கோணேசலிங்கம்(மகன்)

(28044)(6.7.4)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
07.08.1954

மறைவு
09.12.2012

## அமரர் சுப்பன் வடிவேலன்

எம் குடும்ப விருட்சத்தின் வேராக நின்று நாம்
தரணிதனில் வாழ்வாங்கு வாழ்ந்திடவே
உம்மையே உருக்கி ஒடுக்கி எம் வாழ்வுக்கு
வழிகாட்டி ஒளி தந்து சீராட்டி வளர்த்தெடுத்து
உம் இழப்பால் நாம் வாடித் தவித்திடவே வைத்து
இறை நிழல் சரணடைந்த தங்களுக்கு
எம் இதய அஞ்சலிகள் சமர்ப்பித்தோம் இங்கு,
எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்திபெற
எல்லாம் வல்ல ஆண்டவனைப் பணிகின்றோம்.

இன்று (08.01.2013) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்வதோடு, அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் பங்கு பற்றிச் சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அழைக்கின்றோம்.

கைதடி மேற்கு, கைதடி.

குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள்.

(A/5426)(2.7)


# தரம் 5, 4 மாணவர்களே!

இதோ! புலமை 13 வெளிவந்துவிட்டது




உங்கள் பிரதிகளுக்கு அருகிலுள்ள
சுடர்ஒளி, உதயன் முகவர்களை நாடுங்கள்

தொடர்புகளுக்கு - 071 68[illegible]
வடமாகாணத்தொடர்புகளுக்கு - 071 6182182, 021 5677222



# Vacancies

எமது யாழ்.நகர் மற்றும் நல்லூர் கிளைகளில் கீழ்க்கண்ட பதவிகளுக்கான பணியிடங்களுக்கு தகுதியான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| Course Counselor | - Female |
| Customer Relation Officer | - Female |
| Computer Instructor | - Male / Female |
| Assist. Lecturer for Java, Tally | - Male / Female |
| Accounts Trainee | - Female |

நேரடியாக, தபால், இமெயில் மூலமாகவும் விண்ணப்பிக்கலாம்

ASIAN COMPUTER EDUCATION
#2G, Stanley Road, Jaffna.
e-mail : asianedu@dialogsl.net


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் இலட்சுமிப்பிள்ளை



நவாலி வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிர மணியம் இலட்சுமிப்பிள்ளை நேற்று(07.12.2013) திங்கட்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் காலமானார்

அன்னார் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் குமாரசுவாமி, கமலா, பிறைசூடி, விக்கினராசா ஆகியோரின் பாசமிகு தாயும் மகேஸ்வரி, நகுலாம்பிகை, பத்மாவதி, சண்முகநாதன், ஆகியோரின் அன்பு மாமியும், ரமேஸ்,சறோ, பரணி, யாமினி, பாஸ்கரன், சந்திரா, ஜெயா, சிறீதங்கா,பாபு, சோமோஸ், அனுசா, கலைவாணி, பரா, லிங்கேஸ்வரன், சோபி,தர்மா, கோபி, தர்மினி, மதுசூதனன், அஜந்தா, சுதா, வேந்தன், தீபா, வினோ, ஈஸ்வரன், ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2013) செவ்வாய் காலை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 9.00மணியளவில் தகனக்கிரியை க்காக ஆரியம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி வடக்கு,
நவாலி.

தகவல்:
குடும்பத்தினர்

(28085)(o)

# மரண அறிவித்தல்

## ஐயம்பிள்ளை சிவமூர்த்தி



அச்சுவேலிதெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை சிவமூர்த்தி நேற்று(07.01.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை-முத்து தம்பதியரின் அன்பு மகனும், தம்பிமுத்து, இராணிஅம்மா, சித்திரலேகா, இராமச்சந்திரன், ரூபவதி, சிவமணியம்(ரூபன்), அகியோரின் அன்புச் சகோதரனும், சிவயோகம், இராசதுரை, துரைசிங்கம், நித்தியானந்ததேவி, மாலினி, காலஞ்சென்ற நடேசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அச்சுவேலியிலுள்ள இல்லத்தில் இன்று (08.01.2013) செவ்வாய்க்கிழமை நடைபெற்று பூதவுடல் பிற்பகல் ஒரு மணிக்கு அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அண்ணாவீதி,
அச்சுவேலிதெற்கு,
அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

# காணி விற்பனைக்கு

இல.46, ஆசீர்வாதம் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 6 பரப்பு 1.22 குளி விஸ்தீரணம் கொண்ட வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0772487301, 0777763436

# மணமகள் தேவை

பிரபல அரச நிறுவனத்தில் அலுவலக முகாமையாளராகக் கடமையாற்றும் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த நாற்பது வயதுடைய மணமகனுக்கு மணமகளைத் தேடுகின்றோம்

தொடர்புகளுக்கு :
0717511959

(27493)

# தாட்ஷா அழகுக்கலைப் பயிலகம்

சமையல் கலைவகுப்புகள்
(குக்கரிங் வகுப்பு)
இல.84,பிறவுண் றோட்,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.
தொ.பே :
0212229713,
0773383643

(c-5432)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

# மரண அறிவித்தல்கள்

## சிதம்பரப்பிள்ளை முத்துலிங்கம்



மண்டை தீவு 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நாயன்மார்கட்டை வதிவிடமாகவும் கொண்ட சிதம்பரப் பிள்ளை முத்துலிங்கம் நேற்று (07.01.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை- நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான ஆறுமுகம் - பொன்னம்மா தமபதியரின் அன்பு மருமகனும் தங் கச்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும், நவநீதரம்பை, இராஜகோபால் (முகாமைத்துவ உதவியாளர்,பிராந் திய சுகாதாரசேவை பணிமனை, யாழ்ப்பாணம்.) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சிவராசா மற்றும் சிவசோதி ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான சின்னம்மா, தங்கம்மா, மாரிமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சிவகுரு, வள்ளியம்மை, தங்கம்மா மற்றும் சின்னத்துரை, சின்னம்மா, ஆகியோரின் மைத்துனரும், நிருபனா, சதுமிதா, ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 08.01.2013 பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உறறார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

70, இராஜேஸ்வரி வீதி,
நாயன்மார் கட்டு,யாழ்ப்பாணம்.

தகவல்:
மு.இராஜகோபால்.
(மகன்)

(28088)(o)

## வைத்திலிங்கம் அரியரட்ணம்



கீரிமலை வீதி, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், டச்சுவீதி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் அரியரட்ணம் நேற்று(07.01.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் மற்றும் புஸ்பரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கார்த்திகேசு மற்றும் இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சிவபாக்கியத்தின்(ஓய்வுபெற்ற தபால்அதிபர், சாவகச்சேரி), அன்புக் கணவரும், சஞ்சீவ்(மாவட்ட செயலகம். யாழ்), சதீஸ்(நகரசபை, சாவகச்சேரி), கார்த்திகா(பொறியியல் பீடம், மொறட்டுவ 4ஆம் வருடம்), சாம்பவி(தரம் 9 மாணவி, யாழ்.சாவ/இந்துக் கல்லூரி ) ஆகியோரின் அன்புத் தந்தையும், கணேசரத்தினம், விமலாதேவி, சந்திரகுமார், ராஜலஷ்சுமி(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சரஸ்வதி, பரமேஸ்வரி, கனகாம்பிகை, சிவயோகம் (யா.சா.இ.பா), செல்வராணி, கமலராணி, சசிகலா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(08.01.2013) செவ்வாய்கிழமை மாலை 4மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

டச்சுவீதி,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.





## ஏஞ்சல் சர்வதேச பாடசாலையின் சிறப்பம்சங்கள்

**E**xam Results: பரீட்சைப் பெறுபேறுகள் (Cambridge & Srilankan O/L &A/L)
**X**-tra Activities: விளையாட்டு, தொழில்நுட்பம், இசை, நாடகம், விவாதம்.
**C**haracter Formation: நற்பண்புகளை உருவாக்குதல்.
**E**nglish Communication: ஆங்கிலப் பேச்சுத்திறமை.
**L**eadership Development: தலைமைத்துவ அபிவிருத்தி

800 மாணவர்களைக் கொண்டு தமிழ்ப் பிரதேசங்களிலேயே மிகப் பெரிய பாடசாலையாகத் திகழ்கின்ற இப் பாடசாலையில் உங்கள் பிள்ளைகளையும் சேர்த்துக் கொள்ள ஒரு அரிய சந்தர்ப்பம்.

*3+, 4+, 5+ மற்றும் தரம் 1 6 ஐச் சேர்ந்த மாணவர்களுக்கான அனுமதிகள் தற்போது எமது மானிப்பாய் மற்றும் யாழ்ப்பாணப் பாடசாலைகளில் வழங்கப்படுகின்றன.*

ஆங்கிலத்தில் திறமை குறைந்த மாணவர்களுக்கு விசேட வகுப்புக்களும் வழங்கப்படுகின்றன.

தூர இடங்களில் இருந்து (சுண்டிக்குழி, ஊரெழு, சுழிபுரம்) இப்பாடசாலைக்கு போக்குவரத்து வசதிகளும் உண்டு.



ஆங்கிலத்தில் புலமையுள்ள, அனுபவம் வாய்ந்த தேர்ச்சி மிக்க ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர்.

விசேடமாக உயர்தர கணிதம் மற்றும் ஜேர்மன் மொழி பாடங்கள் கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றனர்.

"இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணத்தில் புதிதாக அமைக்கப்பட்டு 10.01.2013 முற்பகல் 10.00மணிக்கு திறக்கப்படவுள்ள எமது யாழ்ப்பாண பாடசலையின் புதிய கட்டடதிறப்பு விழாவிற்கு அனைவரையும் அன்பாக அழைக்கின்றோம்."





# மரண அறிவித்தல்

## திருமதி பத்மாதேவி சச்சிதானந்தம்



கொழும்பைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மாதேவி சச்சிதானந்தம் நேற்று (07.01.2013) திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - வாலாம்பிகை தம்பதியரின் அருமைப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு - மாணிக்கம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு சச்சிதானந்தத்தின் அன்பு மனைவியும், சரோஜினிதேவி, யோகரட்ணம், காலஞ்சென்றவர்களான அழகரட்ணம், யோகேந்திரன் மற்றும் இந்திராணிதேவி, லலிதாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சசிரேகா, சியாமளன் ஆகியோரின் அன்புத் தாயும், சண்முகதாசன், பத்மினி ஆகியோரின் அன்பு மாமியும், பரத்வாஜன், சஞ்சய், நிதுஷ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கியைகள் இன்று (08.01.2013) செவ்வாய்க்கிழமை 46, சிவன் கோயில் வீதி, திருநெல்வேலியிலுள்ள அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

46, சிவன் கோயில் வீதி,
திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழருக்கான வைகோவின் போராட்டத்துக்கு ஆதரவளிப்போம்

## பா.ஜ.க. முன்னாள் தலைவர் ஜெத்மலானி தெரிவிப்பு

சென்னை, ஜன.8

ஈழத்தமிழர்களுக்கான நீதிகோரும் வைகோவின் போராட்டத்துக்கு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள பாரதீய ஜனதாக் கட்சியின் முன்னாள் தலைவரும் மேல் சபை உறுப்பினரும் பிரபல சட்டத்தரணியுமான ராம் ஜெத்மலானி ஆதரவு தெரிவித்திருந்தார்.



மும்பாய் தமிழர் பாதுகாப்பு அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட 'தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலை - இதயங்களைத் தொடுகின்றது' என்ற பெயரில் வெளியிடப்பட்ட புத்தக மற்றும் இறுவட்டு நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'கடந்த பல பத்தாண்டுகளாக இலங்கையில் ஆட்சியிலிருந்த அரசுகளால் மேற்கொள்ளப்பட்ட அட்டூழியங்கள், துன்புறுத்தல்கள் மற்றும் இனப்படுகொலைகள் என்பனவற்றை காணொலிகளிலும் ஒளிப்படங்களிலும் பார்க்கும் போது மனதை உருக வைக்கின்றன. இவ்வாறான சித்திரவதைகள் மற்றும் இனப்படுகொலைகள் என்பன மனிதாபிமானத்துக்கு எதிரானவையாகும்.

ஈழத்தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரசால் கட்டவிழ்த்து விடப்பட்ட அநீதிகள் தற்போதும் தொடர்கின்றன. இது மனித உரிமைகளைப் பாதிக்கின்றன.

இதனை ஐ.நா. மற்றும் ஏனைய அனைத்துலக அமைப்புக்கள் கவனத்திற் கொள்ளவேண்டும்-என்றார்.

இதேவேளை தனது இறுதி மூச்சிருக்கும் வரை ஈழத் தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசால் இழைக்கப்படும் அநீதிகளை எதிர்த்து தனது போராட்டம் தொடரும் என்று ம.தி.மு.க தலைவர் வைகோ சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த நிகழ்வில் வெளியிடப்பட்ட புத்தகம் மற்றும் இறுவட்டின் பிரதிகள் மூத்த ஊடகவியலாளர்களான மகேஸ் மாத்ரா மற்றும் பிரிஸ்மோகள் பண்டே ஆகியோருக்கு வழங்கப்பட்டன. (வ)

## 16 நிமிடங்களில் 15 ஆயிரம் பேர் முரசு கொட்டி அஸாமில் சாதனை



அஸாம் மாநிலத்தில் 15 நிமிடங்களில் 15 ஆயிரம் நபர்கள் முரசு கொட்டி தேசிய சாதனை படைத்துள்ளனர். அஸாம் தலைநகர் கவுகாத்தியின் கிழக்கே உள்ள டிடாபார் என்ற நகரில் இந்தச் சாதனை நிகழ்ச்சி இடம்பெற்றுள்ளது. 14 ஆயிரத்து 833 நபர்கள் முரசு கொட்டும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். குறித்த சாதனை கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறலாம் என்று நம்பப்படுகின்றது.

இதற்கு முன்பு ஹொங்கொங்கில் 2002.07. 10 அன்று 102 பேர் 6 நிமிடங்கள் முரசு கொட்டி சாதனை படைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன.8

யாழ். போதனா வைத்தியசாலையின் ஸ்ரீ சாமுண்டிகா தேவி சமேத ஞான வைரவர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கிழமை காலை 8மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதன் ஆரம்பக் கிரியைகள் எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பூசை வழிபாடுகள் இடம்பெறும்.

எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9மணிமுதல் என்ணெய்க் காப்பு சாத்துதல் இடம் பெறும்.

மகா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 12 தினங்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறும். (3-14)



மீசாலை புத்தூர் சந்தி கமநல சேவைகள் நிலையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கமநல சேவைகள் வனஜீவராசிகள் நலத்துறை அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன பயிர் பாதுகாப்பு வேலிகள் அமைக்க யாழ்.மாவட்ட கமக்கார அமைப்புகளுக்கு முட்கம்பி சுருள்களை வழங்கினார். (ம-9)

## ஆஸியில் அகதி அந்தஸ்து நிராகரிப்பு; உயிரை மாய்த்தார் இலங்கை அகதி

ஆஸ்திரேலியாவில் அடைக்கலம் கோரிய நிலையில் சமூகத்துடன் வாழ அனுமதிக்கப்பட்டிருந்த இலங்கைத் தமிழர் ஒருவர், பேர்த்தில் வைத்து கடந்த சனிக்கிழமை தனது உயிரை மாய்த்துக் கொண்டார்.

இதனை ஆஸ்திரேலியக் குடிவரவுத் திணைக்களம் உறுதிசெய்துள்ளது. இவரது மனைவி மற்றும் பிள்ளைகள் இலங்கையில் தங்கியுள்ளார் என்று நம்பப்படுகிறது.

இந்த அகதியின் பெயரை வெளியிட மறுத்துள்ள ஆஸ்திரேலியக் குடிவரவுத் திணைக்களம், அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட நிலையில் அவர் இலங்கைக்குத் திருப்பியனுப்பப் படவிருந்தார் என்று குறிப்பிட்டுள்ளது.

இந்தநிலையிலேயே அவர் தனது உயிரை மாய்துக் கொண்டதாகத் தெரிய வருகின்றது. அவரின் உடல் ஆஸ்திரேலியாவில் தகனம் செய்யப்பட்டு அஸ்தி இலங்கைக்கு அனுப்பப்படவுள்ளது.

குறித்த அகதி தமது குடும்பத்தைப் பிரிந்த கவலையில் இருந்தார் என்று அயலவர்கள் தெரிவித்ததாக ஆஸ்திரேலிய இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்கிடையில் 76 பேருடன் மற்றும் ஓர் அகதிப் படகு நேற்று டார்வின் பகுதியை நோக்கி வந்து கொண்டிருப்ப தாக ஆஸ்திரேலிய கடற் படையினர் தெரிவித்துள்ளனர். (3)

## சத் சங்க நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன.8

கொழும்பு இராமகிருஷ்ணமிசன் மூத்த துறவி ஸ்ரீமத் சுவாமி இராஜேஸ்வரானந்தவினால் ஆன்மிக சத்சங்க நிகழ்வு நடை பெறவுள்ளது. நாளை புதன்கிழமை மாலை 5 மணிக்கு உரும்பி ராய்ச் சந்தி, இல 17, மருதனார் மடம் வீதி இராமகிருஷ்ண மிசன் நலன்புரி நிலையத்தில் இந்த நிகழ்வு நடைபெறும். (3)

## பருத்தித்துறை மதுபானசாலையை இடம் மாற்றுமாறு கோரிக்கை

வடமராட்சி, ஜன.8

பருத்தித்துறை நகரப் பகுதியில் பிரதான வீதியில் அமைந்துள்ள மதுபானசாலையால் மக்களின் வாழ்வியல் நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுவதாகக் கூறப்படுகிறது.

**மதுபானசாலைச் சுற்றாடல், சுகாதாரத்துக்கு கேடாகவும் மது பாவனையாளர்களின் கழிப்பிடமாகவும் மாறியுள்ளது.**

இந்த மதுபானசாலையை வேறு பொருத்தமான இடத்துக்கு இடம்மாற்றி உதவுமாறு பருத்தித்துறை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தக் கோரிக்கை மனு பருத்தித்துறை பிரதேச செயலாளர், பருத்தித்துறை மதுவரி அத்தியட்சகர், யாழ்ப்பாணம் மதுவரி அத்தியட்சகர், யாழ். அரச அதிபர், பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த மதுபானசாலை பல காலமாக இந்தப் பகுதியில் இருந்தாலும், தற்போது இதனால் பெரும் இடையூறு ஏற்படுகிறது.

வெற்று மதுப் போத்தல்களாலும், உடைந்த மது வெற்றுப்போத்தல் ஓடுகளாலும், வெற்று பியரின்களாலும் நிறைந்து இந்தப் பகுதி காணப்படுகிறது.

சுகாதாரத்துக்கு கேடாகவும் மதுபாவனையாளர்களின் கழிப்பிடமாகவும் இருந்து வருவதுடன் மதுபாவனையாளர்களது வார்த்தைகளால் மக்கள் பெரும் சிரமம் அடைகின் றனர்.

இந்த மதுபானசாலை கோயில், பாடசாலை, முஸ்லிம் பள்ளிவாசல் என்பனவற்றுக்கு மிக அருகில் அமைந் துள்ளது.

இது தற்போதைய மதுபானசாலை அமைவிட விதிகளுக்கு முரணாக அமைந்துள்ளது.

எனவே தற்போதைய சட்ட விதிகளுக்கு ஏற்ப இந்த மதுபானசாலையைப் பொருத்தமான வேறு இடத்துக்கு மாற்றி எமது பகுதி மக்களின் அன்றாட நடவடிக்கைகளின் இடையூறுகளைக் களையுமாறும் சமய கலாசாரங்களைப் பேணுமாறும் மக்களைப் பாதிப்பி லிருந்து காப்பதற்கு உதவுமாறும் வேண்டுகிறோம் என அந்தக்கோரிக்கை மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-8)

## உள்ளாடையில் மறைத்து தங்கம் கடத்திய இலங்கைப் பெண் கைது

உள்ளாடையில் மறைத்து வைத்து 13 லட்சம் மதிப்புள்ள தங்கத்தை கடத்திய பெண் சென்னையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கையில் இருந்து சென்னைக்கு நேற்று முன் தினம் காலை பயணிகள் விமானம் வந்தது. அதில் வந்த பயணிகளிடம் சுங்கத் திணைக்கள அதிகாரிகள் சோதனை செய்தனர்.

அதன்போது இலங்கையைச் சேர்ந்த பாத்திமாவின் மீது அதிகாரிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டது. அதையடுத்து பெண் அதிகாரிகள் பாத்திமாவை அழைத்துச் சோதனை செய்தனர்.

சோதனையின்போது உள்ளாடையில் 400 கிராம் எடை உள்ள தங்க பிஸ்கட்டுகள் மறைத்து கடத்தி வந்தது கண்டறியப்பட்டது.

அதையடுத்து சுங்கத் திணைக்கள அதிகாரிகள் குறித்த பெண்ணைக் கைது செய்தனர். (வ)

## எழுத்தாளரின் நினைவு நிகழ்வு

எழுத்தாளரும் கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத் தலைவருமான துரை ஆரோக்கியதாசனின் 33 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் பிறந்த நாள் நினைவு நிகழ்வும் கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தினரின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றது.

கத்தோலிக்க கலை இலக்கிய வட்ட செயலாளர் யோசப்பாலா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அஞ்சலி வழிபாட்டைத் தொடர்ந்து சிறப்புரைகள் இடம்பெற்றன.


தென்மராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீஸ்கந்த மூர்த்தி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சூ.சிறில், தீவக வலய கல்விப் பணிப்பாளர் தி.குயின்ரஸ் ஆகியோரின் சிறப்புரைகள் இடம்பெற்றன.

கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத் தலைவரின் மறைவையடுத்து புதிய தலைவராக தீவக வலய கல்விப் பணிப்பாளர் தி.குயின்ரஸ் தெரிவு செய்யப்பட்டார்.

நடப்பு ஆண்டில் துரை ஆரோக்கியதாசன் நினைவாக கல்வித்துறைப் போட்டிகள் மற்றும் கலை, இலக்கியத்துறை சார்ந்த கௌரவிப்பு என்பவற்றை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாக செயலாளர் தெரிவித்தார். (3-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# '5/5' கிரிக்கெட்டில் ஞானம்ஸ் சம்பியன்





வடமராட்சி, ஜன. 8

கரவெட்டி ஐங்கரன் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட 5 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் ஞானம்ஸ் அணி வெற்றி பெற்றது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை விக்னேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் ஞானம்ஸ் அணியை எதிர்த்து நியூபவர் அணிமோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஞானம்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூபவர் அணியினருக்கு ஆரம்பமே அதிர்ச்சி காத்திருந்தது. இதில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான கமலன் இரண்டு ஓட்டங்களுடன் வெளியேற, கிரிதரன் 9, பிரகாஸ் 14, செந்தூரன் மாத்திரம் ஆட்டடுமிழக்காமல் 24 ஓட்டங்களைப் பெற, அந்தஅணி 4 இலக்குகளை இழந்து 57 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் சுவேந்திரன் இரண்டு ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 2 இலக்குகளையும், சுதர்சன், குணதீபன் ஆகியோர் ஒவ்வொரு இலக்கினையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் அணி 4.3 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 58 ஓட்டங்களைப் பெற்று சம்பியன் பட்டத்தைத் தனதாக்கியது. இதில் சுகந்தன் ஒரு 6 ஓட்டம், இரண்டு 4 ஓட்டங்கள் அடங்கலாக 20 ஓட்டங்களையும், அனுசயந்தன் இரண்டு 6 ஓட்டங்கள், இரண்டு 4 ஓட்டங்கள் உட்பட 20 ஓட்டங்களையும் அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் நியூபவர் அணி சார்பில் நிபந்தன், செந்தூரன், பிரகாஸ் ஆகியோர் ஒவ்வொரு இலக்கினையும் கைப்பற்றினர். இந்தப்போட்டியின் ஆட்ட நாயகனாக ஞானம்ஸ் அணியைச் சேர்ந்த சுவேந்திரன் தெரிவு செய்யப்பட்டார்.(422)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 8

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகள்:-

**பி.ப. 3.30 மணி**

அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் எதிர் சுடரொளி விளையாட்டுக் கழகம்.

**பி.ப. 4.30 மணி**

அண்ணா சிலையடி இளைஞர் கழகம் எதிர் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம்.

★ ★ ★

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும் சாந்தன், யூட் கஸன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்குமாக நடத்தப்படும் 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடர் வைரவப் புளியங்குளத்திலுள்ள யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்றுவருகிறது.

இந்தச் சுற்றுப்போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெற இருக்கும் ஆட்டத்தில் இளந்தென்றல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து 786 விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

★ ★ ★

யாழ்ப்பாணம். ஜன.8

ஸ்ரீலங்கா கிரிக்கெட் நடத்தும் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான மாகாண மட்டக் கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை கொழும்பு முகேஸ் விளையாட்டுக் கழகத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் வடமத்திய மாகாண அணியை எதிர்த்து வடமாகாண அணி மோதவுள்ளது.

★ ★ ★

யாழ்ப்பாணம். ஜன.8

ஸ்ரீலங்கா கிரிக்கெட் நடத்தும் பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுப் பிரிவு, பிரிவு III இற்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு :-

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் எதிர் தெல்லிப் பழை மகாஜனக் கல்லூரி.

★ ★ ★

யாழ்ப்பாணம். ஜன.8

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் ஆண்களுக்கான கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரை நடத்தி வருகின்றது. யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் மின்னொளியில் நடைபெற்று வரும் இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

**மாலை 6 மணி**

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் எதிர் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம்.

**இரவு 7.30 மணி**

சண்டிலிப்பாய் இந்து விளையாட்டுக் கழகம் எதிர் ஹெலட் கோல்ட் விளையாட்டுக் கழகம்.

(ங-23)

## பருத்தி. உதைபந்து லீக் புதிய செயற்குழு



வடமராட்சி, ஜன. 8

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் 2013 ஆம் ஆண்டுக்கான நிர்வாகத் தெரிவு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை தேவரையாளி இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. இதில் 11 பேர் கொண்ட செயற்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

குறித்த செயற்குழு உறுப்பினர்களின் விவரம் வருமாறு-

தலைவர்- மு.வேதாபரணம், செயலாளர்- தி.வரதராஜன், உபதலைவர்கள்- வைத்தியர் கமலநாதன், எம்.நவநீதமணி, பொருளாளர்- எம்.நவநேசன், உப செயலாளர்- அ.அருளானந்தசோதி ஏனைய உறுப்பினர்கள்- க.ஸ்ரீஸ்கந்தராசா, உ.விநோத், க.கதிர்காமராஜ், இ.பரமதாஸ், கே.பிரசாந்.

(ங-422)

## தாச்சி அபிவிருத்திக்கு 'செய்லாப்ஸ்' நிதியுதவி

கைதடி, ஜன. 8

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் இந்த ஆண்டுக்கான புதிய நிர்வாகசபைத் தெரிவு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இணுவில் அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்துக்கு முன்பாகவுள்ள மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ். மாவட்டத் தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் உபதலைவர் க.தயாளன் தலைமையில் நடைபெற்ற இந்தவருடாந்தப் பொதுக் கூட்டத்தில் வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த தாச்சி விளையாட்டுக் கழகங்கள் பல பங்குகொண்டன.

இந்த ஆண்டுக்கான தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் தலைவராக கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த க.தயாளனும், செயலாளராக இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த வை.ஆனந்தஜெஸ்கரனும், பொருளாளராக அளவெட்டி பாரதி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த க.ஜினதாசும் சபையினரால் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் 16 பேர் கொண்ட நிர்வாக சபையும் இதில் தெரிவு செய்யப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான தாச்சி விளையாட்டை வடக்கு மாகாண மட்டத்தில் விரிவுபடுத்தி வளர்ப்பது எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அத்துடன் இந்த ஆண்டு தாச்சி விளையாட்டை யாழ்ப்பாணத்தில் பிரதேச செயலக ரீதியாக நடத்தி முன்னெடுக்க 'செய்லாப்ஸ்' (ceylabs) எனும் நிறுவனம் பெருமளவு நிதியை ஒதுக்கீடு செய்து அனுசரணை வழங்க முன்வந்துள்ளது. இந்த நிலையில் எதிர்வரும் மாதங்களில் பிரதேச செயலக ரீதியாக தாச்சிப் போட்டிகளை நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. (ங-288)

## கலந்துரையாடல் இன்று

யாழ்ப்பாணம், ஜன. 8

கால்டன் ஸ்போட்ஸ் நெற்வேக் நிறுவனத்தினரால் விளையாட்டு வீரர்களைத் தெரிவு செய்யும் வேலைத்திட்டம் தொடர்பான பயிற்சிமுகாம் ஒன்று விரைவில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

மேற்படி பயிற்சிமுகாம் தொடர்பாக யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர்கள், மற்றும் யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் விளையாட்டுக் கழக உறுப்பினர் என்போருக்கு இடையிலான கலந்துரையாடல் ஒன்று வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணியளவில் நடைபெறவுள்ளது. எனவே, இதில் தவறாது அனைவரையும் கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தின் உபதலைவி திருமதி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கம் கேட்டுக்கொண்டுள்ளார். (ங-422)

## கூடைப்பந்துச் சங்கத்துக்கு புதிய நிர்வாகம் தெரிவு



யாழ்ப்பாணம், ஜன. 8

யாழ். மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் 2013 ஆம் ஆண்டுக்கான நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டோர் விவரம் வருமாறு-

தலைவர் - செ.ரமணன், செயலாளர் - ரட்சகன், உப தலைவர்கள் - எழில்மோகன், தெய்வீகன், உபசெயலாளர் - ராஜசோபனா, பொருளாளர் - பவன், நிர்வாகசபை உறுப்பினர்கள் - எஸ்.சுதேஸ்குமார், கே.நாகேந்திரம், ராதை அருளம்பலம், பிரசன்னா, ராஜேஸ்வரன், பத்திராசிரியர் - அபிகரன். (ங-23)

## உதைபந்தாட்ட சேவையாளர்கள் கௌரவிப்பு

வடமராட்சியில் உதைபந்தாட்டத்துக்குச் சேவையாற்றிய 10 பேர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கினால் கௌரவிப்புச் செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வு யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ். அன்ரனிப்பிள்ளை தலைமையில் தேவரையாளி இந்துக் கல்லூரியில் மு.ப. 10 மணிக்கு நடைபெற்றது.

வடமராட்சியில் விளையாட்டு வீரர்களாகவும் பயிற்றுவிப்பாளர்களாகவும் உதைபந்தாட்ட நடுவர்களாகவும் கழகங்களின் ஆலோசகர்களாகவும் செயற்பட்டு வழிநடத்திச் சென்ற 10 பேரே இவ்வாறு தெரிவுசெய்யப்பட்டு கௌரவிப்புச் செய்யப்பட்டுள்ளனர்.

இதில் அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த கே.பாக்கியராசா, டயமன்ஸ் கழகத்தைச் சேர்ந்த எஸ்.கமலநாதன், சுடரொளி கழகத்தைச் சேர்ந்த என்.சுந்தரலிங்கம் (பீற்றர்), பொமர்ஸ் கழகத்தைச் சேர்ந்த இ.மெய்யழகன், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த ஆர்.இராசநாதன், நவசக்தி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எஸ்.செல்வராசா, சிவானந்தா விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எஸ்.அருமைத்துரை, நக்கீரன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எம்.வரதராசன், கண்ணகை விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எஸ்.வடிவேஸ்வரன், அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த கே.கணபதிப்பிள்ளை போன்றோரே கௌரவிக்கப்பட்டனர். (ங-422)

## சாந்தன்– யூட்கசன் வெற்றிக்கிண்ண உதைபந்தில் வென்றது ஈகிள்ஸ் அணி

வவுனியா, ஜன.08

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும் சாந்தன், யூட் கஸன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்குமாக நடத்தப்படும் 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடர் வைரவப்புளியங்குளத்திலுள்ள யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்றுவருகிறது.

இந்தச் சுற்றுப்போட்டித் தொடரில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் ஈகிள்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுள்ளது.

ஈகிள்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இளந்தென்றல் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஈகிள்ஸ் விளையாட்டுக் கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் இலகுவாக வெற்றி பெற்றது.

(ங-23)

## விண்மீன், ஞானமுருகன் வாகை

யாழ்ப்பாணம், ஜன. 8

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் விண்மீன் விளையாட்டுக் கழகம், ஞானமுருகன் விளையாட்டுக் கழக 'ஏ' அணி ஆகிய வெற்றி பெற்றுள்ளன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் விண்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக 'பி' அணி மோதிக்கொண்டது. இதில் விண்மீன் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. இதில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக 'ஏ' அணி கோல் மழை பொழிந்து 6:1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிற்சிப் போட்டியில் இந்திய 'ஏ' அணி வெற்றி

இங்கிலாந்து லெவன் அணிக்கு எதிரான பயிற்சிப் போட்டியில், இந்தியா ஏ அணி 53 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்தியா வந்துள்ள இங்கிலாந்து அணி, ஐந்து போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டி எதிர்வரும் 11ஆம் திகதி ராஜ்கோட்டில் நடைபெறவுள்ளது. இத்தொடருக்கு முன், இங்கிலாந்து லெவன் அணி, இரண்டு 50 பந்துப்பரிமாற்றப் பயிற்சி ஆட்டங்களில் பங்கேற்கிறது.

டில்லியில் நேற்று முன்தினம் நடந்த முதல் 50 பந்துப்பரிமாற்றப் பயிற்சிப் போட்டியில் இங்கிலாந்து லெவன், இந்தியா ஏ அணிகள் மோதின. போதிய வெளிச்சமின்மை காரணமாக தாமதமாக தொடங்கிய இப்போட்டி தலா 39 பந்துப் பரிமாற்றங்களாக குறைக்கப்பட்டது.

நாணயச்சுழற்சியில் வென்ற இங்கிலாந்து லெவன் அணியின் தலைவர் இயன் பெல், களத்தடுப்பை தேர்வு செய்தார்.

இந்தியா 'ஏ' அணி தலைவர் அபனவ் முகுந்த், முரளி விஜய் ஜோடி நல்ல ஆரம்பத்தை கொடுத்தது. இங்கிலாந்து பந்துவீச்சை எளிதாக சமாளித்த இவர்கள் இருவரும் அரைசதம் அடித்தனர். முதல் இலக்குக்கு 118 ஓட்டங்கள் சேர்த்த போது அபனவ் முகுந்த் (57) ஆட்டமிழந்தார். இவருக்கு ஒத்துழைப்பு தந்த முரளி விஜய் 76 ஓட்டங்கள் எடுத்தார்.

கேதர் ஜாதவ், தன்பங்கிற்கு அரைசதம் அடித்தார். இந்தியா ஏ அணி, நிர்ணயிக்கப்பட்ட 39 பந்துப் பரிமாற்றத்தில் 4 இலக்குகள்இளப்பிற்கு 224 ஓட்டங்கள்எடுத்தது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து லெவன் அணிக்கு 39 பந்துப்பரிமாற்றங்களில் 229 ஓட்டங்கள்என டக்வொர்த் லீவிஸ் முறைப்படி இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. சவாலான இலக்கை



விரட்டிய இங்கிலாந்து லெவன் அணியின் கெவின் பீற்றர்சன் (19), ஸ்ரீசாந்த் பந்தில் வீழ்ந்தார். அடுத்து வந்த சமித் படேல் (4), இயன் மோர்கன் (4), ஜாஸ் பட்லர் (6), கீஸ்வெட்டர் (0), வோக்ஸ் (3) சொற்ப ஓட்டங்களில் வெளியேறினர்.

நிதானமாக ஆடிய இங்கிலாந்து லெவன் அணித்தலைவர் இயன் பெல் சதம் அடிக்கும் வாய்ப்பை இழந்து 91 ஓட்டங்களில் ஆட்டமிளந்தார். இறுதியில் இங்கிலாந்து லெவன் அணி 175 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இந்திய ஏ சார்பில் அசோக் மனேரியா 3, மோஹித் சர்மா, சக்சேனா தலா 2, இலக்குகளை கைப்பற்றினர்.

டில்லியில் இன்று நடைபெறவுள்ள [illegible]வது [illegible] இங்கிலாந்து லெவன் டில்லி அணிகள் மோதுகின்றன.


# வோர்ன் - சாமுவேல்ஸ் மோதல்

அவுஸ்ரேலியாவின் மெல்போர்ன் நகரில் ஷேன் வோர்ன் தலைமையிலான மெல்போர்ன் அணிக்கும், ரெனிகிரேட்ஸ் அணிக்கும் இடையே இருபதுக்கு 20 போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

ரெனிகிரேட்ஸ் அணியில் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வீரரான மார்லோன் சாமுவேல்ஸ் இடம்பெற்றுள்ளார். முதலில் மெல்போர்ன் அணி துடுப்பாட்டம் செய்தது. அந்த அணி வீரர் டேவிட் ஹசி ஓட்டம் ஒன்றை எடுக்கும்போது சாமுவேல்ஸ் தடுக்க முயன்றதாகக் குற்றச்சாட்டு எழுந்தது. இது ஷேன் வோர்னுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது.

பின்னர் ரெனிகிரேட்ஸ் அணி களமிறங்கிய போது சாமுவேல்ஸ் துடுப்பெடுத்தாடிய போது ஷேன்வோர்ன், சாமுவேல்ஸைப் பார்த்து கெட்ட வார்த்தையால் திட்டினார். அத்தோடு நிற்காமல் களத்தடுப்புச் செய்யும்போது பந்தை சாமுவேல்ஸ் மார்பில் வீசினார். இதனால் ஆத்திரமடைந்த சாமுவேல்ஸ் துடுப்பு மட்டையை ஷேன்வோர்னை நோக்கி வீசி அவரைத் தாக்கப் பாய்ந்தார்.

அதன் பின்னர் இருவரும் வார்த்தைகளால் மோதிக்கொண்டனர். மைதான நடுவர்கள் தலையிட்டு இருவரையும் சமாதானம் செய்தனர்.




பின்னர் துரதிர்ஷ்டவசமாக மலிங்க வீசிய பந்து சாமுவேல்ஸின் நெற்றியைப் பதம் பார்த்தது. ரத்தம் கொட்டிய நிலையில் அவர் களத்தில் இருந்து வெளியேறினார். அவுஸ்ரேலியக் கிரிக்கெட் சாமுவேல்ஸுக்கும், ஷேன்வோர்னுக்கும் அபராதம் விதித்துள்ளது.

# இந்தியா-பாகிஸ்தான் போட்டியில் சூதாட்டம்..?

இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையே டெல்லியில் நடைபெற்ற 3ஆவ்து ஒருநாள் போட்டியில் சூதாட்டம் நடைபெற்றிருக்கலாமென இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் போல் நிக்சன் பரபரப்பு புகார் தெரிவித்துள்ளார்.

டெல்லி போட்டியில் 167 ஓட்டங்களை எடுத்த இந்திய அணி 157 ஓட்டங்களுக்குள் பாகிஸ்தான் அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது. இதனையடுத்தே இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரர் போல் நிக்சன், டுவிட்டரில், இந்த போட்டியில் பாகிஸ்தான் அணி வீரர்கள் வேண்டுமென்றே ஆட்டமிழந்ததாகவும், அதிரடி ஆட்டத்தில் ஈடுபடாமல், தடுப்பு ஆட்டத்தில் அவர்கள் ஈடுபட்டதாக அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். 36 ஓட்டங்களுக்கு இறுதி 6 இலக்குகளை இழந்த பாகிஸ்தான் அணியின் ஆட்டம் கேளிக்கை யாக இருந்ததாக அவர் கிண்டல் செய்துள்ளார்.

# சதமடித்தார் சச்சின்



பரோடா அணிக்கு எதிரான ரஞ்சி கிண்ண லீக் போட்டியில், மும்பை அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் சதம் அடித்தார்.

ரஞ்சிக் கிண்ணத் தொடரின் காலிறுதிப் போட்டிகள் இந்தியாவின் முக்கிய நகரங்களில் நடைபெற்றுவருகிறது. மும்பையில் நேற்றுமுன்தினம் தொடங்கிய காலிறுதியில் மும்பை, பரோடா அணிகள் விளையாடின.

முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை அணிக்கு வாசிம் ஜாபர், சச்சின் ஜோடி சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தியது. பரோடா பந்துவீச்சை பதம்பார்த்த இவர்கள் ஓட்டங்களைக் குவித்தனர். இதில் சச்சின் 10 நான்குகள் ஒரு சிக்ஸர் அடங்கலாக 108 ஓட்டங்களைப் பெற்றார். சமீபகாலமாக துடுப்பாட்டத்தில் தடுமாறிய சச்சின் சமீபத்தில் ஒருநாள் போட்டியில் இருந்து ஓய்வை அறிவித்தார். இந்த நிலையில் ரஞ்சி கிண்ணத் தொடரில் சதம் அடித்து, அடுத்து வரவுள்ள டெஸ்ட் தொடருக்கு தயாராக இருப்பதை வெளிப்படுத்தி உள்ளார்.

# இந்திய அணி அறிவிப்பு

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் பங்கேற்கும் இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. அணியில் பெரிய மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை.

இந்தியா வந்துள்ள இங்கிலாந்து அணி, ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் மூன்று போட்டிகள் முறையே ராஜ்கோட், கொச்சி ராஞ்சி மைதானங்களில் நடைபெறவுள்ளது. இப்போட்டிகளுக்கான இந்திய வீரர்கள் தேர்வு, இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை உறுப்பினர்கள், தேர்வுக்குழு தலைவர் சந்தீப் பட்டீல் முன்னிலையில், டில்லியில் நேற்று முன்தினம் நடந்தது.

சமீபகாலமாக மோசமாக ஆடிவரும் வரும் சேவாக் நீக்கப்பட்டுள்ளார். ஏற்கனவே இவர், பாகிஸ்தானுக்கு எதிரான கடைசி ஒருநாள் போட்டியிலும் விளையாடவில்லை. .

சேவாக்கிற்கு பதிலாக இளம் வீரர் புஜாரா தேர்வு செய்யப்பட்டுள்ளார். சமீபத்தில் இவர், முதல் ஒருநாள் போட்டி நடக்கவுள்ள ராஜ்கோட் மைதானத்தில் நடந்த ரஞ்சி கிண்ண லீக் போட்டியில், இரட்டை சதம் அடித்து அசத்தினார். தவிர இவர், இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்[illegible] செயற்பட்டார்.



பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்திய ரோகித் சர்மா நீக்கப்படுவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இவர், மீண்டும் தனது இடத்தை தக்கவைத்துக் கொண்டார். பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் தொடரில் விளையாடிய அதே வீரர்கள், இத்தொடருக்கும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். ஹர்பஜன் சிங், ஜாகிர் கான் உள்ளிட்ட சிரேஸ்ட வீரர்களுக்கு இடம் கிடைக்கவில்லை.

அணி விவரம்: டோனி (தலைவர்), கம்பீர், ரஹானே, புஜாரா, ஹோக்லி, ரோகித் சர்மா, [illegible], சுரேஷ் ரெய்னா, அஷ்வின், ரவீந்திர ஜடேஜா, அமித் மிஸ்ரா, [illegible], புவனேஷ்வர் குமார், அசோக் டிண்டா, ஷமி அகமது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பார்சிலோனா அணி வெற்றி



எஸ்பான்யல் அணிக்கு எதிரான ஸ்பானிஸ் லா லீகா உதைபந்தாட்டத் தொடரின் லீக் போட்டியில் பார்சிலோனா அணி வெற்றி பெற்றது.

ஸ்பெயினில் உள்ள கேடலோனியாவில் நடந்த இத்தொடரின் லீக் போட்டியில் பார்சிலோனா, எஸ்பான்யல் அணிகள் மோதின. இதன் முதல் பாதியின் 10வது நிமிடத்தில் பார்சிலோனா அணியின் சேவி ஒரு கோல் அடித்து தொடங்கி வைத்தார். சக வீரர் பெட்ரோ 15, 27வது நிமிடங்களில் தலா ஒரு கோல் அடித்து, அணியை வலுப்படுத்தினார். பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரர் மெஸ்ஸி, 29வது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பை, கோலாக மாற்றி னார். இதன் மூலம் முதல் பாதியில் பார்சிலோனா அணி முன்னிலை பெற்றது. இரண்டாவது பாதியில், இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்கவில்லை. முடிவில் பார்சிலோனா அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.


துரிதகதியில் துல்லியமான பதிப்பு

டிஜிற்றல் பிறிண்டிங்

கலர் பிறிண்ட்

ஒவ்செற் பிறிண்டிங்

உயர்தொழில் நுட்பத்திலான நவீனமுறை பதிப்பகம்.

ஸ்ரிக்கர், ஆட்போட், ஆட்பேப்பர், கொங்கொங் போட், தாள்களில் பிறிண்ட்

யாழில் Mகொழும்பு பிறிண்டேர்ஸ்

66A, கே.கே.எஸ் வீதி, (யாழ் இந்துக்கல்லூரி மிக அருகாமை)

"கல்விச்சமூகத்தோடு ஒன்றிய நிறுவனம்" தொ.பே: 0771974875



உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு

adyt@uthayan.com

0215671111



ABSOLUTE SPOKEN ENGLISH @ B C L L

Jaffna Nelliyady

077 1327 818, 021 373 4121


## மரண அறிவித்தல்

### திருமதி மார்க்கண்டு சந்தானலட்சுமி



புத்தூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மார்க்கண்டு சந்தானலட்சுமி கடந்த (05.01.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் மார்க்கண்டுவின் அன்பு மனைவியும், பாக்கியவதி, மகேஸ்வரி (சுவிஸ்), கமலேஸ்வரி (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, தமோதரம்பிள்ளை ஆகியோரின் பாசமிகு தாயும், குணசிங்கம், பாக்கியநாதன் (சுவிஸ்), வர்னேந்திரராஜா (ஜேர்மனி), காலஞ்சென்ற குணசேகரம் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2013) செவ்வாய்க்கிழமை புத்தூரிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2.00 மணிக்கு தகனக்கிரியைக்காக புத்தூர் வடக்கு கிந்திட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுன்னாகம் வீதி,
புத்தூர் மேற்கு, புத்தூர்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி பத்மநாதன் சிவயோகம்



திருமதி பத்மநாதன் சிவயோகம் (இளைப்பாறிய ஆசிரியை கிளி/வட்டக்கச்சி மகா வித்தியாலயம்) சரசாலை வடக்கு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் 146, கட்சன் வீதி வட்டக்கச்சி கிளிநொச்சியை நிரந்தர முகவரியாகவும் மூன்றாம் கட்டை ஆனைக்கோட்டையை தற்காலிக முகவரியாகவும் கொண்ட பத்மநாதன் சிவயோகம் நேற்று (07.01.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - மாணிக்கம் தம்பதியினரின் அன்பு மகளும், பத்மநாதனின் (ஓய்வு பெற்ற பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை லிகிதர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பரியாரியார் பொன்னுத்துரை தெய்வானை தம்பதியினரின் (மட்டுவில்) அன்பு மருமகளும், ஸ்ரீவாணி (ஆசிரியை கொக்குவில் இந்துக் கல்லூரி), செல்வரஞ்சினி, குகநாதன் (உதவி அரசாங்க அதிபர், கரைத்துறைப் பற்று முல்லைத்தீவு) ஆகியோரின் அன்புத் தாயாரும், திலீபன் (அதிபர், கிளி/முக்கொம்பன் அ.த.க பாடசாலை), கேதீஸ்வரன், சிவசாந்தினி (விரிவுரையாளர், விஞ்ஞானபீடம், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் மாமியும், சிவபாக்கியம், இராயேஸ்வரி காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை தங்கராசா ஆகியோரின் சகோதரியும் யோகம்மா, சிவபாக்கியம், சுந்தரலிங்கம், கமலாதேவி, பராசக்தி, பொன்னுத்துரை, காலஞ்சென்றவர்களான பொ.கந்தசாமி, கந்தசாமி ஆகியோரின் மைத்துனியும், நிமோசாயன், தசாயனன், பவசாரனி, தனுசாயினி, கௌசிகாந், பிரியதர்சன், சிந்தூரி, கேதாரகன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.01.2013) செவ்வாய்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3ஆம் கட்டை மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

தகவல்
பொ.பத்மநாதன் (கணவர்)


விற்பனையாகின்றன போட்டிப்பரீட்சை வழிகாட்டி நூல்கள்

தொகுப்பு
த.தவசேகர்

திறந்த பல்கலைக்கழகக்கல்வி டிப்ளோமா 200/=

முகாமைத்துவ உதவியாளர் 250/=

கிராமசேவகர் 350/=

பதிவாளர் (நாளை பெறலாம்) சகல போட்டிப்பரீட்சைகளுக்கான பொதுஅறிவு, பொது உளச்சார்பு 400/=

பூபாலசிங்கம், அன்னை, ஸ்ரீலங்கா, சிதம்பரப்பிள்ளை, கவிதா, ஜோதி புத்தகநிலையங்களில்

(C5422)



## வேலைவாய்ப்பு

# DGWHC



(Dreams Global Workers Helping Center (pvt) Ltd)

இந்த நிறுவனத்துக்கு 50-100 வேலை நபர்கள் தேவை.

**எதிர்பார்க்கப்படும் தகைமைகள் :**

க.பொ.த (O/L, A/L) பாடத்தில் சாதாரண சித்தி.
தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவு (IT Course).

ஆங்கில அறிவு இருத்தல் விரும்பத் தக்கது.

பொருத்தமானவர்கள் சுயவிவரக்கோவைமற்றும் உரிய தகைமைக்கான ஆவணங்களுடன் 09.01.2013, 10.01.2013 புதன்கிழமை, வியாழக்கிழமை காலை 9.00 யாழ்., தீவக வலிகாம பிரதேசத்தை சேர்ந்தவர்களுக்கு மட்டும் தேர்வு நடைபெறும்.

**முகவரி :**
DGWHC Interview Centre
Point pedro Road, Neervely
[Front of AVS Mill]

**மேலதிக தொடர்புகளுக்கு**
HOT Lines :
0779123068, 0776534514, 0776530772



## ஷாம்சன் இங்கிலீஷ் - 3 மாத பயிற்சி நெறி

உலகிலுள்ள எல்லாக் குழந்தைகளும் 2-4 வயதுக்குள் தம் தாய் மொழியைப் பேசப் பழகுகின்றன. 2 வருடத்துக்குள் குழந்தைகள் ஒரு மொழியைப் பேசப் பழகுகையில், பெரியவர்களான உங்களால் இன்று வரை ஏன் ஆங்கிலத்தைப் பேசப் பழக முடியவில்லை? இலக்கண வழியில் ஆங்கிலத்தைப் படித்தமையே காரணமாகும்.

எமது பயிற்சி வகுப்புகளில் தமிழ் தொடர்பற்ற ஒரு வழியில் (Method) மனதை ஆங்கிலத்தில் மட்டும் சிந்திக்க வைத்து அதை மற்றைய மாணவர்களுடன் பேச விடுவதன் மூலம் மிக எளிதாகவே எல்லோராலும் ஆங்கிலத்தில் பேசப் பயிற்சியளிக்கப்படுகிறது. இதன் மூலம் ஆங்கிலம் மனதுக்கு இயல்பாக்கப்படுகிறது.

அரச, தனியார் ஊழியர்கள், உயர்கல்வி மாணவர்கள் இம்முறை O/L எழுதியோர், இளைஞர், யுவதிகள் மற்றும் 12 வயதுக்கு மேற்பட்டோர் 12.01.2013 இல் தொடங்கும் புதிய பிரிவுகளில் இணைய முடியும்.

சனி, ஞாயிறு பிரிவுகள்
பிரிவு I : 08 - 10
பிரிவு II: 10 - 12
பிரிவு III : 01 - 03
பிரிவு IV: 03 - 05

பயிற்சிக் கட்டணம்:
3000.00

பயிற்சி நெறி முடிவில் Diploma Certificate வழங்கப்படும்.

SAAMSON ENGLISH

279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்ப்பாணம்.
0776214567



## வேலையாள் தேவை

யாழ். கொழும்பு பொதிகள்சேவையினை மேற்கொள்ளும் நிறுவனத்துக்கு அனுபவமிகுந்த, கொழும்பில்வசிக்கும் வேலையாள் தேவை.

தொடர்பு : 0778314201



FRENCH LANGUAGE CENTER

சர்வதேச தரத்திலான FRENCH வகுப்புக்களை வழங்கும் ஒரே ஒரு நிறுவனம்.

FRENCH CLASSES- பிரெஞ்சு வகுப்புகள்

FRENCH கற்க ஆர்வம் உள்ளோர் எவரும் கற்றுக்கொள்ளலாம்.
International Certificate இனை குறுகிய காலத்தில் பெறலாம்.

FOR BETTER FRENCH- 0779789456

ஆரம்பம்:12.01.2013 சனி 10.30am. no.23, palaly road, jaffna. (அப்பலோ வைத்திய சாலை முன்பாக ஆசிரமம்.)

16.01.2013 புதன் 3.30pm 181,1st Floor, Jaffna Road, Nelliyady. (சோதி வீதி முன்பாக உள்ள மாடியில்)



## றோயல் அக்கடமி

பிரதான வீதி சங்கானை (இலங்கை வங்கி அருகாமை)

A/L 2015

ஆரம்பம்: ஜனவரி 10 மாலை 3.00 மணி

வர்த்தகப்பிரிவு

- பொருளியல் : வரதராஜன்
- கணக்கீடு : பகீரதன்
- வணிகக்கல்வி : முரளி

கலைப் பிரிவு

- தமிழ் பத்மநாதன்
- புவியியல் பாபு
- இந்துநாகரிகம் ஸ்ரீஸ்
- நாடகம் அரங்கியலும் ரமேஸ்
- அளவையியல் E.S.பவன்
- அரசியல் சுகாஷ்
- வரலாறு R.S.சந்திரன்
- ஆங்கிலம்



## தொழிற் பயிற்சிகள்

**Mobile Phone Repairing**

சகல Mobile Phoneகளின் Hardware, Software திருத்தும் முறைகள் பயிற்சியளிக்கப்படும்.

Batch I சனி, ஞாயிறு (காலம்: 6 மாதம்)
Batch II கிழமை நாள்கள் (காலம் 3 மாதம்)

**Electronics**

சகல இலத்திரனியல் உபகரணங்கள் (T.V, Phone, DVD.Receiver) திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும். காலம்: 10 மாதம்.

**Ari - Conditioning**

சகல குளிர்சாதனங்கள் இயங்கும் முறை திருத்துதல் பயிற்சியளிக்கப்படும். காலம்: 6 மாதம்.

குறிப்பு: பயிற்சிகள் யாவும் முழுநேர செயன்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும். நிறுவனங்களில் தொழில் வாய்ப்பும் பெற்றுக்கொடுக்கப்படும்.

**சிங்கள வகுப்புகள்**

சிங்கள மொழியில் எழுத, வாசிக்க, கதைப்பதற்கு ஏற்றவாறு படிப்பிக்கப்படும்.

Batch: I சனி, ஞாயிறு 4.00pm - 5.30pm (காலம்: 6 மாதம்)
Batch : II கிழமை நாள்கள் 9.00am - 11.00am (காலம் 3 மாதம்)

ஆசிரியர் K.R. குரு

வகுப்புகள் ஆரம்பம்: 06.01.2013 (சனி, ஞாயிறு), 09.01.2013 (கிழமை நாள்கள்)

JAFFNA TECHNICAL INSTITUTE

மேலதிக விவரங்கள் நேரில்

இல.23, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 0718561654

கிளை: NEW ASIAN CENTER இல.56/15எ ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 0778240049


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.01.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.